செங்காந்தள் - வீரம்

பொன். கனகா

புத்தகக்குறிப்பு

9 789391 115197

செங்காந்தள் - வீரம்

பொன். கனகா

Title Verso

Title of the Book	:	**Chenkaantal - Veeram**
புத்தகத்தலைப்பு	:	**செங்காந்தள் - வீரம்**
Editor	:	**Pon. Kanaga**
First Edition	:	2022
Pages	:	117
Price	:	350
ISBN Number	:	978-93-91115-19-7

PUBLISHER : Pandian Educational Trust,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu.

PRINTER : Maheswari Publishers,
3/350, Veterinary Hospital Backside,
Virudhunagar – 626001,
Tamil Nadu.

பதிப்புரிமை / Copyright © 2022 கட்டுரையாளர்களுக்கு /Authors'

அனைத்து பதிப்புரிமையும் பெறப்பட்டுள்ளது. இப்புத்தகத்தின் எப்பகுதியும் பதிப்பகத்தின் அனுமதியின்றி அச்சிடப்படக்கூடாது.

All rights reserved. No part of this book should be transmitted to any type of printed material without proper permission from the publisher.

செங்காந்தள்

குறிஞ்சி நில தெய்வமான முருகனின் அடையாளப்பூ செங்காந்தள்பூ. போர் கடவுளான முருகன் பிறந்த கார்த்திகை மாதத்தில் இதன் பூ அகல்விளக்கு போல பூப்பதால் கார்த்திகைப்பூ என்று அழைக்கப்படுகிறது. *கரும்பு மூசாசச் சுடர்பூங் காந்தள் பெருந்தண் கண்ணி மிலைந்த சென்யன்* என்ற திருமுருகாற்றுப்படை பாடல் வண்டு இனங்கள் மொய்க்காத நல்ல மணமுடைய, நெருப்புப் போன்ற செந்நிறம் மற்றும் ஒளியுள்ள செங்காந்தள் பூவாலாகிய குளிர்ச்சியுடைய மாலையைச் சூடியவன் *முருகன்* என்று வர்ணிக்கிறது. தமிழர்களின் வீரம் மற்றும் கலாச்சாரப் பெருமையை அடையாளப்படுத்தும் செங்காந்தள் மலரின் பெயரையே இவ்ஆய்வுநூல் வரிசைக்குச் சூட்டுவதழில் அகமகிழ்வடைகிறேன்.

செங்காந்தளின் அழகிய முகை தன் இதழ் விரியும் வரை வண்டுகளைக் காத்திருக்க வைக்காமல் வண்டு வந்தவுடன் அதனை எதிர்நோக்கி தம் இதழை விரித்து தேனைத் தந்து வண்டினை மகிழ்ச்சிப்படுத்தும். செங்காந்தள் தன்னுள் உள்ள தேனை அடக்கி வைத்திருப்பது போன்று கல்தோன்றி மண்தோன்றா காலந்தொட்டே தமிழ்மொழி அரிய இனிய செய்திகளைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது.

தேனைப் பருக வண்டுகள் அணிவகுப்பது போல் தமிழ்ச் சமூகம் தமிழ்த்தேன் பருக தமிழ்ப்பேராசிரியர்கள், ஆர்வலர்கள் தங்கள் எழுத்தாற்றலை அர்ப்பணிக்க ஆயத்தமாயுள்ளனர். தமிழ் ஆர்வலர்களுக்காகத் துளிர்விடும் இந்நூல் பயணத்திற்குச் செங்காந்தள் என்று பெயரிட்டது சாலப் பொருந்தும்.

முருகன் என்றால் அழகன். அவன் கார்த்திகை மலரைச்சூடி பேரழகுடன் திகழ்வது போல் தமிழின் பல்வகை இலக்கிய செய்திகளைப் புதிய ஆய்வு நோக்கத்துடன் தமிழ்மொழியில் மாலையாகத் தொடுத்து வெளிக்கொணர்வதில் இச்செங்காந்தள் பயணம் இனிதே மலர்கிறது.

செங்காந்தள் புத்தகப் பகுதி

Editorial Board / ஆசிரியர் குழு

முனைவர் ஜெ. கவிதா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பூசாகோ அர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி,
கோயம்புத்தூர் - 641004, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: kavithamahendiran1973@gmail.com

முனைவர் தி. பரிமளா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி,
மதுரை – 625004, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: jeyamadhan05@gmail.com

முனைவர் செ. சாந்தி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்ய நாடார் ஜானகிஅம்மாள் கல்லூரி,
சிவகாசி - 626123, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: shanthi_sf607@anjaconline.org

முனைவர் ஆ. மகாலட்சுமி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி,
பொள்ளாச்சி - 642001, தமிழ்நாடு, இந்தியா.

மின்னஞ்சல்: mahalakshmia83@gmail.com

முனைவர் நா. குமாரி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி,
வேலூர்-6, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: jeevikumarioct31@gmail.com

முனைவர் சீ. விமல்,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
மதுரைக்கல்லூரி
மதுரை, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: vimal.vanji2015in@gmail.com

முனைவர் ப. சசிரேகா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
குரு நானக் கல்லூரி,
சென்னை – 600042, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல் முகவரி: sasirekatamil05@gmail.com

முனைவர் த. மகேஸ்வரி,
பாண்டியன் கல்வி அறக்கட்டளை,
விருதுநகர் – 626001. தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: dmakesh88@gmail.com

முனைவர் மு. சுமதி,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,

ஸ்ரீ வித்யா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
விருதுநகர், தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: sumathisanjay67@gmail.com

பொன். கனகா,
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
வ. உ. சிதம்பரம் கல்லூரி,
தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.
மின்னஞ்சல்: pon9514425928@gmail.com

ஆசிரியர் குழு பணி விவரம்

இந்த சிறப்பிதழ் குழு, (எடிட்டோரியல்) நேர்மையான பதிப்பு நெறிமுறைகளின் படி அறிவார்ந்த கட்டுரைகளை நெறிமுறைக் கொள்கைகளுடன் தொகுத்துள்ளது. இது சமர்ப்பித்தல், கருத்துத் திருட்டு சரிபார்ப்பு, திருத்தங்கள், சக மதிப்பாய்வு செயல்முறை, (டபுள் பிளைண்ட்), பெரிய திருத்தங்கள் அல்லது சிறிய திருத்தங்கள், பரிந்துரைகள் மற்றும் திருத்தம், ஏற்பு, மூல கோப்பு தயாரித்தல் மற்றும் இணையதள தயாரிப்பு மற்றும் வெளியீடு ஆகியவற்றை உள்ளடக்கியது.

Editorial Work Flow Details

This Editorial committee curated the scholarly articles with ethical princples according to the norms of the Editorial work flow. It contains of submission, plagiarism check, correction, peer review process, (Double Blind), major corections or minor corrections, suggestions and rectifications, acceptance, copy editing and production and publication online.

மதிப்புரை

உலகில் உள்ள ஒவ்வொரு உயிரினத்தின் வாழ்க்கையும் காதலும் வீரமும் கலந்த கலவையே. தமிழ் இலக்கியங்கள், வீரயுக காலம் எனப்படும் சங்ககாலத்தில் வாழ்ந்த பண்டைய தமிழ் மக்களின் வீரத்தினைப் பல்வேறு கோணங்களில் முன்வைத்துள்ளன. அவற்றை ஆராய்ந்து வெளிப்படுத்தும் நோக்கில் வீரம் என்னும் இப்புத்தகப் பகுதி அமைந்துள்ளது. இதில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள் அனைத்தும் நேர்த்தியான ஆய்வியல் முறைகளில் இடம்பெற்றுள்ளது.

சங்க இலக்கியங்களில் போரியல் வாழ்வு என்னும் தலைப்பில் முனைவர் க. உமாமகேஸ்வரி அவர்கள் எழுதிய ஆய்வுக்கட்டுரை, சங்க இலக்கியங்கள் முன்வைக்கின்ற போர் தொடர்பான செய்திகளை ஏற்ற மேற்கோள்களுடன் ஆய்வியல் நோக்கில் முன்வைக்கின்றது. பண்டைய காலத்தில் தமிழர்கள் வீரத்திற்கும் போருக்கும் தங்களது வாழ்வில் எவ்வாறெல்லாம் முக்கியத்துவம் கொடுத்து வாழ்ந்துள்ளனர் என்பதை சங்க இலக்கியங்கள் வழி ஆய்வாளர் எடுத்துரைக்கிறார். புறத்திணைகள், போர் அறங்கள், விதிகள், போரியல் கூறுகள், ஆகிய செய்திகளைத் தொகுத்து வெளிப்படுத்தியுள்ளார்.

சங்ககாலத் தலைவனின் சிறப்பிற்குக் காரணம் அவனது ஆற்றல்மிகு வீரம் என்ற முடிவை ஆய்வு முன்வைக்கின்றது. பண்டைத் தமிழரின் வீரத்தை வெளிப்படுத்தும் வகையில் இவ்வாய்வு அமைந்துளது சிறப்பிற்குரியது.

முனைவர் நா. குமாரி எழுதிய **புறநானூற்றில் மகளிர் வீரம்** என்னும் ஆய்வுக்கட்டுரை, சங்க இலக்கிய நூலாகிய புறநானூற்றின் வழி, சங்ககால மகளிரின் வீரத்தினை நேர்த்தியான அடிக்குறிப்புகளுடன் விளக்குகின்றது. இல்லத்து மகளிரான தாய், மனைவி, மகள் ஆகியோரது வீர உணர்வுகளாகப் புறநானூறு முன்வைக்கின்ற கருத்துக்களை மிகவும் நேர்த்தியாக தொகுத்து வகுத்து வழங்கியுள்ளார். ஆண்களின் வீரத்திற்கு மட்டும் முக்கியத்துவம் என்றில்லாமல் சங்ககாலப் பெண்களும் வீரத்தின் விளைநிலமாக இருந்துள்ளார்கள் என்பதை வெளிப்படுத்தும் நோக்கில் இவ்வாய்வு அமைந்துள்ளது பாராட்டுதற்குரியது.

சங்க இலக்கியங்களில் வெளிப்படும் தமிழர்களின் வீரம் என்னும் தலைப்பிலான முனைவர் ப. சசிரேகா அவர்களின் ஆய்வுக்கட்டுரை, தமிழரின் வீரப்பண்பை வெளிபடுத்துகின்ற நோக்கில் அமைந்துள்ளது. அரசர்களின் போர் அறங்களை அழகுறத் தக்க சான்றுகளுடன் விளக்கியுள்ளார். போரினில் இறந்த

வீரர்களின் வீரத்தைச் சிறப்பிக்கும் நோக்கில் எடுக்கப்பட்ட நடுகல் பற்றியும், வீரத்தை வெளிப்படுத்தும் விளையாட்டான ஏறுதழுவுதல் பற்றியும் பல நுண்ணிய கருத்துகளை ஆராய்ந்து எடுத்துரைத்துள்ளது சிறப்பு.

புறநானூற்றில் பெண்பாற் புலவர்களின் வீரம் என்னும் தலைப்பிலான ப. ராகவி அவர்களின் ஆய்வுக்கட்டுரை, சங்க இலக்கிய பேழை எனப்படும் புறநானூற்றில் இடம்பெற்றுள்ள பெண்பாற் புலவர்களின் புலமை, வீரம், அறிவு ஆகியவற்றை சிறப்பாகப் பட்டியலிட்டுள்ளது. ஆய்வாளர் சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் தங்களது புறவாழ்க்கையில் வெளிப்படுத்திய ஆற்றல்களையும், கடைபிடித்தொழுகிய அறங்களையும் நன்முறையில் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார்.

பல்வகை நுண்ணிய ஆய்வுகள் மூலம் தமிழ் மொழியின் பெருமையை உலகளவில் உயர்த்திடச் செய்ய அயராது உழைத்துக் கொண்டிருக்கும் அனைத்து ஆய்வாளர்களுக்கும் தமிழ் ஆர்வலர்களுக்கும் பேராசிரியப் பெருமக்களுக்கும் உளம்நிறைந்த வாழ்த்துக்கள்.

நன்றி.

பொன். கனகா

உள்ளடக்கம்

வ. எண்	தலைப்பு	ப. எண்
1.	சங்க இலக்கியங்களில் போரியல் வாழ்வு முனைவர் க. உமாமகேஸ்வரி	1-38
2.	புறநானூற்றில் மகளிர் வீரம் முனைவர் நா. குமாரி	39-52
3.	சங்க இலக்கியங்களில் வெளிப்படும் தமிழர்களின் வீரம் முனைவர் ப. சசிரேகா	53-78
4.	புறநானூற்றில் பெண்பாற் புலவர்களின் வீரம் ப. ராகவி	79-117

War Tradition in Sangam Literatures

Dr. K. Uma Maheswari, Assistant Professor of Tamil, PSGR Krishnammal College for Women, Coimbatore, Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0000-0003-4814-7661
DOI: 10.5281/zenodo.11096061

Abstract

Love and valor were admired in the Sangam period. Heroism is the basis of love. Courtesy is a discipline. Ethnology deals in detail with the methods and norms of warfare of the ancient Tamils. Battlefield rules were formulated to promote chivalry. Sangam kings excelled in valour. He who conquers the valor of the king is also famous. If not for him, we would have won and the loser will be praised. The first act of war is to dispose of the unfit for war in the enemy country when the two great ministers consider it warlike. The event is a martial art from ancient times. It is my duty to raise my son. It is the father's duty to make him virtuous. It is the duty of the blacksmith to make the tools he wants. It is the duty of the nation's Vendan to teach virtue. Ponmudiar has sung the theme song "It is the duty of a hero to kill male elephants". The final victory of the war must be one of the two warring parties winning. Once they are successful, they celebrate their happiness and rejoice. He will distribute the goods recovered from the enemy country. After dividing like that, he will cheat and have fun. They take up the work of Murugan who gave victory and perform frenzy. At the end they will express their drinking pride. This can be clearly felt from the

 ISBN Number: 978-93-91115-19-7

tradition among Tamil scholars of praising the Sanga period as a heroic period.

Keywords: Sangam Times, Bravery, War, Life.

References

[1] Balasubramanian, K. V. *Purananuru Moolamum Uraiyum*, New Century Book House, Chennai, 2004.

[2] கோவிந்தன், கா. பண்டைத்தமிழர் போர்நெறி. ராமையா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2011.

[3] Irā.Ceyapāl. *Akanāṉūṟu Mūlamum Uraiyum*, New Cenrury Book House, Chennai, 2004.

[4] Iḷampūraṇar (Urai), *Tolkāppiyam* (Poruḷatikāram), Kaḻaka Veḷiyīṭu, Cheṉṉai, 1967.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

சங்க இலக்கியங்களில் போரியல் வாழ்வு

முனைவர் க. உமாமகேஸ்வரி, தமிழ் உதவிப்பேராசிரியர், பூசாகோஅர கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி, கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0003-4814-7661
DOI: 10.5281/zenodo.11096061

ஆய்வுச் சுருக்கம்

சங்ககாலத்தில் காதலும் வீரமும் போற்றப்பட்டது. காதலுக்கு அடிப்படையாக வீரப்பண்பே அமைந்தது. புறத்திணை என்பது ஓர் ஒழுக்கம். பண்டைத் தமிழர்களின் போரியில் முறைகளையும் நெறிகளையும் புறத்திணையியல் விரிவாகப் பேசுகிறது. வீரப்பண்பை மேம்படுத்துவதற்குப் போர்க்கள விதிமுறைகள் வகுக்கப்பட்டன. சங்ககால மன்னர்கள் வீரத்தில் சிறந்து விளங்கினர். மன்னனது வீரத்தை வென்றவனும் புகழ்வான். அவன் இல்லாவிட்டால் வெற்றி பெற்றிருப்போம் எனத் தோற்றவனும் புகழ்வான். இருபெரும் வேந்தர்கள் போர்புரியக் கருதும் பொழுது பகை நாட்டிலுள்ள போருக்குப் பொறாத உயிர்களை அப்புறப்படுத்துவதே போரின் முதல் நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சி பண்டைக்காலத்திலிருந்து வழக்கிலிருந்து வரும் ஒரு போர் அறமாகும்.

மகனைப் பெற்று வளர்த்தல் என்னிடம் உள்ள கடமை. அவனை நற்பண்புகளால் நிறைந்தவனாக

 ISBN Number: 978-93-91115-19-7

ஆக்குவது தந்தையின் கடமை. அவனுக்கு வேண்டும் வேல் முதலிய படைக்கருவிகளைச் செய்து தருதல் கொல்லனின் கடமை. நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது நாடாளும் வேந்தனின் கடமை. விளங்கும் ஆண்யானைகளைக் கொன்று வருதல் வீரமகனுக்குரிய கடமையாகும் என்னும் கருத்தமையப் பாடலைப் பாடியுள்ளார் பொன்முடியார். போரின் இறுதி வெற்றி, போர் புரிகின்ற இரு பகுதியினருள் ஒருவர் வெற்றி பெற்றுத்தான் ஆக வேண்டும். அவ்வாறு வெற்றி பெற்றவுடன் தங்களின் மகிழ்ச்சியைக் கொண்டாடி மகிழ்வர். பகை நாட்டிலிருந்து மீட்டுவந்த பொருட்களைப் பங்கிட்டுக் கொடுப்பர். அவ்வாறு பங்கிட்ட பின் கள்ளுண்டு களித்தாடுவர். வெற்றியைக் கொடுத்த முருகனுடைய வேலைக் கைக்கொண்டு வெறியாட்டு நிகழ்த்துவர். இறுதியில் தங்களின் குடிப்பெருமையை எடுத்துரைப்பர். சங்ககாலத்தை வீரயுகக் காலம் என்று போற்றும் மரபும் தமிழ் ஆய்வாளர்களிடையே உள்ளத்தினின்று இதனைத் தெளிவாக உணரலாம்.

குறிப்புச்சொற்கள்:சங்ககாலம், வீரம், போர், மரபு, வாழ்வு.

முன்னுரை

சங்ககாலத்தில் காதலும் வீரமும் மிக உயர்ந்த பொருள்களாக விளங்கின. காதலுக்கு அடிப்படையாக

வீரப்பண்பே போற்றப்பட்டது. சங்ககாலத்தை வீரயுகக் காலம் என்று போற்றும் மரபும் தமிழ் ஆய்வாளர்களிடையே உள்ளத்தினின்று இதனைத் தெளிவாக உணரலாம். பண்டைத் தமிழர்களின் போரியல் வாழ்வில் பல்வேறு அறநெறிகள் பின்பற்றப்பட்டுள்ளன. அவர்கள் போரில் ஈடுபட்ட திறம் குறித்தும், போரியல் வாழ்க்கை முறை குறித்தும், போரில் பின்பற்றப்பட்ட போரியல் விதிகள், நம்பிக்கைகள், வழக்காறுகள், போர் செய்யும் முறை குறித்தும் புறப்பாடல்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. போரியல் வாழ்வின் ஒவ்வொரு நிகழ்விலும் சிறப்புற விளங்கியுள்ளன. சங்க இலக்கியங்களில் புலப்படுத்தப்படும் போரியல் வாழ்வினை இப்பகுதியில் ஆராயப்படுகின்றது.

புறப்பொருள்

புறம் என்ற சொல்லுக்குப் பல பொருள்கள் வழக்கில் இருப்பினும் சங்க இலக்கியத்தில் குறிக்கப்படும் புறம் என்ற சொல்லுக்கு வீரம், புறத்திணை என்ற பொருள்களே ஏற்றவையாக உள்ளன. புறத்திணை என்பது ஓர் ஒழுக்கம் என்றும், வெட்சி. வஞ்சி, காஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என ஏழு வகையாகவும் (தொல்) இவற்றுடன் கரந்தையும் நொச்சியும் சேர ஒன்பது வகையாகவும் (பன்னிருபடலம்) இவ்வொன்பதுடன் பொதுவியல், கைக்கிளை,

ISBN Number: 978-93-91115-19-7

பெருந்திணை மூன்றும் சேரப் பன்னிரு வகையாகவும் (புறப்பொருள் வெண்பாமாலை) பிரித்துக் கூறப்படும் புறப்பொருள் குறித்து ஒழுக்கங்கள் என்று கூறப்படுகின்றது.

புறப்பொருளாவது மறஞ்செய்தலும், அறஞ் செய்தலும் ஆக்கான் அவற்றான் ஆய பயன் பிறர்க்குப் புலனாதலின் புறம் என்றார் என்று உரை வகுத்துரைக்கின்றார் இளம்பூரணர்.நச்சினார்க்கினியர் அகத்திணையை விளக்கி புறத்திணையை விளக்காது இதனை ஒழிந்தன புறம் என்பார். புறம் என்பது ஆகு பெயராய்ப் பாலுணர்ச்சியாகிய அகமல்லாத பிற வாழ்வியல் எண்ணக்கூறுகளையும் செயல்பாடுகளையும் ஒருங்கு உணர்த்தும் சொல்லாகும்" என்பார் கு.வெ. பாலசுப்பிரமணியம். புறம் இலக்கண நூல்கள் காதல் வாழ்க்கையை அஃதாவது உள்ளம் ஒன்றிய இன்பியல் வாழ்வியல் அகம் என்ற வரையறுத்து விளக்குவது போன்று அறம், பொருள், பற்றிய சமூக வாழ்வைப் புறம் என்று வரையறுத்து விளக்குகின்றன. அகம், புறம் என்ற இரண்டும் மக்களின் வாழ்க்கையை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளன.

புறம் என்ற சொல்லுக்குப் பல்வேறு பொருள்கள் வழக்கில் இருப்பினும் வீரம், புறத்திணை ஆகிய பொருள்களே சங்க இலக்கியத்தில் பொருள்

ISBN Number: 978-93-91115-19-7

கொள்ளத்தக்கவையாக உள்ள. புறத்திற்கு விளக்கம் கூற முனைந்த மு. இராகவையங்கார், “புறமாவது அகம் போல ஒத்த அன்புடையார்வரால் மட்டுமன்றி, எல்லோராலும் துய்த்து உணரப்படுவதும், இஃது இவ்வாறிருந்தது எனப் பிறர்க்குப் புலப்படக் கூறப்படுவதாகும். அவை பெரும்பாலும் அறமும் பொருளுமாம்” என்று விளக்குகின்றார். ச.வே. சுப்பிரமணியன் “பண்டைக் காலம் முதலே பாடப்பெற்று வரும் இருபெரும் அடிப்படைப் பொருண்மைகளில் புறம் இரண்டாவது இடத்தைப் பெறுகின்றது. மனிதனின் அகவாழ்க்கையில் உட்படாத பிற நிகழ்வுகள். உணர்வுகள் அனைத்தும் புறமாகின்றன. புறப்பொருள் புறத்திணைச் செய்திகளான போரையும், தலைவனின் வீரம், கொடை முதலிய புகழ்ச்சிக்குரிய பண்புகளையும் வெளிப்படுத்துகின்றது” என்று குறிப்பிடுகின்றார். இவற்றையெல்லாம் ஒன்றாகத் தொகுத்துக் காணும் போது, அகமாகிய காதல் அல்லாத புறஉலகுக்கு வெளிப்படையாகத் தெரியும் அன்றாட வாழ்வு எனப் பொதுவாகவும், சிறப்பாகப் போர், தொழில், ஈட்டல், கொடை, அறம் ஆகியன பற்றியது புறம் என்லாம்.

பண்டைத் தமிழர்களின் போரியில் முறைகளையும் நெறிகளையும் புறத்திணையியல் விரிவாகப் பேசுகிறது. பண்டைத் தமிழர்களின் வீரம், புகழ், வெற்றி

 ISBN Number: 978-93-91115-19-7

முதலியவற்றை அறிந்து கொள்வதற்குப் புறத்திணையியல் பெருதவி புரிவதாய் அமைந்துள்ளது. அகத்திணையியல் இல்வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்றதென்றால், புறத்திணையியல் சமுதாயத்தைப் பற்றிப் பேசுகின்றது என்பர் அறிஞர். சமுதாயங் சார்ந்த மக்கள் வாழ்வியலைச் சுட்டும் பகுதியாக புறத்திணையியல் அமைந்துள்ளது. அகத்திணையாகிய வாழ்வியலுக்குத் துணை செய்யும் கல்வி, பொருள், அரசியல் முதலிய புறத்திணையின் பாற்படும். புறத்திணை பண்டைக் காலத்தில் தமிழ்நாட்டில் நிலவிய வீரச்செயல்களைப் பெரும்பான்மையாகவும், அரசியல், கொடை முதலியவற்றைச் சிறுபான்மையாகவும் குறிப்பிடுகிறது. இவ்வியல் தொல்காப்பியப் பொருளதிகாரம் புறத்திணையியலுக்கு புலவர் குழந்தை கண்டறிந்த உரை நலத்தினை ஆராய்கிறது. புறமாவது ஒத்த அன்புடையார் தாமேயன்றி, எல்லோராலும் உய்த்துணரப் பெறுவதும், இஃது இவ்வாறு இருந்தது என்று பிறர்க்குக் கூறப்படுவதுமாகிய ஒழுகலாறாகும். புறப்பொருள் பெரும்பாலும் அறமும் பொருளும் பற்றியே நிகழும்.

வெட்சித்திணை கூறுகள்

வெட்சித்திணை போரியல் வாழ்வின் முதல்நிலையக் கூறும் பகுதியாகும். வெட்சிப்பூவால்

 ISBN Number: 978-93-91115-19-7

செய்யப்பட்ட மாலையை அணிந்து கொண்டு போருக்குச் செல்வது வெட்சி எனப்பட்டது. வெட்சி மாலை சூடிப் பசுக்கூட்டமாகிய ஆநிரையைக் கைக்கொள்ளும் செயலுக்குச் செல்வதால் இதற்கு வெட்சி என்னும் பெயரேற்பட்டது. வெட்சி என்னும் போர்முறை ஏற்பட்டிருத்தலுக்கான காரணங்களை நா.இராமையா, ஓர் அரசன் அடுத்த அரசன் மேல் போர்தொடுப்பதென்பது திடீரென்று நடந்தால் அது அறமாகாது. போருக்கு வருவான் என்று அடுத்த அரசன் அறிந்த பிறக போர் செய்யப் போவது போர் அறமாகும்.

எனவே, போர் முன்னறிவிப்பாகப் பகையரசனின் ஆநிரைகளைக் கவர்ந்து வரும்படி அரசன் ஆணையிடுவதுண்டு. போர்ப்பயிற்சியுள்ள போர் வீரர்களை அனுப்பியே அரசன் ஆநிரைகளைக் கவர்ந்து வரச்செய்ய வேண்டும். களவில் கவர்ந்து வராமல் வெளிப்படையாகச் சென்றால் அது போராக மாறிவிடும். முலைச்சாரலில் மேயவிருக்கும் நிரையைக் களவில் கவர்தல் போராகாமல் போர் அறிவிப்பாக அமைந்துவிடும். ஆநிரை கவர்தலை ஆகோள் என்பர். ஆக்கனைக் களவில் கவர்ந்து வந்து அவற்றிற்கு ஏதும் துன்பம் ஏற்படாமற் பாதுகாக்க வேண்டும். பகையரசன் பகைவனே தவிர, பசுக்கள் பகையுடையனவல்ல. கவர்ந்து வரும்பொது அவற்றை நன்கு பேண வேண்டும் என்னும்

ISBN Number: 978-93-91115-19-7

போர் அறமும் காக்கப்பட்டுள்ளது. காதல் பற்றிய அகவொழுக்கங்களும் குறிஞ்சி முதலாக அமைவது போல,பார் பற்றிய எல்லா நிகழ்வுகளும் வெட்சி முதலாக அமைந்திருக்கும். குறிஞ்சி ஒழுக்கம் களவில் நிகழும். அது போலவே வெட்சி ஒழுக்கமும் களவில் நிகழும். களவு நிகழும் காலமும் இடமும் ஒன்றாக வருதலைக் காணலாம். இரண்டும் குறிஞ்சி நிலமான மலைச்சாரலில் நிகழும். அம்மலைச்சாரலே ஆநிரை கோடலுக்கு உரிய இடமாகும். குறிஞ்சிக்குரிய ஒழுக்கம் நள்ளிரவில் நிகழும். அதே போல் வெட்சி ஒழுக்கமும் நள்ளிரவில் நிகழும்.

வெட்சியின் இலக்கணம்

தொல்காப்பியர் வெட்சித்திணை, வேந்தனால் விடப்பட்ட முனை ஊரகத்துள்ளார் வேற்று நாட்டின்கண் கனவினானே ஆவைக் கொண்டு பெயர்ந்து பாதுகாக்கும் செயற்பாட்டினைக் கூறுகின்றது. ஆநிரைகளைக் கவர்வதும் மீட்பதுமாகிய இருசெயல்களையும் இரு பிரிவுகளாக்கிக் காட்டுகின்றார் தொல்காப்பியர். வெட்சித்திணையின் பொதுவிலக்கணத்தைத் தொல்காப்பியர்,

வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந் தோம்பல் மேவற் றாகும்

என்று குறிப்பிடுகிறார். இந்நூற்பாவிற்கு "அரசனால் விடப்பட்டுப் பகைப்புலங் காத்திருந்த மறவர்கள்,

ISBN Number: 978-93-91115-19-7

பகைவர் நாட்டிற் சென்று நிரை காவலர் அறியாமற் களவாக, ஆநிரையைக் கவர்ந்து வந்து பாதுகாத்தலை வெட்சித்திணை பொருந்துதலை உடையதாகும்” என விளக்கம் தருவார் புலவர் குழந்தை. மேலும் தொல்காப்பியக் காலத்தில் போர் ஒழுக்கநெறிகளைக் கொண்டே நிகழ்த்தப் பெற்றது என்பது அவரது குறிப்புரையாகும். இருபெருவேந்தர் போர் செய்யக் கருதினால், ஒருவர் மற்றவர் நாட்டு வாழும் ஆவும் பார்ப்பாரும் பெண்டிரும் குழந்தைகளும் நோயாளரும் முதலிய தீங்கு செய்யத் தகாதவரை யான் போர் செய்ய வருகின்றேன். நீங்கள் விலகிக் கொள்ளுங்கள் என முன்னறிவித்து அகற்றிப் பொருதலும், போதற்கு அறிவில்லாத ஆவினைக் கனவாகத் தாமே கொண்டு வந்து பாதுகாத்துப் பொருதலும் பண்டையோர் போர் முறையாகும். அவ்வாறு கொண்டு வந்து பாதுகாத்தலையே ஆதந்தோம்பல் என்றார். இதுவே போர் தொடங்கற்கு ஏதுவாகும்.

பார்ப்பார் ஒழுக்கத் தொழில் புரிவோராதலால் விலக்கத் தக்கவராயினர். இதுவே பழந்தமிழரின் அறத்தலைப் பிரியாப் போர்முறைக்கு ஏற்ற சான்றாகும். நிரை கவர்ந்து வரும் போது அந்நிரைக்குரியோர் தடுத்து நிரையை மீட்டுச் செல்லுதலும் வெட்சியேயாகும் என்பது புலவர் குழந்தையின் கருத்தாகும். ஆவைக் காக்க

 ISBN Number: 978-93-91115-19-7

வேண்டும் என்று எண்ணியது புறநோக்காகும். போருக்கும் காதலுக்கும் புகழ் அறநெறி வேண்டாம் என்று பிறநாட்டார் கூறினாலும் தமிழர்கள் இரண்டுக்கும் அடிப்படையாக அறத்தையோ கொண்டனர். ஆநிரை கவர்தல் அறத்தின் பொருட்டேயன்றிப் பிறிதின் பொருட்டன்று. ஆதலின் ஆசிரியர் வெட்சி இன்னது என இலக்கணம் கூறுமிடத்து, ஆதந்து ஓம்பல் என்றார். ஆநிரையைக் கொண்டு போந்து பாதுகாத்தல் வேண்டுமென்ற அற நோக்கிலேயே ஆநிரையைக் கவர களவில் செல்வர். நிரை கவர்தல் மிகப்பழங் காலத்ததாயினும் அறநெறியின் பாற்பட்டது. ஆதலின் வழிவழியாகக் கைக்கொள்ளப்பட்டு வந்துள்ளது. புலவர்களம் நிரை கவரும் நிகழ்ச்சியை பல்துறைப்படுத்தி வகுத்து, அதனை இலக்கியப் படைப்புக்கு நிலைக்களன் ஆக்கியுள்ளனர்.

வெட்சியின் துறைகள்

வெட்சி ஒழுக்கங் கொண்ட துறைகள் பதினான்காகும். இவை நிரை கவர்வோர் செயல், நிரைமீட்போர் செயல் என இருவகைப் பக்கத்திற்கும் உரியனவாகக் குறிக்கப்பட்டுள்ளன. நிரை கொள்வோரும் நிரை மீட்பொரும் வெட்சி மறவர் எனப்படுவர். இவர் வெட்சிப்பூவைச் சூடுவர். இவ்வாறே மற்ற மறவரும்

ISBN Number: 978-93-91115-19-7

வஞ்சி, உழிஞை, தும்பை மறவரும் வேந்தரும் அவ்வப் **பூவைச் சூடுதல் மரபு.**

துறை எனக் கூறப்படுதலால் படையிரங்கு அரவம் முதலாக, கொடை ஈறாக உள்ள இப்பதினான்கு துறைகளும் பல்வகையினவாய் வருதலும் உண்டு. படையியங்கு அரவம் என்பது, படைத்தலைவரை அழைத்து வாவெனல், படைத்தலைவர், வேந்தர்க்குரைத்தல், தலைவர் படையைக் கூவல், படைச்செருக்கு. கண்டோர் கூறல், கெடுமென வருந்தல், நாட்கோடல், கொற்றவைப் பரவல் என்னும் பத்து வகையினைப் பெற்று வரும். மக்கள் முதன் முதலில் நாகரிக நிலையினை எய்தியது முல்லை நிலத்திலேயே ஆகும். அரசுகள் தோன்றுவதற்கு முன் இனக்குழு மக்கள் ஓர் ஊரிற் சேர்ந்து வாழ்ந்த காலத்து மற்ற இனக்குழுவோடு கொண்ட மாறுபாட்டையும், பூசையும் விளக்குவனவாக அமைந்த வெட்சித்திணையின் முதல் பதினான்கு துறைகள். ஆயன் கைக்கோலே செங்கோலாகக் கருதத் தகும். அரச மரபுகள் தோன்றியபின் அரசுரிமை, படை, நாட்டெல்லை ஆகியன உருவாகவே இரு வேந்தர்களுக்கிடையில் போரும் தோன்றியது என்பார் மு. வரதராசன்.

வென்றி வேந்தன் பணிப்பவும் பணிப்பின்றியும்
சென்றிகண் முனைஆதந் தன்று

 ISBN Number: 978-93-91115-19-7

(புறப். வெண். வெட்சிப்படலம், நூ. 1)

என்ற நூற்பா கருத்து சிந்திக்கத்தக்கதாகும். இனக்குழு மக்களிடையே போர்க்குரிய பொருளாக கவர்ந்து பாதுகாக்கத் தம் செல்வநிலை பேணுதற்குரியதாக இருந்த ஆநிரை, தொல்காப்பியர் காலத்தில் வேந்தனின் ஏவலால் கவரப்படுவதாக போரைத் தூண்டும் களவுச் செயற்குரியதாக அமைந்து வெண்பாமாலையார் காலத்தில் போர்க்கும், களவுக்கும் உரியதாக வேந்தரும் தனி ஊராரும் கவர் பொருளாக மாறியிருக்கிறது. இதனை, ஆநிரை மீட்புப் போரில் அரசர் பங்குபெறும் காலம் வரவே, அவ்வாறு துணை புரியும் அரர்களின் அடையாள மலர்களைப் புகழ்வதோடு அவ்வரசர்களைப் புகழ்வதும் அவ்வரசர் தம் படை வீரர்கள் தம்மை அவ்வானிரை மீட்புப் போருக்குப் போக்குவான் வேண்டித் தத்தம் பெருமை, பேராண்மைகளை அவ்வரசர் முன் எடுத்துச் சொல்லிப் பெருமை கொள்ளுதலும் ஆகிய நிகழ்ச்சிகளும் கரந்தை நிகழ்ச்சிக்கண் இடம்பெறலாயின என்கிறார் புலவர் கோவிந்தன்.

போரியல் கூறுகள்

சங்ககாலத்தில் போர் மிக உயர்வான ஒன்றாக இருந்துள்ளது. களச்சாவு புலவர்களுக்குப் பொருளாக அமைந்துள்ளது. போரில் வெற்றி பெறும் ஒருவன் புலவர்களால் பாராட்டப்படுகிறான். போரில்

 ISBN Number: 978-93-91115-19-7

இறந்துபட்டவன் நடுகல்லாக அமைந்து வழிபாடுகளுக்கு உரியனவாகின்றான். இதனால் போரில் வாழ்வும் இறப்பும் சிறப்புக்குரி ஒன்றாக அமைவதனைக் காணலாம். போரியல் வாழ்வுக்கு அடிப்படையாக அமையும் துணிவும், வீரமும், மானமும் போரியல் வாழ்வின் கூறுகளில் முதன்மையானவையாக அமைகின்றன.

துணிவுடைமை

நாட்டையாளும் மன்னனுக்குத் தேவையான இன்றியமையாத தகுதி துணிவாகும். நாடு, போர், இயற்கை அழிவுகள் முதலான சிக்கலான நேர்களில் சரியான முறையில் துணிவெடுக்கும் திறனும், அதனைச் சரியாகச் செயல்படுத்தும் செயலாற்றலும் மிக்கவனாக அவன் இருத்தல் வேண்டும். இதற்கு வஞ்சினம் முதற்படியாக அமைகின்றது. துணிவுடைமை என்பதற்கு ஆண்மையுடைமை என்று பொருள் தருகின்றார் பரிமேலழகர். ஆண்மையாவது ஒன்றினையும் பாராது கடிதிற் செய்வது ஆகலின், அஃது உபசார வழக்கால் துணிவு எனப்பட்டது. துணிவு செயல் செய்யும் திறமையைச் சுட்டி நிற்கிறது.

சங்க அரசருள் தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் தன்னை எதிர்த்து வந்த பகைவர்களை நோக்கிப் பாடியதாக

ISBN Number: 978-93-91115-19-7

அமைந்த பாடலில் அவனது ஆட்சித்தெளிவும் துணிவும் வஞ்சின உணர்வும் புலப்படுத்துகின்றன. இதனை,

… படை அமை மறவரும் உடைம் யாம் என்று
உறுதுப்பு அஞ்சாது உடல் சினம் செருக்கி
சிறுசொல் சொல்லிய சினம்கெழு வேந்தரை
அருஞ்சமம் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்கு அகப்பட்டேஎன் ஆயின்
… குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக

(புறநானூறு, பா. 72)

என்னும் பாடலில் காணலாம்.

பண்டைத் தமிழகத்தில் வாழ்ந்த அரசர்கள் புகழ் எனின் உயிரையும் கொடுக்கும் திறம் கொண்டவர்களாகத் திகழ்ந்தனர். ஆறத்தைப் பின்பற்றி வாழ்வதனைப் பெருமையாகக் கருதினர். இதனால் புலவர்கள் பாடும் சிறப்பினை எய்தினர். அக்காலத்தில் போரினாலும், புலமையாலும், செல்வத்தாலும் புகழ் கிட்டியது. போரினால்செல்வமும் கிட்டியது. எனவே, மன்னர்கள் போரை விரும்பினர். மன்னன் போர் செய்யும் பாசறையில் இருப்பதனை விரும்பியதை, … வெல்போர்ப் பாசறை அல்லது நீ ஒல்லாயே (புறநானூறு, பா.73) என்னும் அடிகளால் அறியலாம்.

ஒரு செயலைச் செய்யும் முன்னர் அதனை இவ்வாறு வெற்றிகரமாக முடிப்பேன் என்று சூளுரைத்து

ISBN Number: 978-93-91115-19-7

அவ்வண்ணமே செய்தல் பேராற்றலும் செயல் திறனும் ஊக்கம் உறுதியும் உள்ளவர்க்கே வாய்க்கும். அவ்வாறன்றித் தோற்றால் பழி வந்து சேரும். ஆதனால் பழிக்கு அவர்கள் அஞ்சினர். இதன் காரணமாகவே சொன்ன செயலை எப்பாடுபட்டேனும் செய்த முடிக்கும் ஆற்றல் மிக்கவர்களாக அவர்கள் விளங்கினர். ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். சோழன் நலங்கிள்ளி ஆகியோர் வஞ்சினம் உரைத்து அதனைத் துணிவுடன் செயல்படுத்திக் காட்டியவர்களாவர்.

... வருத்தப் பொரேஎன் ஆயின், பொருந்திய
தீதுஇல் நெஞ்சத்துக் காதல் கொள்ளாப்
பல்இருங் கூந்தல் மகளிர்
...ஒல்லா முயக்கிடைக் குழைக என் தாரே

(புறநானூறு, பா. 3:5-6)

வீரமுடைமை

சங்ககாலம் வீரயுகக் காலம் என்று அறிஞர்களால் போற்றப்படுகின்றது. சங்கப் புறத்திணைப் பாடல்கள் வீரத்தையே உயர்வாகப் பேசுகின்றன. சங்ககால வீரர்களின் களம் காணும் பெற்றியைத் தறுகண் என்ற சொல்லால் குறிப்பிடுவார் தொல்காப்பியர். இவை பழந்தமிழர் வீரத்தின் பண்பாக விளங்குவதனை அறியலாம். இவ்வாறு புகழ்ந்து போற்றப்படும் வீரனின்

 ISBN Number: 978-93-91115-19-7

செயல்பாடுகளே சங்கப் பாடல்களுக்குப் பொருளாக உள்ளன. வீரநிலைக்கால வாழ்வில் அமர்க்கள வாழ்க்கை இனக்குழு வாழ்க்கையின் போக்கு என்றாலும் மறத்தில் அறப்பண்புகள் இரண்டறக் கலந்து காணப்படுகின்றன. மனித இனத்தை அழிப்பதற்கென்று மனிதனால் அன்று அவர்களும் ஆக்கப்படவில்லை. மனித மாண்பை உணர்த்துவதற்கும் வீரப்பண்பை மேம்படுத்துவதற்குப் போர்க்கள விதிமுறைகள் வகுக்கப்பட்டன. மனிதனின் தனித்தன்மையும். தலைமைத் தன்மையும் சிறக்கச் செய்யச் செருக்களம் சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டது என்று வீரநிலைக் கால ஆளுமைக்கூறுகள் குறித்துக் கூறுகின்றார் கதிர் மகாதேவன்.

போரில் விதிமுறைகள் சீரிய முறையில் பின்பற்றப்பட்டன. பெரிதும் மீறாமல் காக்கப்பட்டன. அணிவகுப்பில் ஆண்மையின் சிறப்பினைக் காணலாம். அந்த அந்தப் படைக்கலன்களைத் தாங்கியோர், அதே படைக்கலன்களை ஏந்தியவரோடு மோதுவதைக் காண்கிறோம். அடுகளத்தில் ஒரு நேரத்தில் ஒருவன் மற்ற ஒருவனோடு அடுதலே முறையாகும். ஆவன் இடருற்ற போது போர் உடற்வதைத் தவிர்க்க வேண்டும். மூத்தோர் குழவி, பெண்டிர், பிணியுடையோர், புறமுதுகிடுவோர் ஆகியோரைத் தாக்குதல் முறையன்று என்ற விதிகள் பின்பற்றப்பட்டுள்ளன.

 ISBN Number: 978-93-91115-19-7

சங்ககால மன்னர்கள் வீரத்தில் சிறந்து விளங்கினர். போரில் வெகுண்டு வந்த வீரர்களைப் புகழ்தலோ, இகழ்தலோ அன்றி அவர்களைப் பற்றி விசும்பில் எறிந்து மண்ணில் வீழச்செய்து கொன்றான். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் அவ்வீரச் செயலுக்காக அவன் மகிழ்ச்சியடைந்ததும் இல்லை. தற்பெருமைப்படவும் இல்லை என்ற கருத்தினை,

… வயின் வயின்
உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும் இழிந்தன்றும் இலவே; அவரை
அழுந்தப் பற்றி அகல் விசும்பு ஆர்ப்புஎழ
கவிழ்ந்து நிலம் சேர அட்டதை
… மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் அதனினும்
இலனே (புறநானூறு, பா. 77 : 9-13)

என்னும் புறநானூற்றுப் பாடல் கருத்தினைக் காண்டு உண்மைத்திறன் மிக்க ஒரு வீரனின் பண்பை அறிந்து கொள்ள முடியும். வீரர்களை முன்னால் ஏவவிட்டுத் தான் மட்டும் பாதுகாப்பாக இருப்பது தமிழ் மன்னர் மரபன்று. பகைவர் அரணைச் சூழ்ந்து தன்னை நீ முன்னே செல் என விடுக்காது தான் மன்னே செல்லும் மன்னனை வீரனொருவன் இன்னாதவன் என்று குறிப்பிடக் காண்கிறோம்.

ISBN Number: 978-93-91115-19-7

எமக்கே கலங்கல் தருமே தானே
தேறல் உண்ணும் மன்னே நன்றும்
இன்னான் மன்ற வேந்தே, இனிய
நேரார் ஆர்எயில் முற்றி
…வாய்மடித்து உரறி நீமுந்து என்னானே

(புறநானூறு, பா. 298)

மேலும் இருபடை வீரர்களும் போரில் இறந்த பின்னர் இரு மன்னர்களும் உயிர் வாழாது போரிட்டு மடிந்த செய்தியை, அறப்போர் மண்டிய மறப்போர் வெந்தர் தாமாய்ந் தனரே என்னும் புறநானூறு அடிகளால் உணரலாம். மன்னனது வீரத்தை வென்றவனும் புகழ்வான். அவன் இல்லாவிட்டால் வெற்றி பெற்றிருப்போம் எனத் தோற்றவனும் புகழ்வான். அந்த அளவிற்கு அவனது வீரம் சிறந்து விளங்குகின்றது என்ற கருத்தினை,

குன்றத்து அன்ன களிறுபெயர்
கடந்து அட்டு வென்றோனும், நிற் கூறும்மே
வெரீஇன் இவன்என
கழல் அணிப் பொலிந்த சேவடி நிலம் கவர்பு
… விரைந்து வந்து சமம் தாங்கிய
வல்வேல் மலையன் அல்லன் ஆயின்
நல்அமர் கடத்தல் எளிதுமன் நமக்கு எனத்
தோற்றோன் தானும் நிற்கூறும்மே

ISBN Number: 978-93-91115-19-7

(திருக்குறள் நீதி இலக்கியம், பக். 233-234).

என்னும் பாடல் எடுத்துரைக்கக் காணலாம். ஆட்சியாளனுக்குப் பிறரது உதவியின்றி வெல்லும் ஆற்றல் வேண்டும். அப்பொழுதுதான் நிலையான ஆட்சியை அமைக்க முடியும். இல்லையேல் அம்மன்னனின் ஆட்சி நிலையற்றதாகிவிடும். மன்னனின் தனி ஆற்றலைப் புறநானூறு,

புறம் கெட இறுக்கும் வரம்புஇல் தானை
துணை வேண்டாச் செறுவென்றி

(புறநானூறு, பா. 16:9-10)

என்னும் பாடலடிகளில் புலப்படுத்துகின்றது.

மானமுடைமை

மானமாவது தம் நிலையின் தாழாமையும், தாழ்வு வந்துழி உயிர் வாழாமையும் ஆகும். இப்பண்பு தனிமனிதற்கு வேண்டிய அரிய பண்பாகலாம். மானம் என்பதனைக் குறித்து க.த. திருநாவுக்கரசு, “இன்னும் ஆராய்ந்தால் மானம் என்பது தன் குடி, தன் நாடு முதலியவற்றின் பெருமையையும் உலக வாழ்க்கைக்கு அடிப்படையான உயர்ந்த கொள்கைகளின் பெருமையையும் காக்கப் பயன்படுவதே அல்லாமல் தன்னல அடிப்படை கொண்ட தன் பழி, தன் புகழ், தன் ஆக்கம், தன் கேடு என்பனவற்றைப் பொருளாகக் கொள்வது அன்று. தன்னைவிடத் தன் குடி பெரியது.

 ISBN Number: 978-93-91115-19-7

அதை விட நாடு பெரியது. அதைவிட உலகம் பெரியது. அதைவிட உலக வாழ்விற்கு அடிப்படையான ஒப்புரவு பெரியது என்று எண்ணுவதே மானமாகும்” என்பார். மான உணர்வு மிக்கவனே மனிதப் பண்பிற்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றான். நாட்டையாளும் மன்னர்களுக்கு மானவுணர்வு மிக இன்றியமையாத ஒன்றாக அமைகின்றது. மனிதனது உரிமை தடுக்கப்படும் போது மான உணர்வு கிளர்ந்து எழுகிறது.

பண்டைத் தமிழ் மன்னர்கள் மானவுடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர். மானக்குறைவு ஏற்படும் போது வடக்கிருத்தல் என்று தன்னைத்தானே அழித்துக் கொள்ளும் முறையைப் பின்பற்றியுள்ளனர். சோழன் கரிகாற் பெருவளத்தான் ஏறிந்த வேல் முதுகில் பாய்ந்ததென்று அப்புறப் புண்ணுக்கு நாணி சேரமன்னன் பெருஞ்சேரலாதன் வடக்கிருந்தான் என்பதனை,

தன்போல் வேந்தன் முன்பு குறித்து எறிந்த
புறப்புண் நாணி, மறத்தகை மன்னன்
… வாள் வடக்கிருந்தனன் ஈங்கு

(புறநானூறு, பா.65:9-11)

என்னும் பாடல் உணர்த்துகின்றது.

கோப்பெருஞ்சோழனின் மக்களே அவனை எதிர்த்த போது வடக்கிருந்து உயிர் நீத்தான் என்பதனை,

செய்குவம் கொல்லோ நல்வினை? எனவே

 ISBN Number: 978-93-91115-19-7

ஐயம் அறாஅர் கசடு ஈண்டு காட்சி
நீங்கா நெஞ்சத்துத் துணிவு இல்லோரே
… இமயத்துக்
கோடு உயர்ந்தன்ன தம்இசை நட்டு
தீதுஇல் யாக்கையொடு மாய்தல் தவத்தலையே
(புறநானூறு, பா. 214)

என்னும் பாடலடிகளால் அறியலாம். பகைவன் சிறையில் தனக்குத் தண்ணீர் தரக் காலம் தாழ்த்தியமைக்கு மனம் வருந்தி உயிர் நீத்தான் சேரமான் கணைக்கால் இரும்பொறை,

தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேள்அல் கேளிர் வேளாண் சிறுபதம்
மதுகை இன்றி, வயிற்றுத் தீத்தணிய
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ, இவ்வுலகத்தானே (புறநானூறு, பா. 74)

இச்செய்திகளால் சங்க மன்னர்கள் மான உணர்வினைப் பற்றர்களகத் திகழ்ந்துள்ளனர் என்பதனை அறியலாம். நாட்டையாளும் மன்னர்களுக்கு மான உணர்வு இன்றியமையாத கூறாக விளங்கியது என்பதனையும், இம்மான உணர்வினைத்தங்களின் செயல்பாடுகளின் மூலம் புலப்படுத்திய மன்னர்களைப் புலவர்கள் போற்றியுரைத்துள்ளனர் என்பதனையும் உணரலாம்.

ISBN Number: 978-93-91115-19-7

அரசரும் போரும் சங்ககாலத்தில் வாழ்ந்த நாடாண்ட மன்னர்கள் போரில் ஈடுபடுவதையும், மக்களைப் போரில் ஈடுபடச் செய்வதையும் ஒரு கடமையாகவே கொண்டிருந்தனர் என்பதனைச் சங்கப் புறப்பாடல்களின் மூலம் அறியமுடிகின்றது. மக்களைப் பகைவர்களிடமிருந்து காப்பதற்குப் போர்ப்படையினை மன்னன்பெருமளவில் வைத்திருந்தான். அவை மக்களுக்குப் பாதுகாப்பை அளித்தன. போர்ப்படைகள் எப்போதும் தயாராக இருந்துள்ளன. மன்னன் போருக்கே முக்கியத்தவம் தந்துள்ளான். சங்ககாலத்தில் போர் என்பது அன்றாட வாழ்வியலோடு இணைந்திருந்தது. வீரம் நெறியாகிறது. மார்பில் புண் ஏற்படுவதை வீரத்தின் அடையாளமாகக் கருதினர். முதுகில் காயம் ஏற்படுவதைக் கோழைத்தனத்தின் சான்றாகக் கருதி, அதற்காக உயிரையும் நீத்தனர்.

“சங்கப் புறப்பாடல்களைக் காணும் போது, வீரவாழ்வு இச்சமுதாயத்தைப் பண்பாட்டில் பெரிதும் மாற்றியிருக்கிறது எனலாம். எனவே, இத்தகைய காலகட்டத்தினை வீரநிலைக்காலம் என்று அழைக்கலாம்” என்று சங்ககாலத்தின் வீரச்சிறப்பினை எடுத்துரைக்கின்றார் கதிர் மகாதேவன். மனித வரலாற்றில் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒவ்வொரு இயல்பு சிறப்புறப் போற்றப்படுவதுண்டு.

 ISBN Number: 978-93-91115-19-7

இவ்வியல்பினைச் சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன. சங்ககாலத்தில் வீரம் முதன்மையாகப் போற்றப்பட்டது. வீரம் மிக்கவர்களே சிறப்புடையவர்களாகக் கருதப்பட்டனர். மகனைப் பெற்று வளர்த்தல் என்னிடம் உள்ள கடமை. அவனை நற்பண்புகளால் நிறைந்தவனாக ஆக்குவது தந்தையின் கடமை. அவனுக்கு வேண்டும் வேல் முதலிய படைக்கருவிகளைச் செய்து தருதல் கொல்லனின் கடமை. நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது நாடாளும் வேந்தனின் கடமை. விளங்கும் ஆண்யானைகளைக் கொன்று வருதல் வீரமகனுக்குரிய கடமையாகும் என்னும் கருத்தமைய,

ஈன்றுபுறந்த தருத லென்றலைக் கடனே
சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நுன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்கிக்
களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே

(புறநானூறு, பா. 312)

என்னும் பாடலைப் பாடியுள்ளார் பொன்முடியார். இப்பாடல் குறிப்பிடும் அனைவரது கடமைகளும் போராடும் தொடர்புடையனவாக இருப்பது கருதுதற்குரியது ஆகும். இப்பாடலில் வரும்

 ISBN Number: 978-93-91115-19-7

சான்றோனாக்குதல் என்ற தொடருக்கு ‘வீரனாக்குதல்’ என்று பொருள் தருகின்றார் உரையாசிரியர்கள்.

“தம் தொழில் முயற்சியிலும், விளையாட்டிலும் பழக்கவழக்கங்களிலும் இயற்கைப் பண்பிலும் தமிழர் போர்க்குணம் படைத்தவராகவே விளங்கினர். இரவு பகல் என்ற வரையறையில்லாமல், கடல் நடுவில் சென்று மீன்வேட்டை பாடுதலும். காடுகளிலும் மலையுச்சிகளிலும் கொடிய வழிகளிற் சென்று விலங்குகளை வேட்டையாடுதலும் அவருடைய பழமையான தொழில்கள், காட்டு நிலத்தில் வாழ்ந்த தமிழர், சீறித்துள்ளிக் கொம்புகளாற் குத்திக் கொல்லுகின்ற போர்க்காளைகளைத் தழுவிப் பிடித்து எவனொருவன் அடக்குகிறானோ, அவனையே மணமகனாகத் தேர்ந்து தம் மகளிரை மணஞ்செய்து கொடுப்பர்” என்னும் குறிப்பால் பண்டைத்தமிழரின் போர் உணர்வு புலனாகும். இவ்வாறு இளமையிலேயே மறப்பண்புடன் வளர்க்கப்பட்ட இளைஞர்கள் பேரென்றால் பூரித்தெழும் இயல்பினை உடையவராக இருந்தனர். ஊர் மன்றின்கண் தூங்கும் முழவின் மீது காற்று உரசும் போது எழும் ஒலியைக் கேட்டாலும் அவ்வொலி போருக்கழைக்கும் போர்ப்பறை ஒலியென எண்ணி மகிழ்வர் என்பதனை,

பொதுவிற் தூங்கும் வீசியுறு தண்ணுமை

 ISBN Number: 978-93-91115-19-7

வலிவொரு தென்கண் கேட்பின்

… அதுபோ ரென்னு மென்மையு முளனே

(புறநானூறு, பா. 89)

என்று புறுநானூறு குறிப்பிடுகின்றது. இச்செய்திகளால் சங்ககாலத்தில் போரில் ஈடுபடுவதனையே உயர்வாகக் கருதினர் என்று அறியலாம். தோல்வி கண்ட வீரர்கள் மீண்டும் மீண்டும் போருக்கு எழுச்சியுடன் சென்று போரிடுவது வீரத்தின் அடையாளமாகப் போற்றப்பட்டுள்ளது. போரில் தங்கள் இன்னுயிரினை ஈந்தாலும் அதுவும் உயர்வாகவே கருதப்பட்டது.

வீரரும் போரும்

எல்லாரோடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்கும் பெருமித உணர்வே வீரமென்றும், இவ்வுணர்வு கல்வி, தறுகண். இசைமை, கொடை ஆகிய நாற்பண்பு பற்றிப் பிறக்கும் என்று கூறுவார் தொல்காப்பியர். இவையன்றிக் காமம், வெகுளி, காரணமாகவும் வீரம் பிறத்தல் உண்டு. மனித இனத்தின் தொடக்கக் காலத்தில் வீரம் மிக உயர்வாகப் பேசப்பட்டது. மனிதன் குழுவாக வாழ்ந்த காலத்திலிருந்தே வீரம் போற்றப்பட்டு வந்துள்ளது. உலகத்தின் தொன்மை இனக்குழுக்களில் வீரனுக்குப் பெருஞ்சிறப்புச் செய்யப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன. வீரனின் பிறப்பும் இறப்பும் மிக புலவர்களால் புகழ்ந்துரைக்கப்படுகின்றது.

 ISBN Number: 978-93-91115-19-7

செற்றன் றாயினுஞ் செயிர்ந்தன் றாயினும்
உற்றன் றாயினு முய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
இறந்தன் றாகல் வேண்டும் பொலந்தார்
மண்டமர் கடக்குந் தானை
திண்டேர் வளவற் கொண்டே கூற்றே

(புறநானூறு, பா. 226)

என்னும் புறநானூற்றுப் பாடலில் பெருவீரனின் இறப்பு உயர்த்திப் பாடப்படுகின்றது. வீரனின் களச்சாவு புகழுக்கும் மானமேம்பாட்டுக்கும் உரியதாக்கப் பேசப்படுகின்றது. முகத்திலும், தோளிலும், மார்பிலும் விழுப்படுகின்ற வீரர்கள் வானுலகத்தைச் சேர்வர் என்றும், அரசக்குடியிற் பிறந்தார் இத்தகு இறப்படைதலே நேரிதென்றும் சங்கப் புறப்பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

புறங்கொடுத்தல்

போரில் புறங்கொடுத்தல் இழிந்த செயலாகவும், அவ்வாறு புறமுதுகிட்டோடுவோர் மீது வாளோச்சுதல் அறக்கேடாகவும் கருதப்பட்டது.

புன்றலை மடப்பிடி நாணக்
குஞ்சர மெல்லாம் புறக்கொடுத் தனவே

(புறநானூறு, பா. 308:10-11)

 ISBN Number: 978-93-91115-19-7

என்ற பாடலடிகளில் புறங்கொடுத்தலின் இழிவு கூறப்படுகின்றது. ஆயின் சங்க இலக்கியத்தில் போரில் மார்பிற் புண்படுதலும், புண் மலிந்த உடம்பினன் ஆதலும், போர் வீரர்க்குப் பெரும் புகழைத் தரும் செயல்களாகக் கருதப்பட்டுள்ளன.

நீயே அமர்க்காணி னமர் கடந்தவர்
படைவிலக்கி யெதிர் நிற்றலின்
வாஅள் வாய்த்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக் கினியை காட்சிக்சின் னாயே
அவரே நிற்காணிற் புறங்கொடுத்தலின்
ஊறறியா மெய்யாக்கை யொடு
கண்ணுக் கினியர் செவிக் கின்னாரே"

(புறநானூறு, பா. 167: 1-7)

என்னும் பாடலில் போரில் விழுப்புண் பெற்றவர் சிறப்பும், விழுப்புண் பெறாதவர் இழிவும் கூறப்படுகின்றன.

போரியல் வாழ்வும் தலைமைத் தன்மையும்

பண்டைத் தமிழகப் போரைத் தலைமையேற்று நடத்தியவனே மன்னனாக மக்களால் போற்றப்பட்டான். பழந்தமிழக அரசியலில் இறை எனப்படுவோன் படை நடத்திப் பகைவரை அழிப்பவனாக இருந்தான். இதன் குறிப்பும் சிறப்பும் பழந்தமிழர் வீரப்பண்பாட்டில் காணக்கிடைக்கிறது. அக்காலத்தில் அரசனே அனைத்தும் ஆனான். மக்கள் உயிரே மன்னன்தான். மக்களுக்கு

ISBN Number: 978-93-91115-19-7

உணவளித்துப் புரப்பதும் அவன் கடனே. ஏதற்கும் மக்கள் மன்னனையே எதிர்நோக்கினர். தம் வளமார் வாழ்விற்கு அவனே காரணம். தம் வறுமைத் துயர்க்கும் அவனே காரணம் எனக் கருதினர். அதனால் வளமார்ந்த வாழ்வு பெற்றக்கால் அவனை வாழ்த்தினர். வறுமையில் வாடிய போது அவனைத் தூற்றினர். தொலைக்கவும் துணிந்தனர்.

பாணர் முதலாய இரவலர் தம் இன்மை நிலை கூறிவந்து நிற்க, அவர்க்குத் தருவதற்காம் பொருள் தன்பால் இல்லையாகவே, அப்பொருளைப் பிற நாடுகளில் இருந்தேனும் கொணர்ந்து தருதல் வேண்டும் என்னும் கருத்துடைய கொடை வீரன் ஒருவன் தனக்குப் படைக்கலம் பண்ணித்தரும் கொல்லன் பால் அவ்விரவலர் கூட்டத்தை அழைத்துச் சென்று, அவனுக்கு அவர்களின் வறுமைக் கொடுமையைக் காட்டி அது துடைக்க நான் மேற்கொள்ளும் போரே வெட்சிப் போராம். வெட்சியார் ஆநிரைகளைத் காத்து நின்ற கரந்தையாரை வென்று தாக்கிவிட்டு, அவ்வாநிரைகளைக் கைப்பற்றிக்கொண்டு காட்டு வழியே ஒட்டி வருங்கால் இடைவழியில் தம் பசிநோய் மிகவே அவ்வாநிரையும் கொழுத்த ஆவொன்றைக் கொன்று அதன் ஊனை நெருப்பிலிட்டுப் புழுக்கி வேம்பின் நிழற்கண் இருந்து உண்டு செல்வராயினர் என்ற குறிப்பினை,

… தெய்வம் சேர்ந்த புராரை வேம்பின்

 ISBN Number: 978-93-91115-19-7

கொழுப்பா எறிந்து குருதி தூஉய்ப்

புலவுப் புழுக்கு உண்டவான்கண் அகல்அறை

(அகநானூறு, பா. 309)

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கக் காணலாம். வடித்துக் கூராக்கிய அம்பும், நாணேற்றி வளைந்த வில்லும் உடையராகிய வெட்சி வீரர், கண்டவர் அஞ்சிக் கலங்குமாறு வனைத்த வில்லிலிருந்து விரைந்து பாயும் அம்புகளின் துணையால் பகைநாட்டு ஆநிரைகளைக் கைப்பற்றி வருங்கால் இடைவழியில் வந்தெதிர்ந்த ஆநிரை ஓம்பும் கரந்தை வீரரை, ஆகோட்பறை ஒலிக்கவென்று துரத்திய வெற்றிக்களிப்பால் வாகை அணிந்து இடைவழியில் உமணர் எனும் உப்பு வணிகர் மூட்டிவிட்டுச் சென்ற கல் அடுப்பில் ஊனை அவித்து உண்டு மகிழ்வர் என்ற செய்தியை,

உமண் உயிர்த்து இறந்த ஒழிகல், அடுப்பில்

வடியுறு பகழிக் கொடுவில் ஆடவர்

... உலலைக் கண்ணியர் ஊன்புழுக்கு அயரும் கவலை (அகநானூறு, பா.159)

என்னும் அகநானூற்றுப் பாடல் எடுத்துரைக்கக் காணலாம்.

புறத்திணையும் வீர உணர்வும்

அகம், புறம் என்னும் இரண்டனுள் தலைமக்களின் பாலுணர்ச்சி பற்றிய அகம் பாடுபொருளாகும். பொழுது

ISBN Number: 978-93-91115-19-7

பல வரம்புகட்கு உட்படும் நிலையிலுள்ளது. உண்பது போலவும், உறங்குவது போலவும் பாலுணர்ச்சியும் உடம்பிற்குரிய பண்புகளும் ஒன்றாகும். அகஉணர்வாகிய காமத்துக்குப் பருவமும், சூழலும் மனநிலையும் இன்றியமையாதன. எனவே தான் முதல், கரு, உரிப்பொருள்களின் விளக்கம் தொல்காப்பியரால் கூறப்பட்டுள்ளது. அகமென்பது காம உணர்வு என்றாற் போல் புறத்திற்குக் குறிப்பிட்ட ஓர் உணர்வைக் கூறுதற்கில்லை. அவலம், இரக்கம், வெகுளி, வீரம், பெருமிதம் ஆகிய உணர்வுகள் பாமம் பற்றாது நிகழுங்கால் புறத்திற்குரியன. புறம் என்ற குறியீடு, பல்வேறு உணர்வுகளுக்குரியதாயிருப்பினும் மறவுணர்வாகிய வீரத்தையே பெரிதும் குறிப்பதாக அமைந்திருக்கிறது. புறத்திற்குரிய ஏனை உணர்வுகளிலும் வீரமே விழுமிய உணர்வாகப் போற்றப்பட்டிருக்கிறது" என்பார் கு.வெ. பாலசுப்பிரமணியன்.

சங்ககாலத்தில் மற உணர்வு நாட்டுக்கும் சமூகத்திற்கும் மிகவும் தேவையானதொரு பண்பாக அக்காலத்தில் கருதப்பட்டுள்ளது. புறத்திணையில் பாடாண் திணையில் ஓரளவுக்கு மட்டுமே புனைவதற்கு வாய்ப்பிருக்கின்றது. ஏனைய பெரும்பாலும் உள்ளது மொழிதலே. "இந்நிலையில் புலவர் தம் கற்பனைத் தினவுகளைத் தீர்த்துக் கொள்வதற்குரிய பாடுதுறையாகக்

 ISBN Number: 978-93-91115-19-7

காமத்தைக் கருதினர். நடந்த ஒன்றையும் அளவுமிகுத்துச் சொல்லும் நெறி சங்ககாலத்தில் இல்லை. வாழ்வில் நிகழ்ந்தவற்றையே உணர்ச்சி உந்தப் புலவர்கள் புறப்பாடல்களாகப் பாடினர்" என்கிறார் இராம. பெரியகருப்பன்.

மன்பதை புறக்கும் நன்னாட்டுப் பொருநன்
உட்பகை யொருதிறம் பட்டெனப் புட்பகைக்
கேளா னாசுவிற் சாவேன் யாமென்

(புறநானூறு, பா. 68)

என்னும் பாடலில் வீரன் ஒருவனின் மறவுணர்வு பேசப்படுகின்றது. போரையே தொழிலாகவும், போர்ச்சாவையே புகழுக்குரியதாகவும் பண்டைத் தமிழர் கருதினர் என்பதற்கு இப்பாடலடிகள் சான்றாகும். இதனைப் புலவர்களும் தங்கள் பாத்திறத்தால் போற்றியுரைத்துள்ளதை,

இடைப்பட யழுவத்துச் சிதைந்து வேறாகிய
சிறப்புடை யானன் மாண்புகள் பருளி
வாடுமுளை யூறிச் சுரந்தன
... ஓடாப் பூட்கை விடலைத் தாய்க்கே

(புறநானூறு, பா. 68)

என வீரனை ஈன்ற தாயின் மறஉணர்வு போற்றப்படுகின்றது. போர் புரிவதும் போரில் களிற்று யானைகளைக் கொல்வதும் வீரனுக்குரிய கடமைகளாக

ISBN Number: 978-93-91115-19-7

உள்ளன. போரில் இறந்துபடுதலைச் சங்கத் தமிழ்ச் சங்கமும் பெருமைக்குரியதாகக் கருதியுள்ளது. இத்தகு வீரர்களையே புலவர்கள் பாடிச் சிறப்பித்தனர். புலவர்களும்இவ்வீரர்களின் புகழினைப் பாடுங்கால், அவர்களின் ஆற்றல். திறன் முதலானவை மற்ற மனிதர்களிடமிருந்து சிறந்து விளங்கியதைப் போற்றியுள்ளனர். ஆதலால் வீரப்புகழ் விருப்பமே புறப்பாடல்களின் தோற்றத்திற்குக் களமாக அமைந்தது எனலாம்.

போரியல் அறம்

இருபெரும் வேந்தர்கள் போர்புரியக் கருதும் பொழுது பகை நாட்டிலுள்ள போருக்குப் பொறாத உயிர்களை அப்புறப்படுத்துவதே போரின் முதல் நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சி பண்டைக்காலத்திலிருந்து வழக்கிலிருந்து வரும் ஒரு போர் அறமாகும். புறத்திணை ஒழுகலாறுகள் அறத்தின் வழி நிகழ்த்தும் போரின் அடிப்படையாகக் கொண்டவையாதலின் போரின்கண் அழியாமல் காக்க வேண்டிய அந்தணர், சான்றோர், ஆநிரை முதலானோரை அறிவித்து அப்புறப்படுத்த வேண்டிய அரசியலறங்களுக்கு முதற்கண் படையெடுத்துச் செல்வோர்,

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையோரும் பேணித்

ISBN Number: 978-93-91115-19-7

தென்புல வாழ்நர்க்கு அருங்கட னிறுக்கும்
பொன்போல் புதல்வர் வறாஅதீரும்
எம்மம்பு சுழவிடுதும் நும்மரண் சேர்மின்

(புறநானூறு, பா. 9:1-5)

என்று அறிவுறுத்துவர். அவ்வழி அறிவிப்பினைத் தாமே உரணமாட்டாத ஆநிரைகளைக் காத்தல் வேண்டி அவற்றை இரவில் சென்று அகப்படுப்பர். ஆநிரை கவர்ந்து செல்லுதல் அறத்தின் பொருட்டே அன்றிப் பிறிதின் பொருட்டன்று. ஆதலின் தொல்காப்பியர் வெட்சிக்குரிய இலக்கணம் கூறுகையில் வெட்சி இன்னது என இலக்கணம் கூறுமிடத்து, ஆதந்து ஓம்பல் என்கிறார். ஆநிரையைக் கொண்டு போந்து பாதுகாத்தல் வேண்டுமென்ற நோக்கத்தாலேயே ஆநிரையைக் கவரக் களவில் செல்வர். இதனை,

வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவின்
ஆதந்து ஓம்பல் மேவற் றாகும்

(தொல். பொருள். புறத்திணையியல், நூ. 2)

என்ற நூற்பாவின் வழி தொல்காப்பியர் தெளிவுபடுத்துகின்றார். போர் நடைபெறுவதற்கு முன் ஆநிரை, அந்தணர். பெண்கள், பிணியுடையோர், முதலானோர்களைப் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பிவிட்டு அதன் பின்னர் நடைபெறும் போரை அறப்போர் எனலாம். முன்னறிவிப்பு ஏதுமின்றி

 ISBN Number: 978-93-91115-19-7

நடைபெறும் போரை அறமல்லாப் போர் என்று வகுத்துள்ளனர் நம் முன்னோர். பகைவர்கள் கவர்ந்து சென்ற பொருட்களைத் தன் நாட்டுப் படைகளுடன் சென்று மீட்டு வருதலுமுண்டு. வெட்சி வீரர்கள் கவர்ந்து சென்ற பசுக்கூட்டங்களை அந்நாட்டு வீரர்கள் அறிந்து அவற்றை மீட்டு வருவதற்காகப் படையெடுத்துச் செல்வர். இலக்கண நூல்கள் இந்நிகழ்ச்சியைக் கரந்தை என்று குறிப்பிடுகின்றன. இவ்வாறு ஆநிரைகளைக் கவர்தல் இன்றியமையாத பணியாக இருந்துள்ளது. இரவு நேரங்களில் ஊர்களை அழித்துஆநிரைகளைக் கவர்ந்து வருவர். கால்நடை வளர்ப்பு நிலையில் தனிச்சொத்து மிகுந்து உள்ளவர். இல்லாதவர் என்ற வர்க்கப் பிரிவ ஏற்பட்ட போது கள்வர் ஆநிரைகளைக் கவர்ந்து பங்கிட்டுக் கொள்ளத் தயங்கவில்லை.

போரில் வெற்றி

போரின் இறுதி வெற்றி, போர் புரிகின்ற இரு பகுதியினருள் ஒருவர் வெற்றி பெற்றுத்தான் ஆக வேண்டும். அவ்வாறு வெற்றி பெற்றவுடன் தங்களின் மகிழ்ச்சியைக் கொண்டாடி மகிழ்வர். தேரின் முன்னும் பின்னும் மகிழ்ந்தாடுவர். இவ்வெற்றியைக் கண்டோர் பாராட்டிக் கூறுவர். அதன்பின் பகை நாட்டிலிருந்து மீட்டுவந்த பொருட்களைப் பங்கிட்டுக் கொடுப்பர். அவ்வாறு பங்கிட்ட பின் கள்ளுண்டு களித்தாடுவர்.

ISBN Number: 978-93-91115-19-7

வெற்றியைக் கொடுத்த முருகனுடைய வேலைக் கைக்கொண்டு வெறியாட்டு நிகழ்த்துவர். இறுதியில் தங்களின் குடிப்பெருமையை எடுத்துரைப்பர். இவ்வாறு பலவாறாக மகிழ்ச்சியை வெளிப்படுத்துவர்.

முடிவுரை

சங்க இலக்கியத்தில் காதலும் வீரமும் மிக உயர்வாகப் போற்றப்பட்டுள்ளன. மிகச்சிறந்த வீரனையே புலவர்கள் தங்கள் பாடல்களுக்குத் தலைவனாக்கியுள்ளனர். அகப் பாடலாயினும். புறப் பாடலாயினும் வீரனே தலைவனாக விளங்கியுள்ளான். வீரனின் ஆற்றல் போர்க்களத்தில் மெய்ப்பிக்கப் படுகின்றது. போரில் பெறும் வெற்றியும், வீரமரணமும் வாழ்த்தப்பட்டுள்ளன. போர்க்குரிய குணங்களைப் பெற்ற வீரனைப் பெறுவதனையே அக்காலத் தாயர் விரும்பியுள்ளனர். மிகச்சிறந்த வீரனையே தலைவனாகப் பெற்றுள்ளாள் சங்ககாலத் தலைவி. இதனால் சங்ககாலம் வீரப்பண்பையே வாழ்க்கைக்கு உரியதாக்கியுள்ளது என்பது புலனாகின்றது.

பயன்பட்ட நூல்கள்:

[1] கோவிந்தன், கா. பண்டைத்தமிழர் போர்நெறி. ராமையா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு - 2011.

 ISBN Number: 978-93-91115-19-7

[2] பாலசுப்பிரமணியன், கு. வே. *புறநானூறு மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[3] இரா.செயபால். *அகநானூறு மூலமும் உரையும்*. நியு செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, பதிப்பு-2004.

[4] இளம்பூரணர் உரை. *தொல்காப்பியம் (பொருளதிகாரம்)*. கழக வெளியீடு, சென்னை, 1967.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-93-91115-19-7

Women's Bravery in *Purananooru*

Dr. N. Kumari, Assistant Professor of Tamil, Auxilium College, Vellore, Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-7889-6164
DOI: 10.5281/zenodo.11118502

Abstract

Among the books of the Sangam Sumam, Purananuru is highly praised and distinguished by Tamils. It is known as Purananuru because it contains 400 hymns on the subject. About fifty seven poets have sung this book. Poets belonging to different eras and belonging to different clans sang this book.More than fifteen female poets like Auvaiyar, Kakai Padiniyar, Okkur Masathiyar, Vennikkuyatiyar, Nakkannaiyar, Marogattu Nappasalaiyar, Hindi Bhatiya Kamakanniyar have sung this book. This book tells about the culture, bravery, gift, hospitality, morals, scholarship, faith, customs, politics etc. of the Tamils. The purpose of this article is to examine the topic of women's heroism.

Keywords: *Purananuru*, Women, Sangam Period, Villupun, Veeram.

.

References

[1] Balasubramanian, K. V. *Purananuru Moolamum Uraiyum*, New Century Book House, Chennai, 2004.
[2] *Thirukural.* Parimezhalar Urai (Text) Palaniappa Brothers, Chennai-14, Edition-2010.

 ISBN Number: 978-93-91115-19-7

[3] Iḷampūraṇar (Urai), *Tolkāppiyam* (Poruḷatikāram), Kaḻaka Veḷiyīṭu, Cheṉṉai, 1967.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

புறநானூற்றில் மகளிர் வீரம்

முனைவர் நா. குமாரி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
அக்சிலியம் கல்லூரி, வேலூர், தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-7889-6164
DOI: 10.5281/zenodo.11118502

ஆய்வுச்சுருக்கம்

சங்கத் தொகை நூல்களில் தமிழர் மிகவும் ஏற்றிப் போற்றும் தனிச்சிறப்பும் பெற்றது புறநானூறு. புறப்பொருள் பற்றிய 400 பாடல்களைக் கொண்டதால் புறநானூறு எனப் பெயர் பெற்றது. இந்நூலை ஏறத்தாழ ஐம்பத்தேழு புலவர்கள் பாடியுள்ளனர். பல்வேறு காலத்தைச் சார்ந்த புலவர்கள் பல்வேறுபட்ட குலத்தைச் சார்ந்தவர்கள் இந்நூலைப் பாடினார். ஔவையார், காக்கைப் பாடினியார், ஒக்கூர் மாசாத்தியார், வெண்ணிக்குயத்தியார், நக்கண்ணையார், மாறோகத்து நப்பசலையார், வெறி பாடிய காமக்கண்ணியார் போன்ற பதினைந்துக்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் இந்நூலைப் பாடியுள்ளனர். இந்நூல் தமிழர்களின் பண்பாடு, வீரம், கொடை, விருந்தோம்பல், ஒழுக்கம், புலமை, நம்பிக்கை, பழக்க வழக்கம், அரசியல் போன்ற செய்திகளைத் தெரிவிக்கின்றது. இவற்றுள் மகளிர் வீரம்

 ISBN Number: 978-93-91115-19-7

என்னும் தலைப்பில் ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

குறிப்புச் சொற்கள்: *புறநானூறு*, பெண்கள், சங்க காலம், விழுப்புண், வீரம்.

முன்னுரை

தமிழர் வரலாற்றில் வீரயுகமாக போற்றப்படும் சங்க காலத்திற்கு உரியவையாக வகைப் படுத்தப்பட்டுள்ள *எட்டுத்தொகை, பத்துப்பாட்டு* இலக்கியங்கள் காமம், வீரம் ஆகிய இரண்டு அடிப்படையான இயல்பாக்கங்களை அதிகம் வெளிப்படுத்துபவையாக அமைந்துள்ளன. இவற்றில் எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூறு பழந்தமிழர்களின் வீரத்தை வெளிப்படுத்தும் பாடல்களை உள்ளடக்கிய தொகுதியாக உள்ளது. இதில் ஏறத்தாழ நூற்று ஐம்பத்து எட்டு கவிஞர்களுடைய நானூறு பாடல்களில் நூற்று முப்பது பேர் பாடப்பட்டுள்ளனர். ஆண்மை பண்புகள் முதன்மைப்படுத்தப்பட்ட இந்நூலில் பெண்கள் தொடர்பான அறிமுகத்தையும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருப்பது சிறப்பானதாகும். குறிப்பாக ஆண் தலைமைத்துவ சமூக அளவிற்கு அக்காலத்தில் வீரம், சமூகம் மற்றும் அரசியல் சார்ந்த விடயங்களில் தாக்கம் செலுத்தியவர்களாக

 ISBN Number: 978-93-91115-19-7

இருந்துள்ளனர் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. இந்த வகையில் இவ்வாய்வானது புறநானூற்றுப் பாடல்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் மகளிரின் வீரம் நுணுகி ஆராய்வதாக அமைந்துள்ளது.

தாயின் வீரம்

தமிழகத்தில் ஆண்களைச் சிறந்த வீரர்களாக விளங்கியமைக்கு உதாரணமாய் அமைந்தவர்கள் அவர்கள் ஈன்றெடுத்த தாயே எனலாம். அவர்களை,

ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே
நன்நடை நல்கல் வேந்தற்குக் கடனே
ஒளிருவாள் அருஞ்சமம் முறுக்கிக்
களிறு எறிந்து பெயர்த்தல் காளைக்குக் கடனே

(புறநானூறு, பா. 312)

என்று பொன்முடையார் கூறுதலை அறிகிறோம். ஈன்று புறந்தருதல் என்பதற்கு மகனைப் பெற்று அவனை நோய் நொடியற்ற நல்ல உடல் வன்மை கொண்ட உரமுடைய ஒருவனாக வளர்த்தல் என்பது பொருள். எனவே ஒரு சிறந்த வீரனைப் படைப்பதிலே தாயே முதன்மைக் காரணமாக அமைகிறாள் என்பதை அறிய முடிகிறது. ஒரு பெண் ஒரு தாயைக் கண்டு நின் மகன் யாண்டுளன் என்று வினவ, அத்தாய் என் மகன் யாண்டுளனோ அறியேன்.

ISBN Number: 978-93-91115-19-7

எனினும் ஒரு புலி தங்கிச் சென்ற குகை போல அவனை ஈன்ற வயிறோ இதுதான். அவன் போர்க்களத்தே தோன்றுவான் எனக் காவற்பெண்டு உரையால் ஒரு தாய் தன் மகனை எத்தகைய வீரனாக வளர்த்து உள்ளார் என்பதை,

சிற்றில் நற்றூண் பற்றிநின் மகன்
யாண்டு ளனோவென வினவுதி; என்மகன்
யாண்டுள னாயினும் அறியேன்; ஓரும்
புலிசேர்ந் துபோகிய கல்லளை போல,
ஈன்ற வயிறோ விதுவே;
தோன்றுவான் மாதோ போர்க்களத் தானே !

(புறநானூறு, பா. 86)

என்ற புறநானூற்றுப் பாடல் வரியால் அறியலாம்.

மகளிரின் வீரம்

சங்க கால மகளிர் மிகவும் நாட்டுப்பற்று உடையவர்களாக விளங்கினார். பகைவரிடமிருந்து தாய் நாட்டைக் காக்கத் தம் மக்கள், கணவர் ஆகியோரை பலி கொடுப்பதைப் பெருமையாக கருதினார். அந்த வகையில் மீன் உண்ணும் கொக்கின் சிறகு போன்ற வெண்மையான நரைத்த கூந்தலை உடைய முதியோள் தம் மகன் போர்க்களத்தில் பகைவர் யானைகளைக் கொன்று தானும் விழிப்புண்ணுடன் இறந்தான் எனக் கேட்டதும் அவள் அவனைப் பெற்று எடுத்த போது ஏற்பட்ட

 ISBN Number: 978-93-91115-19-7

மகிழ்ச்சியினும் பேருவகை கொண்டாள் எனப் புறநானூற்றுப் பாடல் தெரிவிக்கின்றது .

மீன் உன் கொக்கின் தூவி அன்ன
வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன் களிறு
எறிந்து பட்டனன் என்னும் உவகை
ஈன்ற நான்றினும் பெரிதே கண்ணீர்
நோன்கழை துயல் வரும் வெதி ரத்து
வான் பெயத்தூங்கிய சிதரினும் பலவே

(புறநானூறு, பா. 277)

இக்கருத்தை வள்ளுவரும்,

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய் (குறள் - 69)

என்கிறார்.

மறக்குடி மகளிரின் சினம்

மறக்குடி மங்கையின் துணிவு மிகவும் அஞ்சத்தக்கது. முதல் நாள் நடந்த போரில் இவளுடைய தந்தை பகைவரின் யானையைக் கொன்றதோடு தானும் இறந்தான். இரண்டாம் நாள் போரில் இவள் கணவன் பசுக் கூட்டங்களைப் பகைவர் கவரா வண்ணம் தடுத்து நிறுத்தி தானும் ஆண்டான். மூன்றாம் நாளும் போருக்குரிய முரசு ஒலியைக் கேட்டு அம்மறக்குடி மங்கை மனம் வருந்தவில்லை மாறாக மகிழ்ச்சியுடன் தனக்கு ஆதரவாக இருந்த தம் ஒரே மகனை

ISBN Number: 978-93-91115-19-7

அழைத்தாள்.வெண்மையான ஆடையை அவனுக்கு உடுத்தினாள். வேலைக் கையிலே தந்தாள். பரந்து கிடந்த குடிமித் தலைக்கு எண்ணெய் தடவினாள். போர்க்களம் நோக்கிப் போய்வா எனக் கூறினாள். இப்பெண்ணின் வீரத்தை,

கெடுக சிந்தை கடிது இவள் துணிவே
மூதின் மகளிர் ஆதல் தருமே (புறநானூறு, பா. 279)

என்ற பாடல் விளக்குகின்றது. வீட்டிற்கு ஒருவரை நாட்டிற்காகத் தரவேண்டும் என்பர். ஆனால் இப்பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள பெண்ணோ தன் தந்தை, கணவன், மகன் என அனைவரையும் நாட்டிற்காகப் போராட அனுப்பிய நிலை குறிக்கப்பட்டுள்ளது. இப்பெண்ணின் நாட்டுப்பற்றும் தன் பாலகனைப் போருக்கு அனுப்பிய வீரமும் வியப்பாக உள்ளது.

மனைவியின் வீரம்

வீரனின் மனைவியானவள் தாம் போர் செய்யவில்லையானாலும் போர் செய்யும் தம் கணவனுக்கு உறுதுணையாகவும் ஊன்றுகோலாகவும் செயல்பட்டிருக்கின்றாள். கை, கால், தலை என வேறுவேறாக காட்சியளிக்கும் இரத்த வெள்ளம் மிகுந்த போர்க்களம் அச்சவுணர்வைத் தோற்றுவிக்கக் கூடும். இந்நிலையில் போருக்குச் சென்ற கணவன் இன்னும் வீடு திரும்பவில்லை என்று எண்ணிய தலைவி போர்க்களம்

ISBN Number: 978-93-91115-19-7

சென்று விழுப்புண் பெற்று இறந்து கிடந்த கணவனைக் காண்கின்றாள்.

ஐயோ! என்று அலறினால் புலி வந்து கணவன் உடலைப் பற்றிக் கொள்ளுமோ என நினைத்து அவனைத் தூக்கவும் முடியாமல் அப்பெண் படும் துன்பத்தை,

ஐயோ! எனில் யான் புலி அஞ்சுவலே
அணைத்தனன் கொளினே அகன் மார்பு
எடுக்கவல்லேன் (புறநானூறு, பா. 255: 1-2)

என வன்பரணர் வெளிப்படுத்துகின்றார். இவ்வாறு போர்க்களத்திற்குச் சென்று இறந்த தன் கணவனின் உடலைப் பாதுகாப்பாக மலைப்புறத்து நிழலுக்கு எடுத்துச் செல்லும் பெண்ணின் துணிச்சல் மிக்க வீரம் போற்றத்தக்கதாகும்.

முன்னோரின் நடுகல்லை வழிபடும் பெண்ணொருத்தி, போருக்குச் சென்ற தலைவன்,

களிறு பொரக் கலங்கு, கழல் முள் வேலி,
அரிது உண் கூவல், அம் குடிச் சீறூர்
ஒலி மென் கூந்தல் ஒள் நுதல் அரிவை
நடுகல் கை தொழுது பரவும், ஒடியாது;
விருந்து எதிர் பெறுகதில் யானே; என்னையும்
ஒ … … … … … … …வேந்தனொடு
நாடுதரு விழுப் பகை எய்துக

(புறநானூறு, பா. 306)

ISBN Number: 978-93-91115-19-7

என்று வேண்டுவதன் மூலம் அம்மறக்குலப் பெண்ணின் வீரவுணர்வு வெளிப்படுகின்றது.

போர்க்களத்தில் இறந்துபட்ட தன் கணவனைக் கண்டு தனிமையில் வருந்தும் பெண்ணொருத்தி,

முன்ஊர்ப் பழுனிய கோளி ஆலத்துப்
புள்ஆர் யாணர்த் தற்றே, என்மகன்
வளனும் செம்மலும் எமக்கு, எனநாளும்
யாங்கு ஆகுவள்கொல்? அளியள் தானே!

(புறநானூறு, பா. 254: 7-11)

என தன் நிலைக்காக வருந்துவதோடு, ஒரு தாயின் நிலையில் இருந்து கொண்டு தன் கணவன் தாய்க்காகவும் வருந்தும் தன்மை போற்றுவதற்குரியதாகும்.

வீரத்தாயின் வெற்றிப் பெருமிதம்

ஒரு வயது முதிர்ந்த தாய் தன்மகனை போருக்கு அனுப்பினாள். அப்பொழுது பலர் வந்து உன் மகன் பகைவரின் படைக்கு அஞ்சி புறங்கொடுத்து மாண்டான் எனக் கூறினார். இதைக் கேட்ட தாய் என் மகன் புறமுதுகிட்டு இறந்து இருந்தால் அப்படிப்பட்ட கோழை மகனுக்கு பாலூட்டிய என் மார்பை அருத்தெறிவேன் என சூளுரைத்தாள். போர்க்களம் சென்று பார்க்கையில் அத்தாயின் மகன் மார்பில் விழுப்புண் ஏற்று இறந்து கிடந்தான். இதை கண்டவுடன் அத்தாய் மகன் இறந்த

ISBN Number: 978-93-91115-19-7

சோகத்தை மறந்து அவனைப் பெற்ற நாளிலும் பெரிது மகிழ்ந்தாள்.

நரம்பு எழுந்து உலறிய நிரம்பாமென் தோள்
படை அழிந்து மாறினன் என்று பலர் கூற
மாண்டு அமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்ட
என் முலை அறுத்திடுவேன் யான்

(புறநானூறு, பா. 278)

என்ற வரிகளால் உணரமுடிகிறது.

மகன் புறமுதுகிட்டு ஓடாத நிலைக்கண்டு தாய் மகிழ்தல்

முதுமையான மறக்குடித் தாய் ஒருத்தி தனது மகன் உயிரைக் கொடுத்துத் தும்பைப் போர் புரிந்து போர்க் களத்திலே விழுப்புண்ணுடன் வீழ்ந்து கிடப்பதைக் காணச் செல்கிறாள். வாளால் வெட்டுண்டு சிதைந்து கிடக்கும் மகனின் உடலைக் கண்டு உவகைக் கலுழ்ச்சியில் உள்ளம் கரைகிறாள். அன்பின் முதிர்ச்சியால் அவளது வற்றிய மார்பின்றும் பால் சுரக்கிறது இக்காட்சியை ஔவையார்,

இடைப்பட்ட அழுவத்துச் சிதைந்து வேறாகிய
சிறப்புடை யாளன் மாண்பு கண்டருளி
வாடுமுலையூறிச் சுரந்தன
ஓடாப் பூட்கை விடலைத் தாய்க்கே

(புறநானூறு, பா. 295)

என்ற பாடலால் அறியலாம்.

 ISBN Number: 978-93-91115-19-7

ஈன்றவள் மறநெஞ்சம்

மணந்த பொருள்களை மறந்த நரைத்த கூந்தலையும் இரவ மரத்தின் வித்தினைப் போல வெற்றி உலர்ந்த கண்ணுடைய தனங்களும் உடையவள். செம்மையான பண்புடன் முதுமையும் சேர்ந்து நிரம்பிய மறக்குலத்தாய் அவனுடைய காதல் மகன் அவன் போர் செய்யும் ஆண்மையை காணுங்கள். குடம் நிறைய இருக்கும் பாலிலே ஆய்மமகள் தன் நகத்தால் தெறிக்கும் ஒரு துளி உறைமேல் அக்குடப் பால் முழுமையும் கலக்கிக் கெடுமாறு போலப் பகைவர் பெரும்படைக்கும் அவன் ஒருவனே கலக்கம் விளைவிக்கும் நோயாகித் தோன்றுகிறானே அவன் தறுகண்மையினை எண்ணிப் பாருங்கள் என்று கூறும் மறக்குடித்தாயின் மற நெஞ்சத்தினை மதுரைப் பூதன் இளநாகனார் புலப்படுத்துகின்றார். இதனை,

நறுவிரை துறந்த நரைவெண் கூந்தல்
குடப்பால் சில்லுரை போலப் படைக்கு
நோய் எல்லாம் தான் ஆயினனே

(புறநானூறு, பா. 276)

என்ற பாடலால் அறியலாம்.

ஒரு தாயின் மகிழ்ச்சி

வாகைப் போர் முடிந்ததும் இல்லிற்கு வராமல் காலம் தாழ்த்தும் மகனை எண்ணிப் பெருமிதம்

 ISBN Number: 978-93-91115-19-7

கொள்கிறாள் தாய். பகை வேந்தனை வீழ்த்தாமல் இல்லிற்கு வர மாட்டேன் என்று தனது மகன் போரிடுவதால் அவனது தேர் இன்னும் வரவில்லை போலும் என்று வீரம்கனலும் ஆண்மையை எண்ணிப் பார்க்கும் தாயின் பெருமிதத்தை வெள்ளைமாறனார்.

வேந்துடன் நெறிவான் கொல்லோ

நெடிது வந்தன்றோ

நெடுந்தகை தேரே (புறநானூறு, பா. 278)

என்று வரிகளில் கூறுகின்றார்.

முடிவுரை

பண்டையத் தமிழர் கடமை உணர்வோடு வாழ்ந்து வந்ததையும் பெண்களின் வீரத்தையும் மற்றும் தன்னுடைய நாட்டை காக்க போருக்கு அனுப்பிய தன் மகன் உயிர் தியாகம் செய்ததை அவள் அவனை ஈன்ற பொழுதில் பெற்ற மகிழ்ச்சியை விட இன்பம் அடைந்தாள் என்று கூறுவதில் இருந்து பெண்களின் வீரத்தை பற்றி அறிய முடிகிறது.

குறிப்பு நூல்கள்

[1] பாலசுப்பிரமணியன், கு. வே. *புறநானூறு மூலமும் உரையும்*. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, 2004.

[2] பரிமேழலகர் உரை. *திருக்குறள்.* பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-14, பதிப்பு-2010.

 ISBN Number: 978-93-91115-19-7

[3] இளம்பூரணர் உரை. *தொல்காப்பியம் (பொருளதிகாரம்)*. கழக வெளியீடு, சென்னை, 1967.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-93-91115-19-7

The Bravery of Tamils as revealed in Sangam Literature

Dr. P. Sasireka, Assistant Professor of Tamil,
Guru Nanak College, Chennai - 600042, Tamilnadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-0301-0744
DOI: 10.5281/zenodo.11118528

Abstract

The glory of combining ancient Tamil civilization and culture with nature and turning it into literature belongs to the Tamils of the Sanga period. Bravery depends on physical strength and mental strength. Women are responsible for men gaining physical strength and mental strength. Sanga literature portrays women as heroic women who sacrifice their family for their country regardless of their future. The study shows that women say that the man who marries her should be brave and strong enough to subdue bulls. In order to honor the heroism of the kings and soldiers who performed heroic deeds, the sepulchral stone is taken and that war memorial headstone is worshiped as a deity. The valor of the Tamils in the Sangam period can be seen in Purananuru, Agananuru, Porunaratruppadai, Kalithokai that the Tamils were seen as brave.

Keywords: Veeramakalir, Tamilian, Sangam literature, Earuthaluval, Sepulchral stone.

References

[1] Dr Balasubramaniyan, K.V. *Puranaanooru.* NCBH P.Ltd, Chennai, October - 2011.

[2] Dr Jeyabal, R. *Akanaanooru.* NCBH P.Ltd, Chennai, Fourth Edition, October - 2011.

[3] Dr Dhatchinamoorthi, A. *Aingurunooru*. NCBH P.Ltd, Chennai, Fourth Edition, October - 2011.

[4] Dr Vishvanathan, A. *Kaliththokai.* NCBH P.Ltd, Chennai, Fourth Edition, October - 2011.

[5] Dr Mohan, A. *Paththuppaattu*. NCBH P.Ltd, Chennai, Fourth Edition, October - 2011.

[6] Dr Subramaniyan, P. *Paripaadal*. NCBH P.Ltd, Chennai, Fourth Edition, October - 2011.

[7] Prof. Manickam, A. *Thirukkural Thelivurai*. Thentral Nilaiyam, Chithambaram, July 2008.

[8] Puliyurkesikan. *Kalingaththupparani.* Paari Nilaiyam, Chennai, Second Edition: 2006.

[9] Vengatasamy Naattaar N.M., *Silappathikaram – Mathuraikkaandam.* Mullai Nilaiyam, 2006.

[10] Narayanan .K., Dr Raman .V. “Sanga ilakkiyaththil Tamilar Vilaiyattukal” IJTLLS, E-ISSN: 2581-7140, Volume - 5 issue -1, July 2022.

[11] Malar, M. “Puranaanuttril Marappenkal” IJTLLS, E-ISSN: 2581-7140, Volume - 1 issue -2, Jan. 2019.

[12] Akshiliyameri, A. “Puranaanuttril Perumitham” IJTLLS, Volume - 2 issue -1, July 2019.

Author Contribution Statement: NIL.

Author Acknowledgement: NIL.

Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

cc BY The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

சங்க இலக்கியங்களில் வெளிப்படும் தமிழர்களின் வீரம்

முனைவர் ப. சசிரேகா, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,
குரு நானக் கல்லூரி, சென்னை - 600042, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-0301-0744
DOI: 10.5281/zenodo.11118528

ஆய்வுச் சுருக்கம்

பண்டைய தமிழரின் நாகரிகத்தை, பண்பாட்டை இயற்கையோடு இணைத்து, இலக்கியமாக்கிய பெருமை சங்ககாலத் தமிழர்களையே சாரும். வீரம் என்பது உடல் வலிமை, மனவலிமை பொறுத்துதான் அமைகின்றது. ஆண்கள் உடல் வலிமையும் மனவலிமையும் பெறுவதற்கு காரணமாக இருப்பவர் பெண்களே. பெண்கள் தங்கள் எதிர்காலத்தை எண்ணாமல் தன் நாட்டுக்காக தன் குடும்பத்தையே தியாகம்செய்யும் வீரமகளிராக சங்க இலக்கியங்கள் காட்சிப்படுத்துகின்றன. பெண்கள் தன்னை மணக்கும் ஆண்மகன் வீரம் உடையவனாகவும் காளைகளை அடக்கும் (ஏறுதழுவும்) வலிமை உடையவராகவும் இருத்தல் வேண்டுமென்று கூறுவதை கலித்தொகை விளம்புகின்றது. வீரச்செயல் புரிந்த அரசர்களின், வீரர்களின் வீரச்சிறப்பை போற்றும் வகையில் நடுகல் எடுக்கப்பட்டு அந்நடுகல்லை

 ISBN Number: 978-93-91115-19-7

தெய்வமாகப் போற்றுகின்றனர். தமிழர்கள் வீரம் உடையவர்களாக திகழ்ந்ததை புறநானூறு, அகநானூறு, பொருநராற்றுப்படை, கலித்தொகை போன்ற சங்க இலக்கியங்கள் வாயிலாக சங்க காலத் தமிழர்களின் வீரச்சிறப்பை அறியமுடிகிறது.

குறிப்புச்சொற்கள்: வீரமகளிர், தமிழர்கள், சங்க இலக்கியம், ஏறுதழுவல், நடுகல்.

முன்னுரை

பண்டைய தமிழரின் வாழ்க்கையை அகம், புறம் என்று பிரித்துக் காதலையும் கற்பையும் அகமாகவும், வீரத்தையும் வெற்றியையும் புறமாகவும் சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. அரசர்களும் வீரர்களும், பெண்களும் வீரத்தை தன்னுடைய மானமாகக் கருதுவர். போரில் தோற்றதனால் பகைவனிடம் அடிமையாக இருப்பதைவிட உயிர்விடுவதே மேலென்று கருதி உயிர்விடுவர். ஒரு நாட்டின் ஆண்மகனின் வீரம் அந்தநாட்டுப் பெண்களைப் பொருத்தே அமைகின்றது. பெண்கள் தாய்ப்பாலோடு வீரப்பாலையும் ஊட்டியே வளர்க்கின்றனர். பழந்தமிழர். மறத்தாலும் பண்பாலும் சிறந்து விளங்கிய மறவர், மன்னர் முதலானோர்தம் புகழை நிலை நாட்டுவதில் நாட்டம் கொண்டு நாட்டியவையே நடுகற்கள்.

ISBN Number: 978-93-91115-19-7

அதுமட்டுமல்லாமல் காளையை அடக்கும் வீரனையே திருமணம் செய்ய விரும்புகின்றனர். அவ்வாறே பெண்களும் தாங்கள் வளர்க்கும் காளையை அடக்கும் வீரனையே மணக்கின்றனர். இத்தகைய வீரச்செயல்கள் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழர்களின் வீரம்

மனத்திண்மை வாய்ந்த வீரரை, மறவர் என்று அழைத்தனர் பழந்தமிழர்கள் வீரர்களை, 'கல்லெனத் திரண்ட தோளர், வீறிய நடையினர்' என்று போற்றுகின்றனர். போர்க்களத்தில் முன்வைத்த காலைப் பின்வைத்தலறியாத மறவரே தூய்மையான வீரர். மறக்குடி மாண்பைக் காக்கும் மாண்பாளர். வீரத்தை விளைவித்து அதனால் வரும் புகழ் பெரிதென்று கருதினர். புகழெனின் தன் உயிரையும் கொடுத்தனர். நில்லாமை நிறைந்த உலகத்தில் தன் புகழை நிறுவி விட்டுச் சென்றுள்ளமையை இடைக்குன்றூர் கிழார்,

ஒருவனை யொருவன் அடுதலும், தொலைதலும்,
புதுவ தன்றிவ் வுலகத்தியற்கை

(புறநானூறு, பா. 76:1-2)

புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்: பழிஎனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்

(புறநானூறு, பா. 182:5-6)

உட்பகை யொருதிறம் பட்டெனப் புட்பகைக்கு

ISBN Number: 978-93-91115-19-7

ஏவானாகலிற் சாவோம் யாமென

நீங்கா மறவர் வீங்குதோள் புடைப்ப…

(புறநானூறு, பா. 68:11-12)

அரசர் தன் வீரர்களுக்குப் பகைவர்களைக் குறித்துக் காட்டிப் போருக்கு ஏவாமல் காலம் வாய்க்க வில்லையென்று மடிந்திருப்பானாகில் இவ்வீரர்கள் தம்மிற்பொருதாயினும் சாகலாமென்று ஆர்ப்பரித்துத் தம்முடைய பூரித்த தோள்களைப் புடைத்துக்கொள்கின்ற செய்தி புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது.

புறப்புண்ணுக்காக உயிர் நீத்தல்

கரிகால் வளவனோடு ஒரு சமயம் பெருஞ்சேரலாதன் என்ற சேரமன்னன் கடும்போர் நிகழ்த்தினான். இதில் கரிகாலனின் வேல் சேரனின் மார்பில் தைத்து ஊடுருவி முதுகில் பாய்ந்து குருதி கொட்டியது.

தன்போல் வேந்தன் முன்புகுறித்து எறிந்த

புறப்புண் நாணி மறத்தகை மன்னன்

வாள் வடக்கிருந்தனன்; ஈங்கு,

நாள் போல் கழியல, ஞாயிற்றுப் பகலே!

(புறநானூறு, பா. 65:9-12)

புறம் காட்டாத வீரப்போரில் புறம் கொடுத்த வேதனை உற்ற வேந்தன், தன்னுடைய இறப்பால் தன் மானத்தை

ISBN Number: 978-93-91115-19-7

நாட்டிவிட்டான். இறவாதப் புகழைத் தமிழ்நாட்டிற்குச் தேடித்தந்துள்ளான். இதனை,

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின் (திருக்குறள் - 969)

என்ற திருக்குறளும்,

... செருக்களத்து முந்து தங்கண்
முதுகு வடுப்படும் என்ற வடுவை அஞ்சி
முன்னம் வடுப்பட்டாரை...

(கலிங்கத்துப்பரணி, பா. 502)

என்று கலிங்கத்துப் பரணியும் விளக்குகிறது.

கரிகாலனின் வீரம்

கரிகாலனின் வீரத்திற்கு நிலைக்களனாக அமைந்தது. அவனது வெண்ணிப்போராகும். சேர, பாண்டிய மன்னர்கள், பதினொரு வேளிர்களுடன் சோழனுக்கு எதிராகப் படைதிரண்டு வந்தனர். தஞ்சை மாவட்டத்தில் உள்ள வெண்ணி என்று அழைக்கப்படும் இடத்தில் நடைபெற்ற போரில் கரிகாலன் வெற்றிவாகை சூடினான். கரிகாலனின் வெண்ணிப் போர்பற்றி பொருநராற்றுப்படையில் மிக விரிவாக, ஏழு வரிகளில் இடம்பெற்றுள்ளன.

இருபெரு வேந்தரும் ஒருகளத்து அவிய
வெண்ணித்தாக்கிய வெருவரு நோன்தாள்

 ISBN Number: 978-93-91115-19-7

கண்ணார்க் கண்ணிக் கரிகால் வளவ!
(பொருநராற்றுப்படை, பா. 147-148)

சேரனும் பாண்டியனும் ஒரே போர்க்களத்தில் இறந்து பொரும்படி வெண்ணி என்ற ஊரின்கண் நடைபெற்ற போரில் அவரோடு போரிட்ட பகைவர் அஞ்சத்தக்க பேராண்மையினை 'கரிகால் வளவ!' என்று சிறப்பிக்கின்றது.

தோல்வியிலும் அரசர்களின் வீரச்செயல்

அரசர்கள், உயிர்போகும் நிலையிலும் மானமும், வீர உணர்ச்சியும் உடையவர்களாக இருந்தனர். புறநானூற்றில் அரசரின் வீரத்தைக் கூறும்பொழுது,

குழவி இறப்பினும் ஊன்தடி பிறப்பினும்,
ஆள் அன்று என்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபதம்,
மதுகை யின்றி வயிற்றுத்தீ தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத்தானே (புறநானூறு, பா. 74)

சோழ நாட்டை ஆண்டுவந்த செங்கணானுக்கும், கணைக்கால் இரும்பொறைக்கும் பெரும்பகை உண்டாகிப் போர் எழுந்தது. போர் முடிவில் சேரமான் தோல்வியடைந்து சோழனின் சிறையில் அடைக்கப்பெற்றான். அந்நிலையில் நீர் வேட்கையால்,

 ISBN Number: 978-93-91115-19-7

காவலர்களை நீர் கொணருமாறு பணித்தான். அவன் பணியை அவமதித்துச் சில நாழிகை கழித்துக் கொடுத்தனர். அந்த மானத்தைப் பொறாத சேர மன்னர் 'அரசராயினார் குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும், வாள் வாய்ப்பட்டு இறந்தாலன்றி நலமின்றெனக் கருதி அவற்றையும் வாளாற் போழ்ந்து அடக்கம் செய்வர். அக்குடியிற் பிறந்த யான் சிறைப்பட்டுக் கிடந்து, உயிர் நீத்தல் தீது. இத்தகைய மறக்குடியினரான எம் பகைவர்பால் உணவு இரந்துண்டு உயிர் வாழுமாறு மக்களைப் பெறார் காண்' என்று நினைந்து பாட்டை எழுதி உயிர் நீத்தான். அரசர்கள் உயிர் போகும் நிலையிலும் வீரவுணர்ச்சி உடையவர்களாக இருந்தனர்.

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கட னிறுக்கும்
பொன்போற் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடிவிடுதும் (புறநானூறு, பா. 9:1-4)

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி, பார்ப்பாரும், மகளிரும், நோயுடையோரும். பிள்ளைகளைப் பெறாதோரும் ஆகியவர்களைப் பேணிக்காப்பவன். இவனுடைய உயர்ந்த பண்பு புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது.

ISBN Number: 978-93-91115-19-7

கொலையைத் தடுக்கும் புலவனின் வீரம்

மரண தண்டனை சங்க காலத்திலும் வழக்கில் இருந்துள்ளது. அதாவது பழந்தமிழகத்தில் கழுவேற்றுதல், யானையின் காலால் தலையை இடறிக் கொல்லுதல், வாளால் வெட்டிக் கொல்லுதல், சுண்ணாம்புக் கால்வாயில் போடுதல் முதலிய வழிகளில் மரணத் தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளன. பகை மன்னனின் குழந்தைகளையும் கூட இப்படி இரையாக்க முயன்றதை,

நீயே புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை
இவரே புலன்உழுது உண்மார் புன்கண்அஞ்சித்
தமதுபகுத்து உண்ணும் தண்ணிழல் வாழ்நர்
களிறுகண்டு அழூஉம் அழாஅல் மறந்த
புன்தலைச் சிறாஅர் மன்று மருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ உடையர்
கேட்டனை யாயின்நீ வேட்டது செய்ம்மே.

(புறநானூறு, பா. 46)

கோவூர்க்கிழாரின் புறநானூற்றுப் பாடல்வழி அறியலாம். மலையமான் மகன்களை யானையின் கால்களால் நசுக்கிக் கொல்லுமாறு சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் உத்தரவிடுகிறான். அது கண்டு வருத்திய கோவூர்க்கிழார் என்ற புலவர், 'சோழ மன்னனே! ஒரு புறாவின் உடலைக் காப்பதற்காகத் தன்னையே

ISBN Number: 978-93-91115-19-7

பருந்துக்கு ஈந்த செம்பியன் (சிபிச் சக்கரவர்த்தி) பரம்பரையில் வந்தவன் நீ. இந்தச் சிறுவர்களோ கொல்ல வரும் யானையை, அது தீங்கு செய்யப் போகிறது என்பதைக் கூட உணராமல், அதைக் கண்டு மகிழும் இளம் வயதினர். பால் மணம் மாறாத பச்சிளம் குழந்தைகள் இவர்கள். நான் சொல்ல வேண்டியதைச் சொல்லி விட்டேன். இனி உன் விருப்பம்' என்று கூறினார். இதைக் கேட்ட சோழ மன்னன் மனம் மாறி மலையமான் புதல்வர்களை விடுதலை செய்தான் என்பது வரலாறு. புலவன் அரசனுக்கு அஞ்சாமல் தன்னுடைய பேச்சால் குழந்தைகளின் உயிரைக் காப்பாற்றியதைக் காணமுடிகிறது.

வீரமும் நடுகல் வழிபாடும்

வரலாறு படைத்த வீரர்களைத் தெய்வமாகப் போற்றும் மரபு மிகத் தொன்மைக் காலத்திலிருந்தே வந்துள்ளது. போர்க்களத்தில் மாண்ட வீரர்களுக்கு சிலை எடுப்பது தமிழகத்தின் தனிச்சிறப்பு. இதற்கு வீரக்கல் அல்லது நடுகல் என்று பெயர். நடுகல் அனைத்திலும் உருவச் சிற்பங்கள் காணப்படவில்லை எனினும் வரலாற்றுச் சாதனைகள் புரிந்த பலரது நடுகல்லில் இறந்தவரது உருவம் பொறிக்கப்பட்டே காணப்படுகிறது. போர்க்களத்தில் இறந்த மறவனின் உடலின் மேல் கற்களை அடுக்கி நல்லடக்கம் செய்தனர். இவ்வாறு

ISBN Number: 978-93-91115-19-7

கற்குவைகளால் மூடப்படுவதைக் 'கற்பதுகை, கற்திட்டை' எனக் குறிப்பிடுவர். போர்க்களத்தில் அம்புபட்டு ஒரு வீரன் இறந்தால் அவனது உடலைக் கற்குவியலால் மூடி ஈமக்கடன் செய்தனர். இவ்வாறு இறந்துபட்ட வீரனின் உடல்மீது குவிக்கப்பட்ட கற்பதுகையில், அவ்வீரனின் நினைவாக நடுகல் ஒன்றை நட்டு, அதில் அவ்வீரனின் பெயரினைப் பொறித்து, அதற்கு மயிற்பீலியும் மாலையும் சூட்டினர் என்பதை,

நல் அமர்க் கடந்த நாணுடை மறவர்
பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்கு நிலை நடுகல்
வேல் ஊன்று பலகை (அகநானூறு, பா. 67: 8-11)
பரலுடை மருங்கிற் பதுக்கை சேர்த்தி
மரல்வகுத்து தொடுத்த செம்பூங் கண்ணியோடு
அணிமயிற் பீலி சூட்டிப், பெயர்பொறித்து
இனிநட்டனரே!... (புறநானூறு, பா. 264:1-4)

அகநானூறும் புறநானூறும் கூறுகின்றது. மேலும் தம் குல முன்னோர்களுக்கு எடுக்கப்பட்ட நடுகல்லை மக்கள் வழிப்பட்டனர். மேலும் இந்நடுகல்லைப் போற்றுவதற்குரிய தெய்வமாகக் கொண்டாடினர்.

கல்லே பரவின் அல்லது
நெல் உகுத்து பரவும் கடவுளும் இலவே
(புறநானூறு, பா. 335:11-12)

 ISBN Number: 978-93-91115-19-7

என்ற புறநானூற்று வரியில் களிறு எரிந்து தானும் வீழ்ந்து கல்லான ஒரு பெருவீரனின் நடுகல்லைப் பார்த்து மாங்குடி மருதனார் கூறும் கூற்றால் அன்றைய தமிழ் மக்கள் நடுகல்லை, உயர்ந்த ஒரு தெய்வச் சின்னமாக வழிபட்டனர். இறந்த வீரனது பெயரினையும் சிறப்பினையும் பொறித்து வழிப்பட்டனர் என்பதை,

விழுத்தொடை மறவர் வில்விடத் தொலைந்தோர்
எழுத்துடை நடுகல். (ஐங்குறுநூறு, பா. 352:1-2)

ஐங்குறுநூறு கூறுகிறது. மேலும் நடுகல்லுக்குப் பலியூட்டி, நன்னீராட்டி, நெய்விளக்கு ஏற்றி, தீப ஆராதனைகள் செய்ததையும், நடுகல்லுக்கு சிறிய கலத்தில் மதுவைப் படைத்து வழிபட்டதையும்,

புடைநடு கல்லில் நாட்பலி யூட்டி,
நன்னீர் ஆட்டி, நெய்ந்நறைக் கொளீஇய,
மங்குல் மாப்புகை மறுகுடன் கமழும்.

(புறநானூறு, பா. 329:1-2)

நடுகல் பீலி சூட்டி, நார் அரி
சிறுகலத்து உகுப்பவும் கொள்வன் கொல்லோ…

(புறநானூறு, பா. 232:4-5)

புறநானூற்றுப் பாடல் வழி அறியலாம்.

குலமரபின் வழிபாட்டு முறையில் நடுகல் வழிபாட்டைக் காட்டிலும் சிறந்த வழிபாட்டு முறை வேறொன்றுமில்லை என்பதை மேற்கண்ட பாடல் வரிகள்

 ISBN Number: 978-93-91115-19-7

விளக்குகின்றன. இவ்வாறே 'பொருது பட்டான் இன்னான்' என்று அவன் பெயரை உலகமறிய எழுதி, மராமரத்தின் நிழலிலே நட்டு, அதனைத் தெய்வமாகப் போற்றுவதை மலைப்படுகடாம் எடுத்துக் கூறுகிறது.

... பெயர் மருங்கு அறிமார்
கல்லெறிந் தெழுதிய நல்லரை மராஅத்த
கடவுள்... (மலைபடுகடாம், பா. 394 - 396)

களத்தில் பொருதுபட்ட வீரர்களின் நினைவாக நிற்கும் இந்நடுகற்களில் மாண்ட வீரனது உருவம் திகழும், பெருவீரன் கரத்தில் வில்லோ வாளோ அன்றிச் சூலமோ ஏந்தி வீரப்போர் புரிவதுபோன்று உருவம் பொறிக்கப்பட்டிருக்கும். அருகில் மங்கலச் சின்னங்களும் காணப்படும். சில வீரர்களுடன் துணையாக இருக்கும் நாய் போன்ற விலங்கினங்கள் கூட வீரர்களின் உருவங்களுக்கு அருகே இடம்பெற்றிருந்ததை, **கிடுகு நிரைத் தெஃகூன்றி நடுகல்லின் அரண்போல (பட்டினப்பாலை, பா. 78-79)** பட்டினப்பாலை பாடல் மூலம் அறியலாம். அக்காலத்தில் குணத்திலோ, செயலிலோ ஒருவன் மேம்பட்டு நிற்பானாகில் இறைவனுக்கு ஒப்பாகக் கூறுவது மரபு. வீரநிலைத் துறக்கம் எய்தல் வீரர்களுக்கு மட்டுமே எளிது. மற்றவர்களுக்கு அரிது. வெற்றிபெற்றால் தான் வீரம் என்பது கிடையாது. போரில் தோல்வியுற்றவனும்

ISBN Number: 978-93-91115-19-7

விழுப்புண் அடைந்தாலும் அவன் அழியாப் புகழை அடைகிறான்.

போரில் வீர மரணம் அடையும் வீரரின் நினைவாக நடுகல் நடப்பட்டன. அதற்கு வழிபாடுகள் நடத்தப்பட்டன. அவற்றின் அருகில் கேடயங்களும், ஈட்டிகளும் வைக்கப்பட்டு தெய்வங்களாகவே வணங்கப்பட்டு வருகின்றன.

நல்லிசைப் பெயரோடு நட்ட
கல் ஏசு கவலை எண்ணுமிகப் பலவே.

(மலைபடுகடாம், பா. 388-389)

நடுகற்களின் மூலம் வீரர்களைத் தெய்வமாகவும், கிராமப் புறங்களில் குலதெய்வமாகவும் இன்றும் வழிபடுகின்றனர். இவ்வாறு நடுகற்களை தெய்வமாகக் கருதி வழிப்பட்டனர் என்பதை புறநானூறு பாடல்வழி அறியலாம்.

வீரமும் பண்பாடு சார்ந்த விளையாட்டும்

ஏறு என்பது காளை மாட்டைக் குறிக்கும். மனிதர்கள் அடக்குவது அல்லது கொம்பைப் பிடித்து வீழ்த்துவதான விளையாட்டு சல்லிக்கட்டு. இவ்விளையாட்டு ஏறுதழுவல் என்னும் பெயரிலேயே சங்ககாலம் முதல் தமிழகத்தில் நிகழ்ந்து வருகிறது. வீறு கொண்டு திமிறி எழும் ஏறுகளை அதன் திமிலைப் பிடித்து தழுவி தனக்கு இணக்க மாக்கிக் கொள்வதே

ISBN Number: 978-93-91115-19-7

இவ்விளையாட்டின் அடிப்படை. அவ்வாறு தமிழர்களின் வீரவிளையாட்டுகளில் ஒன்றான ஏறுகோடல், சல்லிக்கட்டு என்ற பெயரில் மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் மற்றும் பாலமேடு ஆகிய ஊர்களிலும் புதுக்கோட்டை மாவட்டம் நார்த்தாமலை மற்றும் தேனீமலை போன்ற ஊர்களிலும் ஆண்டுதோறும் தை மாதத்தில் பொங்கல் திருநாளையொட்டி நடத்தப்படுகின்றது. சங்ககாலத்தில் ஆனிரைகளைக் காக்கும் ஆயரின் வீரத்தை வெளிப்படுத்தும் இந்த ஏறுகோடல், விளையாட்டு.

சீறு அரு முன்பினோன் கணிச்சி போல் கோடு சீஇ
ஏறு தொழூஉப் புகுத்தனர் இயைபுடன் ஒருங்கு
அவ் வழி முழக்கு என இடி என முன் சமத்து
ஆர்ப்ப... (கலித். முல்லைக்கலி, பா. 101:8-10)

கொம்புகள் சீவப்பட்ட ஏறுகள் இருக்கும் தொழுவினுள் தம்மைப் பகைத்துவரும் எருதுகளைத் தழுவித் தம் ஆற்றலை நிறுத்துவதற்காக, ஒருங்கே சென்று புகுந்தனர் ஆயர்கள். அவ்விடத்திலே, இடிமுழக்கம்போல ஆரவாரம் எழ, 'ஏறு தழுவியவர்க்கே மகளைத் தருவோம்' எனற ஆயர்குல வழக்கப்படி ஏறு தழுவ முன்வந்தனர். ஏறு தழுவியவனின் வீரம் மட்டும் அல்லாது அவ்வெருதுகளின் வீரமும் முல்லைக்கலியில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. ஏறு தழுவும் ஆற்றலும் ஆசையும் உடையவனாக

ISBN Number: 978-93-91115-19-7

இருந்தாலும், தழுவும் முறையறியாது சென்ற ஒருவன், ஏற்றைத்தழுவ முயன்று இயலாது சாய்ந்து நிலத்திலே வீழ்ந்தான். அவன் நிலையைக் கண்ட அந்த எருது, தம் முன்னே புண்பட்டு வீழ்ந்தவன், ஆதலின் அவன்மேற் செல்லாது திரும்பிவிடும். மிகுந்த கொடும்போரிலே வாள் எல்லையில் வந்து அகப்பட்ட ஒருவனைக்கூட 'என் நிலைக்குத் தகுதியற்றவன் இவன் இவனைக் கொல்லேன்' என விட்டுச் செல்லும் மறவர் தலைவனைப் போன்றிருக்கின்றது என்று ஏற்றின் செயலை முல்லைக்கலி எடுத்துக்காட்டுகிறது.

கோள் வழுக்கித் தன் முன்னர் வீழ்ந்தான்மேல் செல்லாது
மீளும் புகர் ஏற்றுத் தோற்றம் காண் மண்டு அமருள்
வாள் அகப்பட்டானை ஒவ்வான் எனப் பெயரும்
மீளி மறவனும் போன்ம்.

(கலித். முல்லைக்கலி, பா. 104:46-50)

தொழுவத்தினுள் அந்த ஏறுகளைத் தழுவுவதற்கு விரும்பி விரும்பிக் குதித்த ஆயர்களை இன்னின்னார் எனத் தெரிந்து தெரிந்து அந்த ஏறுகள் குத்தின செய்தியைக் காட்சிப்படுத்திக் காட்டுவதிலிருந்து காளையின் வீரத்தினையும், தலைவனின் உயரிய வீரத்தையும் அறிய நல் வாய்ப்பாக அமைகிறது. கொடிய

 ISBN Number: 978-93-91115-19-7

போர் ஏற்றைத் தழுவி வெற்றி பெற வேண்டும். இல்லையேல் அவளது அழகு மேனியை அவன் தீண்ட இயலாது. இதன் தொடர்ச்சியாக தலைவன் திமிறி எழுந்த காளையை அடக்கியதால், தனது திருமணம் உறுதி செய்யப்பட்டதை மகிழ்ந்து கூறுவதாகப் பின்வரும் பாடல் அமைகிறது.

> **இன்று எவன், என்னை எமர் கொடுப்பது அன்று,**
> **அவன் மிக்குத்தன் மேற்சென்ற செங்காரிக்**
> **கோட்டிடைப் புக்கக்கால் புக்கது, என் நெஞ்சு?**
> **(கலித்தொகை, பா. 105)**

காளைகள் கட்டுக்கடங்காமல் துள்ளி எழுந்து வந்தன. அதனால் தூசித் துகள்கள் பறந்து வானத்தையே மறைத்தது. அத்தகைய சூழலில் அக்காளைகளை அடக்குவதற்கு ஆடவர் பலர் முயன்று அதன் கொம்புகளைத் தங்களது மார்பில் ஏற்றனர். அக்காளைகள் ஆடவரின் தழுவலுக்கு அடங்கி தலை கவிழ்ந்தன. இத்தகைய வீரம் பொதிந்த காட்சியைக் கண்ட பலரும் அடுத்து என்ன நிகழும் என்று கலங்கினர். இத்தகைய சூழலில் காளைகள் தம்மை விரும்பி விரும்பி அடக்க முயலும் வீரர்களைத் தெரிந்து தெரிந்து இனம் கண்டு குத்திக் கிழித்ததாகப் பின் வரும் பாடல் குறிக்கிறது.

ISBN Number: 978-93-91115-19-7

தொழுவினுள், புரிபு புரிபு புக்க பொதுவரைத்
தெரிபு தெரிபு குத்தின ஏறு. (கலித்தொ., பா. 103)
தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார் எழுவரிளங்
கோதை யார்
என்றுதன் மகளை நோக்கித் தொன்றுபடு
முறையால் நிறுத்தி
இடைமுது மகளிவர்க்குப் படைத்துக்கோட்
பெயரிடுவாள் (சிலம்பு. ஆய்ச்சியர் குரவை, பா. 5)

கலித்தொகை மட்டுமல்லாமல் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையிலும் ஏறுதழுவல் பற்றிய காட்சி இடம்பெற்றுள்ளது. இவ்வருணணை பெரும்பாலும் முல்லைக்கலியைப் பின்பற்றி அமைந்துள்ளது. கண்ணகி ஆயர்பாடியில் தங்கியிருந்தபோது மாதரி சிறுமியர் எழுவரை வரவைத்து குரவைக் கூத்து ஆடும்படி பணிக்கின்றாள். அப்போது அவர்கள் ஏழு காளைகள் சிறுவயதிலிருந்து வளர்ப்பது போலவும் உரிய பருவம் வரும்போது அவ்வேற்றை அடக்கும் ஆடவரை மணப்பது போலவும் நடித்துக் குரவைக் கூத்தாடு கின்றனர். இச்செய்தி சிலப்பதிகாரத்தில் காணப்படுகிறது.

பெண்களின் வீரம்

வீரம் என்பது உடல் சார்ந்ததா? அல்லது உள்ளம் சார்ந்ததா? ஆண்களுக்கு மட்டும் உரித்தானதா? மகளிருக்கு இதில் பங்கில்லையா? என்கிற பல்வகை

 ISBN Number: 978-93-91115-19-7

வினாக்களுக்கு விடையளிப்பது போல் சங்க இலக்கியத்தில் இடம்பெற்றுள்ள சில பாடல்கள் பெண்களின் வீரம் பற்றி விளக்குகின்றன.

சிற்றில் நற்றூண் பற்றி, நின்மகன்
யாண்டுள னோ? என வினவுதி; என்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன்; ஓரும்
புலி சேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே; தோன்றுவன் மாதோ,
போர்க்களத் தானே! (புறநானூறு, பா.86)

என்ற பாடலில் காவற் பெண்டு நின்மகன் எங்கே? என்று கேட்பவர்க்கு, "புலி சிறிது காலம் தங்கியிருந்த குகை என் வயிறு. அவன் இப்பொழுது போர்க்களத்தில் இருப்பான்" என்று கூறுவதிலிருந்து போர்க்களத்திற்கு அனுப்பு வதற்குப் புலிகளைச் சுமந்தனர் மகளிர். மன வலிமையும் மறப்பண்பும் உடையவராக இருந்துள்ளனர். ஒரு பெண் முதல்நாள் நடந்த போருக்குத் தன் தந்தையை அனுப்பி அவன் பலியான பின், தன் கணவனைப் போருக்கு அனுப்புகிறாள். அவனும் களத்திலே மாண்டுவிட்டான் என்கிற செய்தி கேட்டு அடுத்த நாள் நடக்கும் போருக்குப் பால்மணம் மாறாத மகனை அனுப்பினாள் என்பதை ஒக்கூர் மாசாத்தியார் பாடுகிறார். மகனைப் போருக்கு அனுப்புவது என்பது மனவலிமை கொண்ட மகளிரால் மட்டுமே முடியும் என்பதோடு உடல் வலிமை

ISBN Number: 978-93-91115-19-7

கொண்டவர் போரிட வேண்டுமென்றால் அவருக்கு மன வலிமை உடைய மகளிர் துணை வேண்டும் என்பதையும் காட்டுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. போர்க்களத்திற்குச் சென்ற மகன் பகை வென்று புகழ் சூட வேண்டும் அன்றி மார்பகத்தே புண் பெற்றுக் களத்திலே மடிய வேண்டும் என்கிற உயரிய கொள்கை உடையவராய் மகளிர் இருந்தனர், மகன் களத்தே புறங்காட்டி மாளுதல் தன் குடிக்குப் பெரும் இழுக்கு என்று கருதும் இயல்பு மகளிரிடம் இருந்ததை,

முலைஅறுத் திடுவென், யான்' எனச் சினைஇக்,
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்,
செங்களம் துழவுவோள், சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ,
ஈன்ற ஞான்றினும் பெரிதுஉவந் தனனே!

(புறநானூறு, பா. 278)

காக்கைப்பாடினியாரின் பாடல் காட்டுகிறது. இதில் மகன் களத்தே புறமுதுகு காட்டி மாண்டுக் கிடக்கிறான் என்பதைக் கேட்ட தாய் அவனுக்குப் பால் கொடுத்த கொங்கைகளை அறுத்தெறிவேன் என்று புறப்பட்டு, களத்தே மார்பில் புண்பட்டு மாண்டு கிடப்பதைக் கண்டு 'ஈன்ற பொழுதினும் பெரிது' என மகிழ்ந்தாள். சங்ககால மக்கள் வீரர்களாய் விளங்குவதற்கும், ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தந்தவர்களாகவும், வளர்கிற ஆடவர்

 ISBN Number: 978-93-91115-19-7

நெஞ்சில் வீரத்தை விதைப்பவர்களாகவும் மகளிர் இருந்தனர் என்பதை அறியமுடிகிறது.

போர்க்களத்தில் பெண்கள்

பெண்கள் பாசறைக்குச் செல்லும் வழக்கம் பண்டைக் காலத்தில் இருந்தது. அரசன் போருக்குச் செல்லும்போது பெண்களையும் அழைத்துச் செல்வான். அப்பெண்கள் இரவு நேரங்களில் அரசனுடைய படுக்கையறையைப் பாதுகாக்கும் காவலர்களுக்குத் துணை செய்வர். பாசறையில் உள்ள விளக்கு அணையாமல் பார்த்துக்கொள்வர். அவர்கள் தற்காப்புக்காக வாளாயுதத்தையும் வைத்திருப்பர்.

குறுந்தொடி முன்கைக், கூந்தல் அம்சிறுபுறத்து
இரவுபகல் செய்யும் திண்பிடி ஒள்வாள்
விரவு வரிக்கச்சில் பூண்ட மங்கையர்
நெய்யுமிழ் சுரையர், நெடுந்திரிக் கொளீஇக்
கையமை விளக்கும் நந்துதொறும் மாட்ட

(முல்லைப்பாட்டு, பா.45-49)

இதனால் பண்டைக் காலத்தில் பெண்களும் போர்க்களம் புகுந்தனர். வாள் யுத்தம் செய்யும் வல்லமையும் பெற்றிருந்தனர் என்பதை அறியமுடிகிறது.

ஆயர் மகளிரின் வீரப்பண்பு

திமிறி வருகின்ற காளையின் கொம்புகளைப் பிடித்து அதனை அடக்க அஞ்சும் ஆண்மகனை முல்லை

ISBN Number: 978-93-91115-19-7

நில ஆயர் பெண்கள், 'இந்தப் பிறவியில் மட்டும் அல்ல மறுபிறவிலும் மணக்க விரும்ப மாட்டர்கள்' என கலித்தொகை குறிப்பிடுகின்றது.

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்

புல்லாளே ஆயமகள். (கலித்தொகை, பா.103)

இப்பாடல்வழி முல்லை நிலத்து திருமணவாழ்வில் தனக்கான தலைவனை தலைவி தேர்ந்தெடுக்கும் உரிமையைப் பெற்றிருந்தாள் என்பதுடன் காளையை அடக்கிய வீரனையே மணக்க விரும்பினாள் என்பதும் புலப்படும். சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையில், **மல்லல் மழவிடை ஊர்ந்தாற்கு உரியள். இம் முல்லையம் பூங்குழல் தான். (சிலம்பு. ஆய்ச்சியர் குரவை, பா. 8)** என்று குறிப்பிடப்பிடுவதைக் கொண்டு ஏறுதழுவலின் வாயிலாக வீரத்தை வெளிப்பட்டதை அறியமுடிகிறது.

முடிவுரை

பழந்தமிழர், தம் உயிரைவிட என்றும் இறவாப் புகழையே பெற விரும்பினர். நடுகற்கள் எழுப்பப்பெற்றதன் காரணம் தமிழர்தம் அப்புகழ் நாட்டமே. அதனால்தான் சான்றோர் இறந்துபட்டபின் அவர்தம் உடல் எரியூட்டப்பெற்றுக் காற்றில் கரைந்துவிடுவது போன்றோ அல்லது தாழிகளில் அடக்கம் செய்யப்பெற்று மண்ணுக்குள் அழுந்திவிடுவது போன்றோ, அவர்தம் புகழும் மறைந்துவிடாமல்

ISBN Number: 978-93-91115-19-7

காப்பதற்காக, என்றும் அழியாத வகையில் நடுகல்நாட்டி அச்சான்றோரின் பெயரையும் புகழையும் அக்கல்லில் செதுக்கிவைத்தனர். பெரும்போர்களில் இறந்துபட்ட மறவர், மன்னர், வேந்தர் எனப் புகழ்பெற்ற அனைவர்க்கும் நடுகல் எடுக்கப்பெற்ற போக்கினைப் புறநானூறும் அகநானூறும் உணர்த்துகின்றன.

தமிழர்கள் போரை விரும்புபவர்களாகவும், போர் வெறி கொண்டவர்களாகவும், வெஞ்சினம் கூறி போருக்குப் புறப்படுபவர்களாகவும் இருந்தனர். ஏறுகளைத் தழுவி விளையாடும் விளையாட்டு சங்ககாலத்திற்கு முன்பே பெருவழக்காக இருந்தமையும், தமிழர் தம் திருமண முறையில் ஏறு தழுவலுக்குச் சிறப்பிடம் அளித்ததையும், மாடுபிடி வீரர்களையே தமிழ்ப் பெண்கள் சிறந்த ஆண்களாகக் கருதி மணம் புரிந்துள்ளதையும் சங்க இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன. வீர முடையவர்களாகவும் பாசறைக்குச் செல்லக் கூடியவர்களாகவும் பெண்களும் இருந்துள்ளனர் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது.

துணை நூற்பட்டியல்

[1] முனைவர் பாலசுப்பிரமணியன் .கு.வெ. *புறநானூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, அக்டோபர் 2011.

 ISBN Number: 978-93-91115-19-7

[2] முனைவர் ஜெயபால், இரா. *அகநானூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, நான்காம் பதிப்பு, அக்டோபர் 2011.

[3] முனைவர் தட்சிணாமூர்த்தி, அ. *ஐங்குறுநூறு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, நான்காம் பதிப்பு, அக்டோபர் 2011.

[4] முனைவர் விசுவநாதன், அ. *கலித்தொகை.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, நான்காம் பதிப்பு, அக்டோபர் 2011.

[5] முனைவர் மோகன், இரா. *பத்துப்பாட்டு.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, நான்காம் பதிப்பு, அக்டோபர் 2011.

[6] முனைவர் சுப்பிரமணியன், பெ. *பரிபாடல்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, நான்காம் பதிப்பு, அக்டோபர் 2011.

[7] பேராசிரியர் மாணிக்கம், அ. *திருக்குறள் தெளிவுரை.* தென்றல் நிலையம், சிதம்பரம், 22ஆம் பதிப்பு, ஜூலை 2012.

[8] புலியூர்க்கேசிகன். *கலிங்கத்துப்பரணி.* பாரிநிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு - 2006.

[9] வேங்கடசாமி நாட்டார், ந.மு. *சிலப்பதிகாரம் – மதுரைக்காண்டம்.* முல்லை நிலையம், இரண்டாம் பதிப்பு - 2006.

 ISBN Number: 978-93-91115-19-7

[10] வீரராகவன், க. முனைவர் இராமன், வை. "சங்க இலக்கியத்தில் தமிழர் விளையாட்டுக்கள்.", தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN: 2581-7140, தொகுதி - 5, இதழ் - 1,ஜூலை 2022.

[11] மலர், ம. "புறநானூற்றில் மறப்பெண்கள்." தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், E-ISSN: 2581-7140, தொகுதி - 1, இதழ் - 2, ஜனவரி 2019.

[12] அக்ஸிலியாமேரி, அ. "புறநானூற்றில் பெருமிதம்." தமிழ்மொழி மற்றும் இலக்கிய பன்னாட்டு ஆய்விதழ், தொகுதி - 2, இதழ் -1, ஜூலை 2019.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-93-91115-19-7

Purananoottril Penparpulavargalin Veeram

P. Ragavi, Assistant Professor of Tamil,
Bon Secours Women's College, Thanjavur, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-3995-9273
DOI: 10.5281/zenodo.11118591

Abstract

Devotional Literature Goes Next to Amazing Indian Generation. Literature Has From the Time of the Tamil association to the present Day. Among them is concentration and Imagination in the sangam literary eight Book one of the Purananooru. Only those who learn literature can think with social concern and work mind. We are see our poetly if the Female scholars are so Heroic, the warriors are astonishingly fighting Thought to Narrate the poetry. it is very creative Thing of our old poet female leader's motivational to our normal ladies. the fortress where the ancient people lived, the fortress of the wedding ceremony of the wedding rotual of superstition, Donority, Special Sequence, cultural virtuality, but also the war, therefore this article is about how women with heroism and how to foster milk, heroism, wisdom, and sense of duty foster the nature.

Keywords: Heroism, Scholar, Women, War, Ianuguration, Affectin, Morality.

References:

[1] R. Kumar. *Purananooru Moolamum Uraiyum*. Nalnilam Publisher, Chennai - 600017.

[2] Tamilaringar Sami Sidhambaranar. *Sanga Ilakkiyamum Pandaiya Tamilarum*. Masaru Publication, Triblecani - 600005.
[3] P. T. Srinivasa Ayyangar. *Tamilar Varalaru Tamilakkamum Thiranaaivum*. Ramaiya Publiucation, Chennai - 600014.
[4] Dr. Devira (Rajendran). *Tamil Illakkiya Thagaval Kalanchiyam*. Sri Nandhini Publications, Chennai - 600101.
[5] Dr. Bakya Mery. *Vagaimai Nokkil Tamil Illakkiya Varalaru.* Poovendhan Publications, Chennai - 600004.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

ISBN Number: 978-93-91115-19-7

புறநானூற்றில் பெண்பாற்புலவர்களின் வீரம்

ப. ராகவி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர், தமிழ்நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/0000-0002-3995-9273

DOI: 10.5281/zenodo.11118591

ஆய்வுச் சுருக்கம்

பழங்காலத்திற்கு அடுத்த இடைக்காலத்தில் பக்தி இலக்கியங்கள் தமிழைப் பார் வியக்கப் போற்றி வளர்த்தன. சங்ககாலம் முதல் தற்காலம் வரை இத்தமிழ் மண்ணில் நின்று நிலவும் இலக்கியங்கள் பல. அவற்றுள் கருத்துச்செறிவும், கற்பனை வளமும் பெற்றுத் திகழ்வது சங்க இலக்கிய எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான புறநானூறு. இலக்கியத்தைக் கற்பவர்களால் மட்டுமே சமுதாய அக்கறையுடன் சிந்திக்கவும், மனத்திட்பத்தோடு செயலாற்றவும் முடியும் என்பதற்கேற்றார் போல பெண்பாற் புலவர்களுக்கும் எந்த அளவுக்கு வீரமிகுந்த சிந்தனையும், எழுச்சியும் இருந்தால் போர் வீரர்கள் வியக்கத்தக்க வகையில் போர் புரிகின்றனர் என்பதை தம் பாடல் வரிகள் மூலம் நமக்குக் கொடுத்துள்ளனர் என்பது சிந்திக்கற்பாலது. பழந்தமிழக மக்கள் வாழ்ந்த கொடை, சிறப்பு, பண்பாடு, திருமணச்சடங்கு முறை, மூடநம்பிக்கை போர் முதலியவைகள் பெற்றுத் திகழ்ந்தது

மட்டுமல்லாமல் வீரத்தோடும் பெண்கள் எவ்வாறு பாலுடன் பண்பையும், வீரத்தையும், விவேகத்தையும், கடமை உணர்வையும் ஊட்டி வளர்த்த சிறப்பினை வெளிப்படுத்தும் விதத்தை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையாகும்.

குறிப்புச்சொற்கள்: வீரம், புலமை, பெண்பால்,போர், ஆற்றாமை, பாசறை, எழுச்சி, அறம்.

முன்னுரை

சங்ககாலத் தமிழர்களின் வாழ்வியல் நெறிமுறைகளை அறிய பெரிதும் உதவுபவை அக்காலத்தில் எழுந்த இலக்கியங்களே. இவ்விலக்கியங்களுள் புறச்செய்திகளை செம்மையுற வழங்கும் அறிய நூல் புறநானூறு. இந்நூலில் குறிப்பிடப்படும் சமூக வாழ்வு, அறநெறிகள், பண்பாட்டுக் கூறுகள், ஒழுகலாறுகள், வீரத்தின் சிறப்புகள், விவேகத்தின் பண்பு உணர்வுகளை அடிப்படையாகக் கொண்டு எடுத்துரைக்கிறது. அவ்வகையில் புறநானூற்றில் இடம்பெறும் பெண்பாற் புலவர்களை வகைப்படுத்தி அவர்களின் புலமைத்திறத்தையும், வீரத்தின் சிறப்பினையும், விவேகப் பாங்கினையும் எடுத்துரைத்து ஆய்வதே இவ்வாய்வு கட்டுரையாகும்.

ISBN Number: 978-93-91115-19-7

பாடப்பெற்ற புரவலர்கள் தொகை

புறநானூற்றில் பாடப்பெற்ற புரவலர்கள் உதயஞ்சேரலாதன் முதல் சோழன் நலங்கிள்ளி வரையாக உள்ள நூற்று முப்பத்தினான்கு பேர் ஆவார். இந்நூலில் அதிகம் பாடிய புலவர்களாக நாற்பத்தொன்பது புலவர்களும், அவர்கள் பாடிய பாடல்களாக இருநூற்று எழுபத்தைந்து பாடல்களும் காணப்படுகின்றன.

உரைச்சிறப்பு

புறநானூற்றின் பழைய உரையில் பதப்பொருளை நன்றாக விளக்கி, உரிய இடங்களில் சொற்களை முடித்துக்காட்டி இலக்கணக் குறிப்பையும், திணை துறைகளையும், பழமொழிகளையும், அணிகளையும், சொல்நயம், பொருள் நயங்களையும் புலப்படுத்துகின்றது.

வீரமும் போரும்

தலைமை பூண்ட மன்னரும் போர்த் தொழிற்குரிய மறவரும் இவரன்றிப் பெண்டிரும் வீரப்பண்பை ஏனைய பண்புகள் யாவற்றிலும் தலைச்சிறந்ததாகக் கருதும் நிலையைப் புறநானூறு காட்டுகிறது. ‘வாடுக விரைக நின் கண்ணி யொன்னர், நாடு சுடு கமழ்புகை யெறிந்த லொனே’ என மாற்றார் நாட்டைத் தீ மடுத்த புகழ் பாடுவர். புகழுக்கு மாறாக இகழ்ச்சி வருகின்ற நிலையை பாண்டிய வேந்தர்கள் மானக்கேடாகக் கருதி போர் புரிந்துள்ளனர். தலையானங்கானத்துச் செருவென்ற

 ISBN Number: 978-93-91115-19-7

நெடுஞ்செழியன் தன்னைப் பகைவேநதர் இறையன் எனக் கூறிப் பழித்தமை பொறாது வஞ்சின முரைத்துப் போர் புரிந்ததாகக் கூறப்படுகிறது. எல்லோரோடும் ஒப்ப நில்லாது போரெல்லையாக நிற்கும் பெருமித உணர்வே வீரமென்றும், இவ்வுணர்வு கல்வி, தருகண், இசைமை, கொடை ஆகிய நாற்பண்பு பற்றி பிறக்குமென்றும் கூறுவர். போர்குணம் மிக்க ஆடவரை வீரர், மறவர், மள்ளர், பொருநர், மழவர் எனப் பல சொற்களில் குறிப்பதன்றியும், புலி, சி;ங்கம், சிறுத்தை ஆகியவற்றோடும் வெள்ளம், தீ, ஆகியவற்றோடும் உவமித்தும் உருவகித்தும் புலவர்கள் பாடியுள்ளனர்.

போர் அறங்கள்

பண்டைத் தமிழர் போர் மேற்கொள்ளினும் அதனையும் அறவழியிலேயே நிகழ்த்தினர். போர்க்களத்தில் பகைவரோடு போரிடும்போது அறநெறிகளையே பின்பற்றினர். பண்டைத் தமிழகத்தில் நிகழ்ந்த போர்களை வெம்போர் என்றும், நற்போர் என்றும் வசையில் வெம்போர் என்றும், அறத்தின் மண்டிய மறப்போர் என்றும் இலக்கியங்கள் போற்றுகின்றன. ‘நற்போர்’என்பதற்கு அறத்தாற் பொருகின்ற போர் என்று நச்சினார்க்கினியர் கூறும் உரையும் இக்கருத்திற்கு அரண் செய்கிறது. போர் தொடங்குவதற்கு முன்னால் போர் செய்யப் போவதை

ISBN Number: 978-93-91115-19-7

வெளிப்படையாக முரசறைந்து பகைவர்க்குத் தெரிவித்தல் மரபாக இருந்தது.

பெண்பாற் புலவர்கள் ஓர் அறிமுகம்

பண்டைத்தமிழர் வாழ்வை விளக்கும் சங்க இலக்கியம் ஒரு கருத்துக் கருவூலம் ஆகும். எட்டுத்தொகை இலக்கியங்களுள் ஒன்றாகியப் பறநானூறு மக்கள், தம் வீரம், கொடை, கல்வியை எடுத்துக்காட்டுகிறது. சங்கச் சமுதாயம் புலவர்களுக்கு கொடுத்திருந்த உரிமைகள் அவர்கள் பாடல்களின் வழியாக அறியப்படுகிறது. அதிலும் குறிப்பாக பெண்பாற் புலவர்கள் சமுதாயத்தில் பெற்றிருந்த சிறப்பு, அக்காலப் பெண்கள் கல்வியிலும், கலையிலும் மேம்பட்ட நிலையை எடுத்துரைக்கிறது. அரசர்கள் தன்நிலை தவறியபோது அவர்களுக்கு அறிவுரையும் கூறித் திருத்தும் செம்மையான நெறிவுடையவராய் பொதுநலத் தொண்டராய் அரசியல் தூதர்களாக கடமை உணர்வோடு செயல் பட்டிருக்கின்றனர். புலமை நலமிக்க பெண்பாற் புலவர்கள் 41 பேர் சங்க இலக்கியத்தில் போற்றப்படுகின்றனர். அவர்களுள் அஞ்சொல் தேர்ச்சி பெற்றவர்களாகவும், அஞ்சா நெஞ்சமும் பொய்யா நாவும் கொண்டு விளங்கிய பெண்பாற் புலவர்கள் 18 பேர் புறநானூறில் இடம் பெற்றுள்ளனர். அவர்களுள் புகழ்பெற்ற பெண்பாhற்புலவர்கள் முறையே, அள்ளுர்

ISBN Number: 978-93-91115-19-7

நன்முல்லையார், ஔவையார், காக்கைப் பாடினியார் நச்செள்ளையார், காவற்பெண்டு, குறமகள், இளவெயினி, தாயங்கண்ணியார், நக்கண்ணையார், பாரி மகளிர், பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு, பொன்முடியார், பேய்மகள் இளவெயினி, மாறப்பித்தியார், மாறோகத்து நப்பசலையார், வெண்ணிக்குயத்தியார் ஆகியோர் ஆவர்.

வீரயுகம்

மனித இனம் வாழ்ந்த காலங்களில் வீரயுகக் காலமே பொற்காலம். உலக மொழிகளில் இப்பண்பு கொண்ட பாடல்கள் முதலில் தோன்றியுள்ளன. தம் மன்னனுக்காக போரில் வீரதிரம் புரிந்து வெற்றித் தேடித் தந்த மாவீரர்கள் வாழ்ந்த காலம் வீரயுகக் காலம், அக்காலமே பின்வந்த மரபினராலும் புகழ்ந்து போற்றப்பட்டுள்ளது. இவ்வீரர்கள் தெய்வத்தன்மை பொருந்தியவர்களாகக் கருதி வழிப்பட்டனர். வீரம் என்ற சொல்லுக்கு அரிய ஆற்றல் என்பது பொருள், அதாவது அஞ்சத்தக்கன கண்டவிடத்தும் அஞ்சாத வீர உணர்வைக் குறிக்கும். இது ஒரு வடசொல் வீர்ய என்ற அடிச்சொல்லிலிருந்து பிறந்ததாகும். அவ்வீரத்தை தமிழ்ச் சான்றோர் மறம் என்ற சொல்லிற்குப் பாவம் என்று பொருள் கூறி களங்கப்படுத்தினர் பின் மறம் என்ற சொல் வழக்கொழிய வீரம் அந்த இடத்தைப் பிடித்தது.

ISBN Number: 978-93-91115-19-7

இச்சொல்லின் வளர்ச்சியாக வாயவ, படைஞர், மறவர், மன்னர், தானையர், சான்றோர் போன்ற பல்வேறு சொற்கள் வழங்கப்பட்டுள்ளன.

'மறத்தகை மைந்தரோடு ஆண்டுப்பட்டனவே தேர்தர வந்த சான்றோர் எல்லாம்' என வீரம் என்ற சொல்லுக்கு விளக்கம் கூறப்பட்டுள்ளது. பண்டைத் தமிழ் மக்கள் வீரனையே பெரிதும் போற்றிப் புகழ்ந்துள்ளனர். காரணம் தன்னைக் காக்கவும், தன்னைச் சேர்ந்தாரைக் காக்கவும் வலிமை அவசியம். எனவே ஒரு மன்னன் தன் குடிகளைக் காக்கத் தன் வீரத்தை நிலைநாட்ட போர் செய்வதை இவ்வுலகத்து இயல்பாகக் கொண்டனர். எனவே போரிடுவது இவ்வுலகத்து இயல்பாகவே இருந்தது. எனினும் புறநானூறு மூன்று காரணங்களைக் கூறுகிறது. அவை மண்ணாசை, பெண்ணாசை, ஆதிக்க வெறி என்பன. இந்நூலிடத்துப் போர்கள் பல குறிப்பிடப் பட்டிருப்பினும் சிறப்பானவை வெண்ணிப் பறந்தலைப் போரும், தலையாலங்கானத்துப் போரும் ஆகும். மண்ணாசையால் அரசன் போர் செய்ததை, 'இடம் சிறிது என்னும் ஊக்கந் துரப்ப' என்ற கபிலரின் பாடல் உணர்த்தும்.

போரிலே சாவதே புகழ் மரணம்

எதிர்த்தள் எல்லாம் வீழ், நீ விழுப்புண் பெற்று விட்டாய்! இனி வெல்லுவதற்குப் போரெங்கே

ISBN Number: 978-93-91115-19-7

இருக்கிறது என்கிறது பாடல். இப்பாடல் பாடியப் புலவர் ஔவையார். வாரால் இறுக்கிக் கட்டப்பட்ட போர் முரசும் எழுப்புகின்ற ஒலிக்கேட்டுச் சென்று, போர் வெல்லுதல் இனியேது? நின்னோடு போரிட வந்தவர்கள் நின் கொடிப்படைக்கு ஆற்றாது சிதறியழிந்தனர். போரிலே ஈடுபட்டு வீர மரணம் விழுப்புண் பெறாமல் கிடப்பவர் உடலை, அவர் உயிராசை நீங்கத் தடுப்பையிலே கிடத்தி போரிலே ஈடுபட்டு வீர மரணம் அடைந்த மேலோர் போரும் புகழுலகம் சென்றசையட்டும் என்று, வாளால் வெட்டிப் பின் அடக்கம் செய்கின்ற இழிவிலிருந்து தப்பினர்.

போரில் புலவரின் வீரவாழ்வு

போரில் புலவர் ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது. போர் நெறியை வரையறுத்துக் காட்டியவர் புலவர் பெருமக்களாவர். அப்போர் நெறிகளை மீறியவர்களை அறிவுரை கூறி அறவழியில் செல்ல வலியுறுத்தியவரும் புலவர்களே. வேந்தர், குறுநில மன்னர், வீரர் ஆகியோரின் பேராற்றலையும் அவர்கள் மேற்கொண்ட போர் அறங்களையும், வெற்றிச் சிறப்பையும் போற்றிப் பாடியவரும் புலவர்களே. அறநெறியில் போருடற்றியோரையே அவர்கள் புகழ்ந்து போற்றினர். போர் வேட்கை கொள்ளுமாறும் அதனால் பொருள்

ISBN Number: 978-93-91115-19-7

பெருமாறும் முதுகுடுமிப் பெருவழுதியைக் காரிகிழார் தூண்டுகிறார்.

பெண்பாற் புலவர்களின் வீரமும்

இலக்கியத்தைப் பயிலும்போது அது வெளிப்படுத்தும் உணர்ச்சியோடு நாம் தொடர்பு கொள்கிறோம். இதுபோல உண்மை வாழ்க்்யின் பிறர் உணர்ச்சியோடு முழுமையாத் தொடர்பு கொள்ள நமக்கு இயலுவதில்லை. ஏனென்றால் உண்மை வாழ்க்கையில் உணர்ச்சியின் பெரும்பகுதி சில காரணங்களையொட்டி மறைக்கப்படுகிறது. நம்மிடம் உள்ள உணர்ச்சிகளைப் போலவே பிறருக்கும் உண்டு என்பதை இலக்கியம் நம்மை உணரச் செய்கிறது. இவ்வுணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளவும் இலக்கியம் உதவுகிறது. இவ்வகையில் புறநானூற்றில் இடம்பெற்றுள்ள பெண்பாற் புலவர்களின் வீரப்பண்பினையும் விவேகச் சிறப்பினையும் நாம் உணர்ந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது.

வாழ்வில் வீரம்

மனித வாழ்வில் வீரத்திற்கு முதன்மையுண்டு. தமிழ் மக்களின் வீர வாழ்விற்குச் சான்றாகத் திகழ்வது புறநானூறு, பதிற்றுப்பத்துப் போன்ற புற இலக்கிய நூல்களாகும். இப்புற இலக்கியங்களை வரலாற்றுச் சான்றுகளாகக் கொண்டு பேராசிரியர் டாக்டர்.கைலாசபதி வீரநிலைக் காலம் குறித்து கருத்துத்

 ISBN Number: 978-93-91115-19-7

தெரிவித்துள்ளார். விலங்குகளோடு போட்டியிட்டு வாழ்ந்த மனிதனுக்கு வீரம் இயல்பிலேயே தேவை ஆயிற்று. இதனால் காட்டையும், மலையையும் சார்ந்து வாழ்ந்தவர் பிற்காலத்தில் மறவர், பொதுவர், வீரர் என்றப் பொதுப்பெயர்களால் குறிக்கப்பெற்றனர். வீரம்-வீரக்குடி என்பன தமிழகத்தில் தனிச் சிறப்பாகும். போர்க்களத்தில் வீரம் விளைவித்த தனிச்சிறப்பினர் எனினும் ‘வினையே ஆடவர்க்குயிர்’ என்பது பண்டைத்தமிழ்ச் சமுதாயத்தின் கொள்கையாக இருந்தது. வீரம் தமிழர்கள் உயிரைச் துச்சமென மதித்த வீரப்பண்பினர் ஆவர். ‘புகழெனின் உயிரும் கொடுக்குவர்’என்ற புறநானூற்றுத் தொடரும் சான்றுகளாகும்.

வறுமையில் செம்மை வாழ்வு

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஆடவர் மிகுந்த வீரம் உடையவராக இருந்தனர். அப்போது நாட்டு மன்னனின் பகைவரை அழிப்பது அவருடைய கடமையாகக் கருதப்பட்டது. மகளிர் தம் வீட்டிற்கு வரும் விருந்தினரை விரும்பி வரவேற்று, ஓம்புதல் மனையாகக் கருதப்பட்டது. இத்தகைய மனையறம் வாய்ந்த தலைவியை அள்ளூர் நன்முல்லை என்னும் பெண்பாற் புலவர் படைத்துள்ளார். சிற்றூர் ஒன்று, அங்கே ஊரவர் எல்லோரும் நீர் எடுக்கும் கிணறு இருந்தது. சி;ல நேரங்களில் நீர் வேட்கையுற்ற யானைகளும்

 ISBN Number: 978-93-91115-19-7

அக்கிணற்றை நாடி வரும். வீட்டைச் சூழ்ந்து உள்ள முள் வேலியை உடைத்துக் கொண்டு வரும் அவ்வூரில் அகவழகும் புறவழகும் வாய்ந்த மகளிர் வாழ்ந்தனர். அவர்களில் ஒருத்தி தழைத்து, அழகான கூந்தலினள். ஒளி பொருந்திய நெற்றியள். மனையறம் ஓம்பும் பாங்கினள். அவள், தன் முன்னோர்களில் வீரப்போர் புரிந்து இறந்து பட்டு நடுகல் தெய்வமானவர்களைத் தொழுது வேண்டினாள். அவள் தெய்வத்திடம் வேண்டியதை அறியும் போது வியப்பேற்படுகிறது. இன்று மகளிர், வீட்டிற்கு விருந்தினர் வரக்கூடாது, தான் மட்டுமே வாழ வேண்டும் என நினைக்கின்றனர்.

அள்ளூர் நன்முல்லையாரின் தலைவியோ வறுமையிலும் செம்மை வாழ்வு வாழ்பவள். தன் வீட்டிற்கு விருந்தினர் இடைவிடாமல் வர வேண்டும் என வேண்டுகிறாள். தன் கணவன் போருக்குச் சென்றால் இறக்க நேரினும் நேரிடும். எனவே தன் கைம்மையுறல் கூடாது, என்று நினைக்கும் மகளிரைக் காணல் உலக இயல்பு. வீரத் தலைவியோ தன் கணவன் போர்க்களம் சென்று போர் புரிவதற்காக வேந்தன் பெரும்பகை பெற வேண்டும் என விவேகத்துடன் வேண்டுகிறாள். இப்படி மற்றவர்கள் விரும்பாதவற்றை விரும்பும், சிறந்த குடும்பத் தலைவியைப் படைத்துக் காட்டுகிறார் அள்ளூர் நன்முல்லையார்.

 ISBN Number: 978-93-91115-19-7

களிறுபொரக் கலங்கு கழன்முள் வேலி
அரிதுன் கூவ லங்குடிச் சீறூர்
ஒலிமென் கூந்த லொண்ணுத லரிவை
நடுகற் கைதொழுது பரவு மொடியாது
விருந்தொளிர் பெறுகதில் யானே யென்னையும்
நாடுதரு விழுப்பகை எய்துக எனவே

(புறநானூறு, பா. 307)

என மூதின் முல்லைத் துறையில் பாடியுள்ளார்.

கடமை கூறிய தாய்

போர்ப்பறை ஒன்றுடி முழங்கி, நாட்டில் உள்ள வீரர்களை அழைத்தது. ஒரு வீட்டில் மறக்குடி மகள் ஒருத்தி, தன் தமையனைப் போர்க்களத்திற்கு அனுப்பினாள். அவனோ களத்தில் பெரிய யானையுடன் போரிட்டான். அந்த யானையைக் கொன்றான். தானும் மடிந்தான். இறவாப் புகழ் பெற்றான். அடுத்த நாளும் பறை முழங்கியது. வீட்டிற்கு ஒரு வீரர் வருக என்ற அழைப்பொலி எழுந்தது. கணவன் களம் புகுந்தான். பெரும் படைகளுடன் போரிட்டான். களத்திலேயே மாண்டான். அடுத்த நாளும் பறை முழங்கியது. இப்பறை கேட்டாள் வீரமகள். அவளுடைய நாடி நரம்புகள் துடித்தன. அவள் களம் புக விரும்பினாள். ஆனால் பெண்கள் போர்க்களம் செல்லக் கூடாது என்பது நியதியாயிற்று. என் செய்வாள் அவள்? ஆயினும் அவள்

ISBN Number: 978-93-91115-19-7

மனம் ஒடியவில்லை. அவளுடைய கண்ணில் சின்னஞ் சிறுவன் ஒருவன் தென்பட்டான்.அவன், அவள் ஈன்ற குலக்கொழுந்து. ஒரே ஒரு அருமை மைந்தன், போர்க்களம் செல்லுதற்குரிய பரவம் இல்லாதவன். போர்கள் அனுபவம் இல்லாதவன். களம் பல கண்ட தனட தமையனும், கணவனும் மாண்டதை அவள் நன்றாகவே அறிவாள். தன் மைந்தன் திரும்பி வர மாட்டான் என்பதையும் நன்கறிந்தவள் அவள். அவள் உள்ளத்தில், தன் நலத்திலும், பொதுநலமே என்ற விவேகப்பண்பு ஓங்கி நின்றது. அதனால் அவள் போர்ப்பறை கேட்டு அஞ்சவில்லை. அழவில்லை, மாறாக மகிழ்ந்தாள், போரை விரும்பினாள்.

தெருவில் விளையாடிக் கொண்டிருந்த தன் இன்னுயிரனைய மகனை அழைந்தாள். பரப்டைத் தலையில் எண்ணெய் பூசித் தலைமுடியைச் சீவினாள். தூய வெள்ளை ஆடையை உடுத்தினாள். வேலினைக் கையில் கொடுத்தாள். போர்க்களத்திற்குப் போய்வா என்று கூறவில்லை. செல்க என்று விடுக்கிறாள். வீரத்தோடு விவேகமும் பெற்றுள்ளார் ஓக்கூர் மாசாத்தியார். அவன் வரமாட்டான் என்பது தெரிந்தவள் தானே அவள்! இவ்வீர மகளின் மாண்பினைச் சொல்லோவியமாக்கிய ஓக்கூர் மாசாத்தியார் ஒரு பெண்பாற் புலவர் என்பது வியத்திற்குரியது. மறமகளின்

 ISBN Number: 978-93-91115-19-7

வீரத்தை வாகைத் திணையில் மூதின் முல்லைத் துறையில் அழியா ஓவியமாக்கி உள்ளார் புலவர் பெருமாட்டியார்.

கெடுக சிந்தை கடிதிக டுணிவே
மூதின் மகளி ராத றகுமே
மேனா ளுற்ற செருவிற் கிவடன்னை
யானை யெறிந்து கணத்தொழிந் தன்னே
நெருந லுற்ற செருவிற் கிவள் கொழுநன்
பெருநிரை விலங்கி யாண்டுப் பட்டனனே
இன்றும் செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித் துடீஇப்
பாறுமயிர்க் குடுமியெண்ணெய் நீவி
ஒருமக னல்ல தில்லோன்
செருமுக நோக்சி செல்கென விடுமே

(புறநானூறு, பா. 273)

தன் ஒரே புறப்பாடலில் அழியாப் புகழ் பெற்றவர் இப்பெருமாட்டியார். இப்பாடலில் பெற்று வளர்த்த தாயாரின் வீரச் சிறப்பினைப் பெருமிதத்துடன் எடுத்து மொழிந்துள்ளார். பெண்மைச் சிறப்பு வாய்ந்த இப்புலமை பிராட்டியாரின் பாடல்களில் அன்பும் வீரமும் விவேகமும் இழையோடுகின்றன.

வாளெடுத்த தாய்

நரம்பெழுந்து உலறிய நிரம்மென்றோள் உடைய முதியோள் ஒருத்தியின் மகன் போருக்குச் சென்றான்.

 ISBN Number: 978-93-91115-19-7

அவன் போர்க்களத்தில் தோற்று புறமுதுகு காட்டி மீண்டனன் என்று போர்க்களத்தினின்று வந்தவர்கள் கூறினர். அதைக் கேட்டவுடன் முதிய தாயானவள் வெகுண்டழுந்தாள். அவள் புறமுதுகு காட்டியிருந்தால் அவன் பால் உண்ட என் மார்பை அறுத்தெறிவேன் என வஞ்சினம் கூறினாள். வாளினை ஏந்திப் போர்க்களத்திற்குச் சென்றாள். பிணங்களைப் புரட்டினாள். சிதைந்து வேறாகி வீர மரணம் எய்திய தன் அருமை மைந்தனைக் கண்டாள். அவன் இறந்து பட்டதற்காக அந்தத் தாயுள்ளம் அழவில்லை. புறநானூற்றில் காணப்படும் 'உவகை கலுழ்ச்சி' என்னும் துறையுள் காக்கைப் பாடினியார் இச்சீரிய பாடலை பாடியுள்ளார். மறக்குடியில் பிற்ந்த தாயொருத்தியின் உள்ளத்தையும் செயலையும் படம்பிடித்துக் காட்டும் பாங்கு போற்றத்தக்கது.

நரம்பு எழுந்து உலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின், முதியோள் சிறுவன்
படை அழிந்து மாறினன் (புறநானூறு, பா. 278)

என்று பல் கூற,

… முலை அறுத்திடுவென், யான் எனச் சினை இக்,
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோள், சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ

ISBN Number: 978-93-91115-19-7

ஈன்ற ஞான்றினும் பெரிதும் உவந்தனளே!
(புறநானூறு, பா. 280)

என்று நச்செள்ளையார் புறநானூற்றில் ஒரு தாயின் வீரத்தைப் பெருமிதத்துடன் பாடியுள்ளார். காக்கைப்பாடினியார் வீரத்தாயாக மாறிப் பாடிய பாடல் நெஞ்சை நெகிழ வைக்கும் தன்மையுடையது. நச்செள்ளையார், ஆடுகோட்பாட்டுச் சேரலாதனைக் கற்புடைய பெண்ணின் கணவனாகவும் சான்றோர்களைப் புரக்கும் புரவலனாகவும், வீரர்களின் கவசமாகவும், குடவர்களின் தலைவனாகவும், கொடித்தேர் அண்ணலாகவும், செல்வர்களின் செல்வமாகவும் உருவகித்துள்ளார்.

‘சேரனின் பெருவீரத்தைப் பாடும் புலவர்,
மாற்றருஞ் சீற்றத்து மாயிருங் கூற்றம்
வலைவிரித் தண்ண நோக்கலை
கடிமையால் நெடுந்தகை செருவகத்தானே’
(புறநானூறு, பா. 285)

அவனைப் பகைவரின் உயிர் கொல்லும் கூற்றுவனாகக் காட்டியுள்ளார். சேரன் கலைஞர்களைப் போற்றினாள். பதிற்றுப்பத்தில் அவன் புகழ்பாடும் விறலியரைப் பற்றிச் சிறப்பாக நச்செள்ளையார் பாடியுள்ளார். விறலியை ஆற்றுப்படுத்தும் நிலையில் இரு பாடல்களைப் பாடியுள்ளார். விறலியைப் பாண்மகள் என்று

ISBN Number: 978-93-91115-19-7

குறித்துள்ளார். விறலியர் அவனுடைய வீரத்தைப் பாடுகின்றார். 'சுடர்நுதல் மட நோக்கின் வாணகை யிலங் கெயிற்று அமிழ்து பொதி துவர்வா யசைநடை விறலியல்' என்று விறலியரின் அழகு சிறப்பிக்கப்பட்டுள்ளது. கலைஞரைப் போற்றும் அவன் மாண்பினைக் கூறி அவன் கொடைத்திறனை நச்செள;ளையார் புகழ்ந்துள்ளார்.

ஔவையின் புலமைச் சிறப்பு

மன்னவன் ஒருவன் அவைக்களத்தில் நின்றிருந்தான். அவனுக்கெதிரில் மூதாட்டி ஒருவர் தமிழ்ப் புலமையின் சின்னமாகத் திகழ்ந்தார். மன்னவன் கொடுத்த கருநெல்லிக் களியை உண்டு விட்டு வியப்புடன் மன்னவனைப் பார்த்தார். புலமைச் செல்வனான மன்னவனோ புன்சிரிப்புடன் அருவிடரகத்து கிடைத்த அருங்கனி, உண்டாரை நெடிது வாழச் செய்ய வல்ல நெல்லிக்கனி, கருமையான நெல்லிக்கனி, கிடைத்தற்கரிய நெல்லிக்கனி, என்று மகிழ்ச்சியுடன் கூறினான். கேட்ட பெருமாட்டியோ மேலும் வியப்புற்றார். காரணம் கேட்டார், மன்னவனோ 'தமிழன்னையே! நீர் உண்டால் நெடுநாள் வாழ்ந்தால்-தமிழ் வாழும் நான் உண்பதால் நெடுநாள் வாழ்ந்தால் என்ன பயன்?' என்றான். தமிழம்மையோ மனம் நெகிழ்ந்து போனார். அவர் நினைவில் சிவபெருமானின் மணிமிடறு நின்றது. இறைவன் தேவர்களைக்-

 ISBN Number: 978-93-91115-19-7

காப்பதற்காக தேவர்கள் அமுதுண்பதற்காக-நஞ்சுண்டான். நீலகண்டன் ஆனான். மணிமிடற்றன் ஆனான். அமுதுண்டும் தேவர்கள் சிறப்படைந்தார்கள். அமுதுண்ணாத –நஞ்சுண்ட சிவபெருமானோ என்று வாழ்கிறான். அருங்கனி உண்ட புலவர் இறக்கலாம். தமிழுக்காக தான் உண்ண வேண்டிய கனியின் அருமை கூறினால் புலவர் உண்ணார் என்று கருமையை மறைத்து, கொடுத்த அவன், மணிமிடற்றொருவன் போல் வாழ வேண்டும் என்று மனம் மகிழ்ந்து – மனம் நெகிழ்ந்து பாடினார். அவர் பாடியதால், தமிழ் உள்ளளவும் அவன் புகழ் நீடித்தது. அவனும் வாழ்ந்தான்.

ஒருமுறை அதியமான் நெடுமான் அஞ்சிக்கும் தொண்டைமான் அதிகன் மேல் படையெடுக்க போர் ஆயத்தங்களை மேற்கொண்டான். இதை அறிந்தார் புலமைப் பெருமாட்டியார். தமிழ் மணக்கும் நாட்டில் குருதி நாற்றம் வீசுவதா? தடுக்க விரைந்தாh.; தொண்டைமான் தன் நாட்டிற்கு அம்மையார் வந்தமை கண்டு பெருமகிழ்வு கொண்டான். பெரும்பேறு பெற்றதாக மகிழ்ந்தான். அவன் கண்போல் காத்த படைக்கலக் கொட்டிலைக் காட்டினான். காவல் நிலையத்தின் முன்னால் அந்தக் காவல் நிலையத்தைக் காக்க, காவற்காரர்கள் இருப்பார்களே. அதுபோல அந்தப் படைக்கலக் கொட்டிலுக்குப் பலமான காவல் இருந்தது.

ISBN Number: 978-93-91115-19-7

உள்ளே வரிசை வரிசையாக அழகாக அடுக்கிவைக்கப்பட்ட, புத்தம் புதிய ஒளி வீசும் படைக்கருவிகள் அழகு செய்தன. அக்கருவிகள் துரு பிடிக்காத வண்ணம் எண்ணெய் புசப்பட்டிருந்தது. மாலை சூட்டப் பெற்றிருந்தது. மயிற்பீலி அணியப் பெற்றிருந்தது. இப்படைக்கலக் கொட்டிலைக் காட்டும் மன்னன் உள்ளத்தில் மகிழ்ச்சி கொந்தளித்தது. பெருமாட்டியார் நம் படைக்கலங்களைக் கண்டு வியந்துள்ளார். அதிகனுக்குக் கூறுவார். அவன் போருக்கு வரமாட்டான் என்று நினைத்தான். ஔவையார் உள்ளத்தில் வேறொரு காட்சி ஓடியது. வள்ளல் அதிகன் எந்த நேரத்திலும் போர் செய்வதால், வேற்படைகள் பகைவரைக் குத்திகுத்தி நுனி சிதைந்து போன வேல்கள் செப்பம் செய்வதற்காக, கொல்லனுடைய உலைக்களத்தில் குவிந்துள்ள வேல்கள்- அவர் கண்முன் காட்சி தந்தன. ஒரு மாணவனிடம் உள்ள புத்தகத்தைப் பார்த்த ஆசிரியர் புத்தகம் புதிதாக, அழகாக அடுக்கி படிப்பதில்லையா என்று குறிப்பதாகக் கொள்ள வேண்டும், இன்னொருவன் பக்கங்களைப் புரட்டி, புரட்டி, அழுக்காகக் கிழிந்துள்ளன என்றால் அவன் அதிகமாகப் புடித்திருக்கிறான் என்றுதானே பொருள்!.

இப்படித்தான் புகழ்வது போன்று பழித்துள்ளார் ஔவையார். பயன்படுத்தப்பட வேண்டிய கருவிகள் பயன்படுத்தப்படாமல் காட்சிப் பொருளாக

 ISBN Number: 978-93-91115-19-7

இருந்தமையை நனிநாகரிமாகக் கூறினார் பெருமாட்டியார். ஆடவர்கள் போர் விரும்புவதும் மகளிர் போரில்லாத அமைதியை விரும்புவதும் இயல்பான பண்பாகும். அமைதிப் பணிக்குச் செல்லக் கூடிய தகுதி பெற்றவர் பெண்கள்தாம். அதனால் தான் புலமைப் பெருமாட்டியார் அவன் கொட்டிலுக்குள் நின்று பார்வையிட்ட பிறகு, இந்தப் பாடலைப் பாடுகிறார். எனின் வீரப்புலவரின் பெருமையை எண்ணென்பது! உலக வரலாற்றிலேயே தூதாகச் சென்று, தம் பாடல் மூலம் போர் நிறுத்திய புலவர் இவர் ஒருவராகத்தான் இருக்க முடியும்.

புல்லென்றனையால் வளங்கெழு திருநகர்

இன்பமும் துன்பமும் இணைந்திருப்பது தான் வாழ்க்கை. வாழ்வில் இன்பம் வரும் பொழுது வாழ்க்கையில் அழகும், வளமும் பெருகுகின்றன. மனித மனம் சிறகை விரித்துப் பறக்கின்றது. உறவுகளும், மற்றவர்களும் மதிக்கும் நிலை ஏற்படுகிறது. ஆனால் துன்பம் வரும்பொழுது உள்ள சுமை நிறைந்ததால், வளமின்றி உறவும் மற்றோரும் இகழும் நிலைக்கு ஆளாகின்றது. தாயங்கண்ணியார் பாடிய புறநானூற்றுப் பாடலில் வளமும் இன்பமும் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த இல்லத்தலைவன் இறந்துவிட்டான். அதற்காக தலைவி வருந்திப் படுகிறாள். தலைவன்

 ISBN Number: 978-93-91115-19-7

இருக்கும்பொழுது அம்மனை பொலி;வுடைய மனையாக இருந்தது. விருந்தோம்பும் பண்புமிக்க தலைவனும், தலைவியும் வாழ்ந்த வளமான பெரிய அழகிய மனை. அம்மனையின் வாசலில் பெரிய பந்தல் எப்பொழுதும் இருக்கும் விருந்தினருக்குச் சமைக்கும் பொழுது, தாளிக்கும் ஓசையும் மணமும் விருந்தினரையும் இரவலரையும் தடுத்து அம்மனையிலேயே இருந்தும் பந்தல் அவர்களின் துன்பக் கண்ணீரைத் துடைத்தது.

தலைவன் இறந்த பிறகு தலைவி கைம்மை நோன்பை மேற்கொண்டாள். விருந்தினர் இரவலர் வரவும் நின்றுவிட்டது. தாளிப்பு ஓசையும் மணமும் இல்லை. அந்த வளமான மனையும் பொலிவிழந்து விட்டது. பல ஏழைகளின் கண்ணீரைப் போக்கிய மனையும் பந்தலும் இப்பொழுது தலைவியின் கண்ணீரைத் து;டக்க முடியவில்லை. பலருக்குச் சுவையான உணவுகிடைக்கவில்லை என்ற செய்தியை முரண் தொடையுடன் விளக்கிக் காட்டியுள்ளார். ‘கூத்தாட்டு அவைக்குழாம்’ என திருவள்ளுவர் போல அந்த இல்லம் இருந்தது.

மல்யுத்தக் காட்சி

ஒரு பெரிய மற்போர்க்களம் இருபெரும் மள்ளர்கள் மற்போர் புரிகின்றனர். அவர்களில் ஒருவன் பருமனாக பேராற்றல் வாய்ந்தவன் போல் காட்சியளித்தான். அவன்

ISBN Number: 978-93-91115-19-7

வலிமையும், மதமும் பொருந்திய பெருங்களிறு போன்று இருந்தான். அவன் தோள்கள் உருண்டு, திரண்டு காண்போர் கண்களைக் கவர்ந்தன. அவனைப் பார்க்கும் போது வேங்கைப் புலியின் அழகு தெரிந்தது. சோழ நாட்டின் இளவரசன் போர்வைக் கோப்பெரு நற்கிள்ளி தான் அவன் பல நாட்டின் நடப்புகளை அறிவதற்காகச் சுற்றி வந்தவன். அமூர் மல்லனிடம் போரிட நேர்ந்தது. இந்த மல்யுத்தம் ஆவூரில் நடந்தது. களிறனைய மற்போர் வீரன் ஆமூரைச் சேர்ந்தவன்.

இவ்விருவரும் போர் செய்யத் தொடங்கினர். இப்போரின் தொடக்கத்தில் ஆமூர் மல்லன் நடப்பதால் மக்கள் அவன் பக்கம் நின்று பேரார்வம் செய்தனர். இது அவனுக்கு ஊக்கத்தை ஏற்படுத்தியது. தீடிரென்று ஒரு மாற்றம் புலியனையான் களிறனையான் மீது பாய்ந்தான். மாறி மாறிக் குத்தினான். கொஞ்ச நேரம் அமைதியாக இருந்த மக்கள் புலியனையான் பக்கம் திரும்பினர். அவனுக்கு ஆதரவு தரும் முயற்சியில் பேரார்வம் செய்தனர். இது மக்கள் இயல்புதானே! அந்த ஊர் மக்கள் இரு பிரிவாகினர். நடுநிலை உள்ளமுடன் இருந்த சிலர், அவன் தங்கள் ஊரினன் அல்லவெனினும், நாட்டினன் அல்லவெனினும் கிள்ளியின் வெற்றியைப் புகழ்ந்தனர். நடுநிலை நெஞ்சம் இல்லாத சிலர் தங்கள் ஊர் மல்லனின் சார்பில் புதியவனின் வெற்றியன்று என்றனர்.

ISBN Number: 978-93-91115-19-7

இந்த மல்யுத்தக் காட்சியை ஆட்ட நடுநிலையாளராக இருந்து நமக்கு காட்டுபவர் அழகிய பெண் கவிஞர். ஒருவர் அவள் நாணமுடைமையால் பனைமரத்திற்கும் பின்னால் மறைந்து நின்று இந்தப் பெருங்காட்சியைக் கண்டார். மற்றவர்கள் ஆடவராதலின் போரின் தன்மையைக் கூறினர். பிரிந்து சென்றனர். மறைந்து நின்று கண்ட இவர் தன்னை மறந்தார். அவனைப்பற்றிக் கூறிய புகழுரைகளைக் கேட்டு பெருங்காதல் கொண்டார். தன் உள்ளத்தை,

'என்னைக்கு ஊர் இஃது அன்மையானும்,
என்னைக்கு நாடு இஃது அன்மையானும்
ஆடு ஆடு என்ப ஒரு சாரோரே
ஆடன்று என்படி ஒரு சாரோரே
நல்ல, பல்லோர் இருநன் மொழியே
அஞ்சிலம்பு ஒலிப்ப ஓடி, எம் இல்,
முழா அரைப் போந்தை பொருந்தி நின்று,
யான்கண்டனன் அவன் ஆடாகுதலே'
(புறநானூறு, பா. 290)

என்னும் பாடல் காட்டுகிறது.

வீரப்பெருமை கொண்ட தாய்

மேலே இருக்கும் செக்கர் வானம் கீழே வந்ததே என்று நினைக்கும்படியான நெருப்புப் படுக்கை. பெரிய சதுரப் பரப்பிற்குக் குழிவெட்டி, அதில் விறகுகளைப்

ISBN Number: 978-93-91115-19-7

போட்டுத் தீயெரிந்து கொண்டிருந்தது. எவரும் அருகில் செல்ல முடியாதவாறு நெருப்பு கொழுந்து விட்டெரிந்தது. தீக்கடவுளின் கோபத்திற்கு அஞ்சாதவளாக ஒரு பெண் தனியாக நின்று கொண்டிருந்தாள். அவள் இதயத்தின் வேதனை, கண்களில் வெந்நீர் ஊற்றாகப் பெருகிக் கொண்டிருந்தது. அவிழ்ந்த கூந்தலில் இருந்து நீர்தூறிக் கொண்டிருந்தது.கொஞ்ச தூரத்தில் ஒரு பணம் கிடக்கிறது. நாட்டு மன்னன் வீர மரணம் அடைந்ததால், அவனுடைய புகழ் உடம்பு அங்கிருக்கிறது. நின்று கொண்டிருக்கும் மங்கை பாண்டிய நாட்டின் பேரரசி. கவிஞர் பூதபாண்டியன் பெருந்தேவி, தன் மனைவியைத் தவிர வேறு எவரையும் சிந்தையாலும் தொடாத கற்புத்திறம் கொண்ட பெருமகனுடைய துணைவி பெருங்கோப்பெண்டும் கவிதை பாடும் திறம் கொண்டவள். இந்த இனிய, அன்றில் பறவைகளைக் காலன் பிரிந்துவிட்டான். அவள், தன் ஆருயிர் கணவன், அரசவையில் சிறிது காலம் தாழ்ந்துவிட்டாலும் உயிர் தளரும் இயல்பினள்.

அத்தகையாள் அவனுடைய நிரந்தரப் பிரிவைத் தாங்கும் தன்மையளோ? அவள் தன்னுயிர் கொண்டு, தன் கணவன் உயிர் தேட விரும்பினாள். தன் கணவன் இறந்தவுடன், தானே போக்கத் துணிந்தாள். அதற்காகத் தான் இந்த நெருப்புப் படுக்கை அல்ல, அல்ல தாமரைப்

ISBN Number: 978-93-91115-19-7

பொய்கை. அருகில் கண்ணீருடன் நிற்கும் சான்றோர்கள், பெரு வீரர்கள், தங்கள் நாட்டின் பெருமைக்குரிய பாண்டிய மன்னன் பிறன்மனை நோக்காப் பேராண்மையாளன், கவிஞன், புலவர்களைப் பாதுகாத்த பெருவள்ளல் ஒல்லையூரை வெற்றி கொண்ட மாபெரும் வீரன். செங்கோல் ஆட்சியாளன். நாட்டு மக்களின் உள்ளம் கவர்ந்த கள்வன் புலமைப் பெருமாட்டியார் பெருங்கோப்பெண்டின் இன்னுயிர் கணவன் பூதப்பாண்டியன் போர்க்களத்தில் வீரமரணம் எய்திருக்கிறான். அதனால் நாட்டில் உள்ள சான்றோர் அனைவரும் நெடுங்கண்ணீரோடு நின்று கொண்டிருக்கிறார்கள். இன்னுயிரன்ன தங்கள் மன்னனை இழந்து தவிக்கும் அவர்கள், வேறொரு வேதனைக்கும் ஆளானார்கள். நாட்டை ஆளும் தகுதி பெற்ற அன்னை அனைய பெருங்கோப்பெண்டு, மன்னனுடன் செல்வதற்காக ஈமப்படுக்கையில் படுக்க விரும்பினாள். அவர்கள் தங்கள் கண்ணீருடன் அவளிடம் கெஞ்சினார்கள். தன் கணவனுடன் போகவிடாமல் தடுக்கும் சான்றோர்களைக் கண்டு தேவிக்கு சினம் பொங்கியது.

எதிரில் இருக்கும் சான்றோர்கள், கணவன் சென்ற வழி செல்க என்று சொல்லியிருக்க வேண்டும். அவ்வாறு சொல்லாமல் விலக்குவதால் சான்றோர்களாயினும்,

ISBN Number: 978-93-91115-19-7

சூழ்ச்சி உடையோராவர். தன் கணவன் புகழுடம்பு பெற்றதால், அவள் கைம்மைக் கொடுமை அனுபவித்துக் கொண்டு இவ்வுலகில் வாழ விரும்பவில்லை. கைம்மை நிலைதான் எத்தகைய கொடுமையுடையது! அணிலின் மீது வரிவரியாகக் காட்சியளிப்பது போல தோன்றுகின்ற வெள்ளரிக்காயை அரிவாளால் அரிந்தால உள்ளே சின்னஞ்சிறு வெள்ளை நிற விதைகள் தோன்றும். அவ்விதைகளைப் போன்று தோற்றம் அளிக்கும் நறுமணம் உடைய நெய்யை உண்ணக்கூடாது. கையால் பிழிந்த நீர்ச் சோற்று திரளையும், எள், புளி, ஆகியவற்றைக் கூட்டி அரைத்த, விழுது இட்ட வெந்த வேளைக் கீரையையும் உண்ண வேண்டும்.

பருக்கைக் கற்கள் பரப்பிய படுக்கையில் பாயின்றி, தலையணையின்றி, கிடக்க வேண்டும். இப்படிப்பட்ட கைம்மை வாழ்வு வாழ விரும்பும் பெண்ணாகத் நான், சுடுகாட்டில் எரிப்பதற்காக அடுக்கப்பட்ட கட்டைகளால் அமைந்த பிணப்படுக்கை, மற்றவருக்கு அரிதாகத் தோன்றும். செக்கச் செலேலென்று வானோக்கி எழும் ஈமத் தீ எனக்கு ஈமத் தீயாகத் தோன்றவில்லை. முகையில்லாமல், சிவந்த நிறத்துடன் மலர்ந்த தாமரைகள் நிரம்பப் பெற்ற குளிர்ந்த நீரினையுடைய பொய்கை போன்றுள்ளது. அதனால் சான்றோர்களே என்னைத் தடுக்காதீர்கள் என்று வேண்டும்

 ISBN Number: 978-93-91115-19-7

முறையில் இப்பெண்பாற் புலவர் பெருங்கோப்பெண்டு பாடியுள்ளார். ‘பல்சான்றீரெ பல்சான்றீரே… நள்ளிரும் பொய்கையாம் தீயுமோரற்றே’ என்னும், இப்பாடல் புறநானூற்றில் ஆனந்தப் பையுள் என்னும் துறையில் அமைந்தது. ஈமப்படுக்கையில் இறந்த கணவனுடன் ஆனந்தமாகப் படுத்து உயிர் துறத்தல் ஆனந்த பையுள் எனப்பட்டது. இப்பாட்டின் மூலம், ஈராயிரம் ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் சமுதாய வழக்கினை அறிய முடிகிறது. பெண்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளில் ஒன்றான கைம்மைக் கொடுமையை அறிய முடிகிறது.

திங்களும் ஞாயிறும்

அதியமானுக்கும், சேரமானுக்கும் நடைபெற்ற பெரும்போரில் நெடுமான் அஞ்சி விழுப்புண் பெற்று வீரமரணம் அடைந்தான். அதற்காக வருந்திப் பாடிய ஔவையார் கையறுநிலைப் பாடலில் ‘திங்கள் போன்ற வெண்கொற்றக் குடையுடைய ஒளிமிக்க ஞாயிறை ஒத்த நெடுமான் அஞ்சியின் புகம் மாயாது என்றும் இவ்வுலகில் நிலைத்திருக்கும் என்று கூறினர்.

‘திங்கள் அன்ன வெண்குடை
ஒண் ஞாயிறு அன்னோன் புகழ் மாயிலவோ’

என்றது தி;ங்களும், ஞாயிறும் முரணாக இருந்தாலும் அதியனின் வெண்கொற்றக் குடை என்றும் குளிர்ச்சியும்,

 ISBN Number: 978-93-91115-19-7

ஒளியும் கொண்டு நாட்டு மக்களைக் காக்கும் தன்மையுடையது. அதியமானின் புகழ் சூரியனைப் போல என்றும் மறையாது நிலைத்திருந்து ஒளிவீசும் தன்மை வாய்ந்தது எனப் போற்றுகிறார். ‘மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்’ என்ற புறநானூறும்,‘முறைசெய்து காப்பாற்றும் மன்னன் மக்கட்கு இறையென்று வைக்கப்படும்’என்று திருவள்ளுவரும் கூறியதற்கேற்ப அதியமானின் ஆட்சியும், புகழும் திங்களுக்கும், ஞாயிறுக்கும் உவமையாகக் கூறி முரணாக அமைந்தது புலவர் தம் புலமைத் திறனால் ஆகும்.

ஈன்ற தாயின் வீரநெஞ்சம்

அறிவியல் யுகம் அணுயுகம் என்றெல்லாம் பெருமை பேசும் இக்காலத்தில் நாடு எந்த நிலையில் இருக்கிறது? அவரவர்கள் தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்கிறார்களா? இன்று தாயார் கல்வி கற்றவர்களாக விளங்குகிறார்களா? தம் குழந்தைகளுக்கு உணவு கொடுத்து கல்வி கற்பிக்க வேண்டும் என நினைக்கிறார்களா? அரசாங்கம் சத்துணவுக் கூடத்தில் கொடுக்கும் உணவு தன் மகனை வளர்க்கும் என்று உணவுக்காக மட்டுமே கல்விக் கூடத்திற்கு அனுப்பும் கல்வியற்ற தாயார். தன் மகனுக்குப் படிப்பு வேண்டாம், தானே படிக்காத போது தன் மகன் எதற்குப் படிக்க வேண்டும். அவன் இழிந்த வேலையைச் செய்தாலும்

ISBN Number: 978-93-91115-19-7

போதும். உணவு விடுதிகளில் வேலை செய்து வயிற்றை நிரப்பிக் கொண்டால் போதும், தனக்கு குடிப்பதற்குப் பணம் கிடைக்கும் என நினைக்கும் குடிகாரத் தந்தையர். நாட்டில் ஒற்றுமை என்பது பேச்சளவில் இருந்தால் போதும், சாதியும் சமயமும் இருந்தால் தான் ஓட்டுகள் கிடைக்கும் என்று சாதி, சமயச் சண்டைகளைத் தூண்டிவிடும் தலைவர்கள், மக்களுக்குக் கட்டாயக் கல்வி கொடுத்தால் சிந்திக்கத் தொடங்கி விடுவார்கள். சிந்தித்தால் தமக்கு ஓட்டு விழாது என்று கணக்கெடுத்து கட்டாயக் கல்விக்கு முட்டுக்கட்டை போடும் கல்வி மறுப்பானார்கள். தன் குடும்பம் தலைமுறை தலைமுறையாக ஓங்கி வாழ வேண்டும். மற்றவர்களின் குடும்பத்தைப் பற்றி எனக்கென்ன கவலை? இந்நாட்டின் அமைச்சராவதே தன் குறிக்கோள். பின்னால் வரும் இளைய தலைமுறையினரையும் கல்விக் கூடங்களில் இருந்து தூண்டில் போட்டு இழுத்து, தீயநடை நல்கும் முடிசூடா வேந்தர்கள்.

திரைப்படமும் அரசியலும் தம் இரு கண்கள், அதற்குக் கல்வி தேவையில்லை. இத்துறைக்குச் சென்றால் நிறைய பணமும் புகழும் அதிக உழைப்பில்லாமல் கிடைக்கும் என்று அதனுள் நுழைவதையே கடமையாக நினைக்கும் என்று அதனுள் நுழைவதையே கடமையாக நினைக்கும் காளைகள்.

 ISBN Number: 978-93-91115-19-7

இன்றிருக்கும் புலவர்கள், மக்களின் வீட்டின் நாட்டின் கடமைகளாகத் தங்கள் கவிதைகளில் இதைத் தான் வடிக்க முடியும். வீரயுகமான சங்க காலத்தில் வாழ்ந்த பொன்முடியார் என்னும் பெண்பாற் புலவர் அக்காலத்திற்கேற்ற கடமைகளை வகுத்துள்ளார். இயற்கை பெண்மைக்கு மட்டுமே தாய்மைச் சிறப்பு அளித்திருக்கிறது. பெண்மையும் இயற்கையை மதித்தது. தாய்மையை மகிழ்ந்து ஏற்றது. குழந்தையைப் பெறுவதும், அக்குழந்தையை வீரனாக, வீர உணர்வோடு வளர்ப்பதும், போர்க்களத்திற்கு அனுப்புவதும் அன்றைய தாயின் பெருங்கடமையாக நினைக்கப்பட்டது. தாய், பாலூட்டும் போதே வீர உணர்வையும் சேர்த்து ஊட்டினாள். அவனுக்கு விளையாட்டுக் கருவியாக வேலையும் வில்லையும் கொடுத்து வளர்த்தாள். போர்க்களத்தை, அவன் செல்லுவதற்குரிய களமாக்கினாள். இது தாயின் முதற் கடமையாக அமைந்தது.

பகைவருடன் எவ்வாறு போரிட வேண்டும். எந்தப் படைக் கருவிகளை எவ்வாறு இயக்க வேண்டும் என்ற போர்க்கலையைத் தாய் அறியாள். தந்தையே அறிவார். இன்று ‘சான்றோன்’என்பது உயர்ந்த பண்புகளைக் கொண்டவனைக் குறிக்கும் சொல்லாக உள்ளது. அன்று இச்சொல் வீரனைக் குறித்தது. மகனுக்காகப் போர்ப்

 ISBN Number: 978-93-91115-19-7

பயிற்சி கொடுத்து சிறந்த வீரனாக்குதல் சான்றோனாக்குதல் தந்தையின் பெருங்கடமையாகக் கருதப்பட்டது. போரே வாழ்க்கை என்றிருந்த வீரயுகக் காலத்தில் வேலும் வில்லும் வாளும் இன்றியமையாத கருவகளாயின. இவற்றை அவரவர் வீட்டில் செய்து கொள்ள இயலாது. நாட்டவர் அனைவர்க்கும் செய்யும் இன்றியமையாத தொழிலாகக் கொல்லரின் தொழில் அமைந்தது. நாட்டு மக்களுக்கு வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லனுடைய தொழிலாளியின் கடமையாயிற்று. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி என்பது மரபு மொழி. அரசன் உயர்ந்தவனாக அறச்சிந்தனையனாக பண்புடையவனாக வீரனாக கல்வியாளனாக செங்கோல் ஆட்சியனாக இருக்கும் போது குடிமக்களும் அவனைப் பின்பற்றுவர். நாட்டிலுள்ள மக்களுக்கு நன்னடை நல்கல் வேந்தனின் பெருங்கடமையாயிற்று. போர்க்களத்திற்குச் சென்று ஒளி பொருந்திய வாளால் போர் புரிந்து களிற்றினைக் கொல்வதே மகனுடைய பெருங்கடமையாக அமைந்தது. அவரவர்குரிய கடமைகளை வரையறுத்து, அறிவூட்டி, வீட்டையும் நாட்டையும் உயர்த்துவதே நாட்டில் பிறந்தவரின் பெருங்கடமை என்றார் புலவர்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், சங்க காலத்தில் வாழ்ந்த பெண்பாற் புலவர் பொன்முடியார்

ISBN Number: 978-93-91115-19-7

வரையறுத்த கடமைகளை நினைக்கும் போது பண்டைத் தமிழரை நினைத்து இதயம் பெருமிதம் கொள்கிறது. இன்றைய தமிழரை நினைத்து இதயம் வெளிறிப் போகிறது. 'ஈன்றுபுறந் தருதல் என்தலைக் கடனே, சான்றோனாக்குதல் தந்தைக்கு கடனே' என்பது இறவாப் புகழ்பெற்ற பொன்முடியாரின் பாடல். இவர் புறநானூற்றுத் துறையில் வேறு ஒரு பாடல் பாடியுள்ளார். (புறம் 310) போரிடும் வீரம் படைக் கருவிகளை இழந்த நிலையில் தன் மார்பில் பாய்ந்திருந்த வேலைப் பகைவர் மேல் ஒச்சி அவர்களை அழிப்பதை 'நூழிலாட்டு' என்பர். காளை ஒருவன் இளமையில் பால் உண்ணாத போது, தாய் அடிப்பதற்கு ஓங்கிய சிறு கோலுக்கு அஞ்சினான். இன்றோ போர்க்களத்தில் நூழில் ஆட்டுகிறான். பகைவர்களை அழித்ததற்குக் கையில் படையொன்றும் இல்லையே என வருந்தியவன், பகைவர் எய்த அம்பொன்று தன் மார்பில் பாய்ந்திருப்பதைக் கண்டான். மண்ணில் விழுவதற்கு முன்னால் இவ்வம்பை கண்டிருந்தால் இன்னும் சில களிறுகளைக் கொன்றிருக்கலாமே என மேலும் வருந்தினானாம். அவ்வீர மகன்,

'பால் கொண்டு மடுப்பவு முண்ணா னாகலிற்
செறாஅ தோச்சிய சிறுகோல லஞ்சியோடு
உயவோடு வருந்து மன்னே யினியே

ISBN Number: 978-93-91115-19-7

புகர்நிறங் கொண்ட களறட் டானான்'

என்பது பொன்முடியாரி;ன் பாடல். பறம் 312ஆம் பாடலில் தாயின் வீரவுணர்வைப் புலப்படுத்திய புலவர் இப்பாடலில் மகனின் வீரத்iதைப் புலப்படுத்தியுள்ளார். குதிரை மறம் துறையில் இவர் பாடிய மற்றொரு பாடலில், சீறூர் மன்னனின் குதிரைக்கும் பெருவேந்தனின் குதிரைக்கும் இடையே காணப்பட்ட வேறுபாட்டை புலப்படுத்துகிறார் புலவர் பெருமாட்டியார் சீறூர் மன்னனின் குதிரை, உழுந்தின் சக்கையை உண்கிறது. ஓய்ந்த நடையுடையது. ஆயின் போருக்குச் சென்றால் கடலைக் கிழித்துக் கொண்டு செல்லும் தோணியைப் போன்று மாற்றார் படையைக் கிழத்துக் கொண்டு செல்கிறது. பேருர் மன்னனின் புரவியோ,

'அணங்குடை முருகன் கோட்டத்துக்
கலந்தொடா மகளிர் னிகழ்ந்துநின் றதுவே'

என்று ஒதுங்கி நின்றதை உவமித்துக் காட்டுகிறார். இவ்வடிகள் மூலம் மாதவிலக்கு நேரங்களில் மகளிர் வீட்டில் பாத்திரங்களைத் தொடா நிலைமையையும், முருகன் கோட்டத்திற்குச் சொல்லாமையையும் தெரிவிக்கிறார். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்து இன்று வரை தொடரும் சமுதாயப் பழக்கத்தை இவ்வடிகள் உணர்த்துகின்றன.

 ISBN Number: 978-93-91115-19-7

புறநானூற்றில் மிகச் சிறந்த மூன்று பாடல்களைப் பாடிய பெருமாட்டியார், அதியமான் நெடுமாஞ்சியன் கொடைத் திறத்ததில் தோய்ந்தவர், படை வீரத்தில் மகிழ்ந்தவர். அதியமானைப் பற்றி தகடூர் யாத்திரை என்னும் நூலில் இவர் பாடிய சில பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று பாடிய சில பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று பழங்காலக் கோட்டைகளின் அமைப்பையும், அக்கோட்டை மதிலில் இருந்த பல்வகைப் படைப் பொறிகளையும் விளக்குகிறது. ஈன்று புறந்தருதல் என்று தொடங்கும் பாடலின் மூலம் (புறம் 312) இறவாப் புகழ் பெற்ற பெருமாட்டியார் இவர் என்று சுருங்கக் கூறலாம். இவருடைய பாடல் ஒவ்வொருவருக்கும் என்றொன்றும் கடமையை உணர்த்திக் கொண்டே இருக்கும். பிறந்து வளர்ந்து வாழ்கின்ற நிலையில் மட்டும் தமிழர்கள் வீரத்தைப் போற்றாது தசைப் பிண்டத்திடத்தும் வீரம் காட்டியதைப் பெண்பாற் புலவர்களின் புறநானூற்றுப் பாடலில் நாம் அறிவோம்.

சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் முப்பது பேர் புறநானூற்றில் மட்டும் இடம்பெறுவர். பதினைவர் இவர்களுள் மிகுந்த சிறப்பிற்குரியவரும், மூவேந்தர்களாலும், குறுநில மன்னர்களாலும் போற்றப்பட்டவர் ஔவையார். புறநானூற்றில் முப்பத்து

 ISBN Number: 978-93-91115-19-7

மூன்று பாடல்களைப் பாடிய இவர் அதியமானஞ்சியின் அவைக்களப் புலவராய் விளங்கினார். மேலும் அள்ளூர் நன்முள்ளையார், நச்செள்ளையார், காவற்பெண்டு, குறமகள் இளவெயினி போன்ற பல இனத்தைச் சேர்ந்த பெண்களும், கவிதை புனையும் ஆற்றல் பெற்றவர்களாக விளங்கினர். வீரமும் விவேகமும் நிறைந்தவர்களாக அரசியல் வாழ்க்கையிலும் தனிமனித வாழ்க்கையிலும் ஒரு நெறிமுறையை உருவாக்கிய பெருமைக்குரியவர்கள். ஓர் இலக்கியம் சிறப்புடைய படைப்பாளியின் அறிவுத்திறனும், அனுபவமும் கலை உணர்வும், அடிப்படையாக அமைகின்றன.

ஆழ்ந்த கருத்துகளையும் ஆற்றல்மிகு உணர்ச்சிகளையும், உவமை, உருவகம், அணிநலம் இலக்கணக் கூறுகளையும் உள்ளடக்கிய இலக்கியங்கள் என்றும் நிலைபெற்றுத் திகழும் பெண்பாற் புலவர்களி;ன் பாடல்கள் சொல்நயமும், பொருள்நயமும், நிறைந்து உவமை, உருவகம், அணிநலம் அமையப் பெற்று விளங்குவது சங்ககாலப் பெண்பாற் புலவர்கள் புலமைத்திறம் மிகுந்தவர்களாக விளங்கியதும், நேரடியாகக் கூறினால் காரியம் சிதறும் என்பதால் லஞ்சப்புகழ்ச்சியாகக் கூறி காரியங்களை நிறைவேற்றிப் புலவர்களின் புலமைத்திறம் போற்றுதற்குரியது.

 ISBN Number: 978-93-91115-19-7

முடிவுரை

இலக்கியங்கள் மனித வாழ்க்கையின் பிரதிபலிப்பு, இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள செய்திகள் அக்கால மக்களின் வாழ்க்கை முறைகளை விளக்குகின்றன. சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பாடல் வழி அக்கால மக்கள் வீரமும் விவேகமும் நிறைந்தவர்களாக விளங்கினர். நாட்டில் ஒற்றுமை நிலவும், போரும் இன்றி பகையும் இன்றி மக்கள் ஒற்றுமையுடன் வாழவும் அரும்பாடுபட்டுள்ளனர். அமைதியான அழகான சமுதாயம் என்பது அவர்களின் எண்ணமாக இருந்தது. தெய்வ நம்பிக்கையும் மிக்கவர்களாக விளங்கினர். கணவனை இழந்த பெண்கள் கைம்மை நோன்பை மேற்கொண்டனர்.போர் புரிய உடல் வலிமையும், மன வலிமையும், கூர்மையான புத்தியும் அவசியமாகச் சங்க காலத்தில் கருதப்பட்டது. போர் இலக்கியமாகக் கருதப்படும் புறநானூறு சமுதாய நல்லிணக்கத்திற்கு அறநெறி அவசியம் என்று கூறுகின்றது. எனவே வயிற்றுச் சோற்றுக்காக வாழ்கின்ற அற்ப வாழ்க்கையை அக்கால மக்கள் விரும்பவில்லை. மாறாகப் புகழ் தரும் வீர வாழ்க்கை சிறந்த வாழ்க்கை என்பது தெளிவாகிறது. புலவர்கள் கூட வீரமிக்க எழுச்சி உடையவராக இருந்தமையை நாம் அறியலாம்.

ISBN Number: 978-93-91115-19-7

துணை நூற்பட்டியல்

[1] தமிழறிஞர் சாமி.சிதம்பரனார். *சங்க இலக்கியமும் பண்டையத் தமிழரும்.* மாசறு பதிப்பகம், திருவல்லிக்கேணி - 600005.

[2] பி.டி.சீனிவாச அய்யங்கார். *தமிழர் வரலாறு தமிழாக்கமும் திறனாய்வும்.* ராமையா பதிப்பகம், சென்னை - 600014.

[3] முனைவர் தேவிரா (இராசேந்திரன்). *தமிழ் இலக்கியத் தகவல் களஞ்சியம்.* ஸ்ரீ நந்தினிப் பதிப்பகம், சென்னை - 600101.

[4] இரா.குமார். *புறநானூறு மூலமும் உரையும்.* நல்நிலம் பதிப்பகம், சென்னை - 600017.

[5] முனைவர். பாக்யமேரி. *வகைமை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு.* பூவேந்தன் பதிப்பகம், சென்னை - 600004.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன்4.0வின்https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.

 ISBN Number: 978-93-91115-19-7